# வருடாந்த அறிக்கை

# 2016

இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்

## தொலைநோக்கு

பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் கட்டளைப்படுத்தல் மற்றும் தரத்தை மேம்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக தேசத்தின் வாழ்க்கைத் தரத்தை வளமூட்டுவதற்காக தலைமைத்துவத்தை வழங்கி இலங்கையின் முதன்மையான தேசியத் தாபனமாக விளங்குதல்.




## குறிக்கோள்

நிறுவனத்தின் ஊழியர்களின் பணி வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்தும் அதேவேளை, பின்வருவனவற்றைச் சாதிப்பதற்காக, தேசியப் பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் கட்டளைப்படுத்தலையும், அளவீட்டையும், தர உறுதிப்படுத்தலையும் மற்றும் தொடர்பான செயற்பாடுகளையும் பொறுப்பேற்றல், மேம்படுத்தல், மற்றும் வசதிப்படுத்தல்.

- உற்பத்தித்திறனை அதிகரித்தலும், வளங்களின் பயன்படுத்தலை அதிகபட்சமாக்குதலும்;
- உள்ளக மற்றும் வெளியார் வர்த்தகத்தை வசதிப்படுத்தல்;
- சமூக-பொருளாதார அபிவிருத்தியைச் சாதித்தல்;
- உற்பத்திகளினதும், சேவைகளினதும் சர்வதேசப் போட்டித்தன்மையை உயர்த்துதல்;
- பாவனையாளர்களின் அக்கறையைப் பாதுகாத்தல்.

# இ.க.நி.
# தாபனரீதியிலான கட்டமைப்பு



**சேரல்: கௌரவ விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் தொழில்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு**

கௌரவ ஐயா,

1971இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)ஆம் பிரிவின் பிரகாரம், 2016.01.01 முதல் 2016.12.31 வரையிலான காலத்தை உள்ளடக்கும் இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையைச் சபை உறுப்பினர்களின் சார்பில் சமர்ப்பிப்பதில் நான் கௌரவம் அடைகின்றேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(கையொப்பமிடப்பட்டுள்ளது)
எச் எம் பி சி ஹேரத்
பதில் தலைவர்
இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்
2018.09.24

# பொருளடக்கம்


தலைவரிடமிருந்து செய்தி
பணிப்பாளர் நாயகத்திடமிருந்து செய்தி
கூட்டண்மைத் தகவல்
சபையின் உறுப்பினர்கள் / **06**
சிரேஷ்ட முகாமைத்துவக் குழாம் / **07**
அறிமுகம் / **08**
2016ஆம் ஆண்டுக்கான சிறப்பம்சங்கள் / **09**
வருமானத்தைத் தோற்றுவித்தல் செயற்பாடுகள் / **11**

பிரிவுசார் செயற்பாடுகள் / **12**
விஞ்ஞானக் கட்டளைகள் பிரிவு / **12**
எந்திரவியல் கட்டளைகள் பிரிவு / **15**
தர உறுதிப்படுத்தல் பிரிவு / **17** / **18**
முறைமைச் சான்றளிப்புப் பிரிவு / **19**
பயிற்சிப் பிரிவு / **23**
சந்தைப்படுத்தல், மேம்படுத்தல் பிரிவு / **24**
ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு / **26**
எடையளவியல் பிரிவு / **35**
ஆவணப்படுத்தல், தகவல் பிரிவு / **36**
உற்பத்தி சான்றளிப்பு பிரிவு / **37**
நிருவாகப் பிரிவு / **38**
தகவல் தொழில்நுட்ப அலகு / **39**
நிதிப் பிரிவு / **40**
உள்ளகக் கணக்காய்வு / **40**
சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளைகளின் பட்டியல் / **41**
வெளிநாட்டுப் பயிற்சி / **57**
உள்நாட்டுப் பயிற்சி / **59**
வெளிநாட்டுத் தணிக்கை / **61**
பணியாளரின் செய்தி / **64**
துறைசார் குழுக்களின் அடக்கம் / **66**
2016.12.31இல் உள்ளவாறு நிதிசார் நிலையின் கூற்று / **73**
2016 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
விரிவான வருமானத்தின் கூற்று / **74**
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை / **109**
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்
அறிக்கை மீதான தலைவரின் கருத்துரைகள /**129**

## விலாசம்




இல. 17 விக்டோரியா பிளேஸ்
எல்விற்றிகல மாவத்தை
கொழும்பு 8

| | |
|---|---|
| தொலைபேசி: | 2671567-72 |
| | 2697039, 2674618 |
| ∴பக்ஸ்: | 2687523, 2671579, 2672617, 2672616 |
| தொலைநகல்: | slsi@slsi.slt.lk |
| இணையதளம்: | http:/www.slsi.lk |

| | |
|---|---|
| **தலைவர்** | 2671573 |
| **பணிப்பாளர் நாயகம்** | 2671574 |
| **பிரதிப் பணிப்பாளர் நாயகம்** | 2671575 |
| | 2695029 |

| | |
|---|---|
| விஞ்ஞானக் கட்டளைகள் பிரிவு | 2672614 |
| எந்திரவியல் கட்டளைகள் பிரிவு | 2672612 |
| தர உறுதிப்படுத்தல் பிரிவு | 2671578 |
| ஆய்வுகூட சேவைகள் பிரிவு | 2694985 |
| எடையளவியல் பிரிவு | 2674619 |
| முறைமைச் சான்றளிப்புப் பிரிவு | 2672613 |
| ஆவணப்படுத்தல், தகவல் பிரிவு | 2672615 |
| பயிற்சிப் பிரிவு | 2685546 |
| சந்தைப்படுத்தல், மேம்படுத்தல் பிரிவு | 2694981 |
| நிருவாகப் பிரிவு | 2671576 |
| நிதிப் பிரிவு | 2671577 |
| உற்பத்தி சான்றளிப்புப் பிரிவு | 5626204 |



# தலைவரிடமிருந்து செய்தி

2016 வருடாந்த அறிக்கைக்கு இச் செய்தியை விடுப்பது எனக்கு மகிழ்ச்சியாகும்.

பிறவற்றுள், தேசிய மற்றும் சர்வதேச அடிப்படையின் மீது கட்டளைகளைத் தயாரிப்பதற்கும் அத்துடன் கைத்தொழிலிலும், வர்த்தகத்திலும் கட்டளைப்படுத்தலையும், தரக் கட்டுப்பாட்டையும் மேம்படுத்துவதற்குமான ஆணையுடன் இ.க.நி. உடமையாக்கப்பட்டுள்ளதுடன், இன்று வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அதன் பிரசன்னத்தை அது விரிவுபடுத்தியுள்ளது.

அவ்வாறாக மிகவும் பலமான செயற்றிறனை உண்மையாக்கும் குறிக்கோளுடன் பொருத்தமானவாறு இந்த மாற்றமடையும் நேரங்களுக்கு விரைவாகப் பதிலிறுப்பதற்கான நோக்கத்தினை நாம் கொண்டிருப்பதுடன், இந்தச் செயற்பாடுகளின் மார்க்கத்தின் போது எமது கூட்டாண்மைப் பிரசன்னத்தையும் அதிகரிக்கின்றோம்.

இ.க.நிறுவனத்தை வழிகாட்டுவதிலும், அத்துடன் இ.க.நி.இனால் நடத்தப்படும் சகல செயற்பாடுகளின் வெற்றியை உறுதிப்படுத்துவதிலும் ஊக்கியிலான வகிபங்கொன்றை ஆற்றிய சபையின் சகல உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுவதற்கு இந்த வாய்ப்பினை எடுத்துக்கொள்கிறேன்.

இறுதியாக, நிலைத்திருக்கத்தக்க எதிர்காலமொன்றை நோக்கி பிரயாணத்தை மேற்கொள்வதில் இ.க.நி.இன் முயற்சிகளில் சகல அவர்களது ஆதரவுக்கும், ஒத்துழைப்புக்கும் பணிப்பாளர் நாயகத்திற்கும், பணியாளருக்கும் நான் நன்றி கூறுகின்றேன்.

பிரதீப் குணவர்தன
**தலைவர்**

## பணிப்பாளர் நாயகத்திடமிருந்து செய்தி

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் (இ.க.நி) 2016 வருடாந்த அறிக்கைக்கு இச் செய்தியை அனுப்புவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சர்வதேச தரப்படுத்தலுக்கான தாபனத்தின் உறுப்பாக இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தும் இலங்கையின் தேசிய தரப்படுத்தல் உறுப்பே இலங்கை கட்டளைகள் நிறுவனம் (இ.க.நி.) ஆகும்.

ISOஇன் உறுப்பாக பரஸ்பர அடிப்படை மீது தேசிய கட்டளைகள் உறுப்புக்கள் பரிமாறுவதற்கும், அவற்றின் தேசிய கட்டளைகளைப் பிரதி எடுப்பதற்கும், தேசிய மட்டத்தில் சமூகத்திற்கான கட்டளைகள், தொழில்நுட்ப ஒழுங்குவிதிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலான கட்டளைகள் ஆகியன மீதான தகவலைப் பரப்புவதற்கும் பொறுப்பானதாகும்.

2016ஆம் ஆண்டின் போது, அதன் முதன்மையான நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையைக் கொண்ட கட்டளைகளை இ.க.நி. விருத்தி செய்ததுடன், உற்பத்தி சான்றளிப்பு திட்டம் (SLS திட்டம்) மற்றும் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் வேறு முறைமைகள் சான்றளிப்பு செயற்பாடுகள் போன்ற நன்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றளிப்புத் திட்டங்கள் ஊடாக அத்தகைய கட்டளைகளை அமுலாக்கக்கூடியதாக இருந்தது. அது குறிப்பிடத்தக்க மேம்படுத்தல்களை காட்டியுள்ளதுடன் இ.க.நி.இன் வருமானத்தைத் தோற்றுவிக்கும் நடைமுறைக்கு அதிகளவைப் பங்களித்துள்ளது. மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது பங்காளர்களுக்கு ஒரு சிறந்த சேவையை வழங்குவதற்காக புதிய அதி நவீனமான ஆய்வுகூடச் சாதனங்களுடன் அதன் ஆய்வுகூடத்தை இ.க.நி. அமைக்கக்கூடியதாக இருந்தது.

2016ஆம் ஆண்டின் போது, அதன் வரலாற்றில் ஆகக்கூடுதலான வருமானத்தைத் தோற்றுவித்த அதேவேளை, சுயநிதிப்படுத்தல் நிலையை இ.க.நி. பராமரிக்கக்கூடியதாகவும் இருந்தது.

இலங்கையில் இடம்பெறுகின்ற தற்போதைய அபிவிருத்திகளைக் கரிசனைக்கெடுக்கையில், தேசிய தரக் கொள்கையை மீளாய்வதற்கான அவசியம் அங்கீகரிக்கப்பட்டதுடன், தேசிய, மாகாண மற்றும் உள்நாட்டு மட்டத்திலான பங்காளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டிலுள்ள தொடர்பான பங்காளர்களுடனான விஸ்தாரமான உசாவுகையின் பின்னர், தேசிய தரக் கொள்கை மீளவாயப்பட்டது. 2016ஆம் ஆண்டின் போது, அதன் அமுலாக்கத்திற்காக மந்திரிகளின் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது.

அதிநவீனமான ஆய்வுகூடமொன்றின் நிருமாணமானது மிகவும் முன்னுரிமைத் துறைகளில் ஒன்றாகக் கருதப்படுவதுடன், நிருமாணச் செயற்பாடுகளுக்காக மந்திரிகளின் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறக்கூடியதாகவும் இருந்தது. இதற்காக 2016ஆம் ஆண்டின் போது, UDAஇலிருந்த காணியின் பௌதீக கையகப்படுத்தலையும் பெறக்கூடியதாகவிருந்தது.

இறுதியாக, தாபனரீதியிலான நோக்கங்களைச் சாதிப்பதற்காக, நீடிக்கப்பட்ட ஆதரவுக்கும், ஒத்துழைப்புக்கும் தலைவருக்கும், ஆளுனர் சபை உறுப்பினர்களுக்கும், முகாமைத்துவக் குழாமுக்கும் மற்றும் சகல ஊழியர்களுக்கும் நான் நன்றி கூறுகின்றேன்.

(கையொப்பமிடப்பட்டுள்ளது)
ரி.ஜி.காமினி தர்மவர்தன
பணிப்பாளர் நாயகம்/CEO

# கூட்டாண்மைத் தகவல்

| | |
|---|---|
| **நிறுவனத்தின் பெயர்** | இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் |
| **நியதியாக்க நிலை** | 1984இன் அதிகாரச்சட்டம் இல.06இனால் நீக்கப்பட்டு, பதிலீடு செய்யப்படும் வரை இலங்கைக் கட்டளைகள் பணியகம் என்ற பெயரின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதியாக்க உறுப்பு |
| **பிரதான அலுவலகம்** | இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விற்றிகல மாவத்தை கொழும்பு 08 |
| **தொலைபேசி** | 011-2671567-72, 2697039, 2674618 |
| **இணையதளம்** | http:/www.slsi.lk |
| **ஈ-மெயில்** | slsi@slsi.slt.lk |
| **தொலைநகல்** | 011-2687523, 2671579, 2672617, 2672616 |

**31.12.2016இல் உள்ளவாறு பணிப்பாளர் சபை**

| | |
|---|---|
| திரு.பி.என்.எஸ்.கே.குணவர்தன | தலைவர் |
| திரு.ரி.ஜி.ஜி.தர்மவர்தன | உப தலைவர்/பணிப்பாளர் நாயகம்/பி.நி.அ. |
| பேராசிரியர் சி.பி.தீபால் மத்தியூ | சபை உறுப்பினர் |
| கலாநிதி பி.தல்கஸ்வத்த | சபை உறுப்பினர் |
| திரு.எம்.எ.அலாம் | சபை உறுப்பினர் |
| திருமதி எச்.களுதந்திரி | சபை உறுப்பினர் |
| பேராசிரியர் சிரிமலி பெர்னாண்டோ | சபை உறுப்பினர் |
| திரு.மதி எஸ்.எஸ்.திக்கும்புர | சபை உறுப்பினர் |
| எந்திரி. கே.எஸ்.எம்.சில்வா | சபை உறுப்பினர் |
| திரு.எ.கே.டி.டி.டி.அரந்தர | சபை உறுப்பினர் |
| திரு.ருவான் எதிரிசிங்க | சபை உறுப்பினர் |

| | |
|---|---|
| **31.12.2016இல் உள்ளவாறு ஊழியர்களின் மொத்த எண்.** | 330 |
| **கணக்காய்வாளர்கள்** | கணக்காய்வாளர் தலைமை அதிபதி,கணக்காய்வாளர்தலைமை அதிபதியின் திணைக்களம், இல.306/72 பொல்துவ வீதி, பத்தரமுல்ல |
| **வங்கியாளர்கள்** | இலங்கை வங்கி - அதியுயர் தர வங்கி |

## சபையின் உறுப்பினர்கள் - இ.க.நி

**திரு.பி.என்.எஸ்.கே. குணவர்தன**
**தலைவர்**
B.Sc (Eng.)
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (a) மற்றும் 7 (1)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**கலாநிதி லலித் நிமால் செனவீர**
**10.04.2016 வரை பணிப்பாளர் நாயகம்/ உப தலைவர்**
**12.04.2016 முதல் 11.07.2016 வரை ஒப்பந்த அடிப்படை மீது பணிப்பாளர் நாயகம்**
Ph.D (Mgt.), MBA (Col), B.Sc. (Hons.), DIP QC (Netherlands), FCQI-CQP (UK), FRSS (UK), MIMgt (UK), FASQ (USA), Lead QMS/EMS Auditor IRCA, (UK)
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6, 6.1 (i) மற்றும் 7 (2)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு.ரீ.ஜீ.ஜீ.தர்மவர்தன**
**12.04.2016 முதல் 06.10.2016 வரை பதில் பணிப்பாளர் நாயகம்**
**07.10.2016 முதல் பணிப்பாளர் நாயகம்**
B.Sc (Hons), M.Sc., முகாமைத்துவத்தில் பட்டத்திற்கு பிந்திய டிப்ளோமா, சிரேஷ்ட உறுப்பினர் A.S.Q. பதிவுசெய்யப்பட்ட QMS தலைமைத் தணிக்கையாளர், IRCA ஐ.இ., EMS தணிக்கையாளர், NQA பரீட்சகர், OHSAS தணிக்கையாளர்
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (i) மற்றும் 7 (2)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**பேராசிரியர் சிரிமலி பெர்னாண்டோ**
**22.01.2016 முதல் சபை உறுப்பினர்**
MBBS (Col), Dip Med Micro (Col), MSC (Lond), FNASSL
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (c)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு.எ.கே.டி.டி.டி.அரந்தர**
**15.02.2016 முதல் 31.12.2016 வரை சபை உறுப்பினர்**
Bachelor of Law.(Col.)., Attorney-at-Law
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (e)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**பேராசிரியர் சி.பி.திபால் மத்தியூ**
**04.01.2016 முதல் சபை உறுப்பினர்**
Ph.D (Bio Cem) (Col)., M.Sc.(Col)., B.Sc (Sp)., Diploma (Osaka)
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (g)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**எந்திரி. கே.எஸ்.எம்.சில்வா**
**சபை உறுப்பினர்**
B.Sc. Eng. (Hons), M.Eng. (Structural), C.Eng., MIE (SL), MSSE (SL), DIPM (UK) Chartered Eng., GreenAssociated Professional -SLGBC
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (f)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**கலாநிதி திலான் ஹேவகே**
**சபை உறுப்பினர் - 15.09.2016 வரை**
Ph.D (Mathematical Econ.) (USA), M.Sc. (Mathematical Statistics), (USA), B.Sc.
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (a)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**கலாநிதி பிரியதர்ஷினி தல்கஸ்வத்த**
**சபை உறுப்பினர் - 15.09.2016 முதல்**
Ph.D, M.Sc. (Mgt)., M.Sc. (Bio), B.Sc
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (a)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு.ருவான் எதிரிசிங்க**
**சபை உறுப்பினர் - 11.02.2016 முதல்**
B.Sc (Eng), PG Diploma in Construction Mgt.
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (b)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திருமதி ஹிரன்ஸா களுதந்திரி**
**சபை உறுப்பினர்**
Master of Economics (Aus), B.A (Sp.), SLAS
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (b)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**செல்வி சுரனி சந்திகா திக்கும்புர**
**சபை உறுப்பினர்**
Attorney-at-Law
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (a)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு.எம்எ.அலாம்**
**சபை உறுப்பினர்**
SLAS - Special Grade
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (d)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு.ரொஹான் ஜயதிலக்க**
**சபை உறுப்பினர் - 15.09.2016 வரை**
Masters in International Development Studies, (Japan) M.Sc. (Agr.), B.Sc. (Agr.)
1984ஆம் இ.க.நி. சட்டம் இல.6இன் பிரிவு 6.1 (e)இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## முகாமைத்துவக் குழாம்

**திரு.பி.என்.எஸ்.கே. குணவர்தன**
தலைவர்
B.Sc (Eng.)

**கலாநிதி லலித் நிமால் செனவீர**
10.04.2016 வரை பணிப்பாளர் நாயகம்/உப தலைவர்
12.04.2016 முதல் 11.07.2016 வரை ஒப்பந்த அடிப்படை மீது பணிப்பாளர் நாயகம்
Ph.D (Mgt.), MBA (Col), B.Sc. (Hons.), DIP QC (Netherlands), FCQI-CQP (UK), FRSS (UK), MIMgt (UK), FASQ (USA), Lead QMS/EMS Audito IRCA, (UK)

**திரு.ரி.ஜீ.ஜீ.தர்மவர்தன**
12.07.2016 முதல் 06.10.2016 வரை பதில் பணிப்பாளர் நாயகம்
07.10.2016 முதல் பணிப்பாளர் நாயகம்
B.Sc (Hons), M.Sc., முகாமைத்துவத்தில் பட்டத்திற்கு பிந்திய டிப்ளோமா, சிரேஷ்ட உறுப்பினர் A.S.Q. பதிவுசெய்யப்பட்ட QMS தலைமை தணிக்கையாளர், IRCAஐ.இ., EMS தணிக்கையாளர், NQA பரீட்சகர், OHSASதணிக்கையாளர்

**திருமதி டபிள்யு.என்.என்.சதரசிங்க**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
B.Sc., M.Sc, ISO 14000 EMSதணிக்கையாளர், OHSAS 18001தணிக்கையாளர், NQA பரிசோதகர்

**திருமதி எஸ்.கனேவத்த**
14.12.2016 வரை பணிப்பாளர் (ஆவணப்படுத்தல், தகவல்)
15.12.04 முதல் பிரதிப் பணிப்பாளர் நாயகம்
M.Sc., B.Sc. (Hons.), C.Chem., M.I.Chem.C. (ISO 17025 Assessor, QMS, EMS Auditor)

**திரு.எம்.சீ.பெர்னாண்டோ**
பணிப்பாளர் (எந்திரவியல்) – 05.02.2016 வரை
PG. Dip. In Mgt., B.Sc. (விசேட), FIP (SL)

**திரு.எம்.எஸ்.எஸ்.பெர்னாண்டோ**
பணிப்பாளர் (எந்திரவியல் கட்டளைகள்)
Director (Engineering Standards) – 07.10.2016 முதல்
B.Sc (Eng.),MBA, AMIE(SL), QMS Lead Auditor (IRCA-UK)

**திருமதி சமந்தி நாரங்கொட**
பணிப்பாளர் (முறைமைச் சான்றளிப்பு)
MBA (Sri J-PIM) , P G Dip in Mgt, B.Eng., MIET (UK),QMS/EMS/OHSAS Auditor, NQA Examiner

**திரு.கே.எம்.சீ.பீ.சேனாரத்ன**
பணிப்பாளர் (நிருவாகம்)
MDefS, B Sc (Mgt), EDBA, MISMM

**திரு.பீ.டி.ஆரியரத்ன**
பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்)
B.Sc. (Special), M I P (SL)

**திரு.கே.ஹெந்தவிதாரன**
பணிப்பாளர் (தர உறுதிப்படுத்தல்) – 11.02.2016 வரை
B.Sc (Hons), M.Sc (உணவு விஞ்ஞானம், தொழில்நுட்பம்) Professional Member of IFT (Illinois) Dip M, MCIM

**திருமதி டி.என்.டி.யாபா**
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (தர உறுதிப்படுத்தல்)
12.02.2016 முதல் 06.10.2016 வரை பணிப்பாளரின் (தர உறுதிப்படுத்தல்) கடமைகளைக் கவனிக்கின்றார்
B.Sc. (Sp), Hons., M.Sc (Food Sc. & Tech.)
ISO22000, HACCP Auditor

**திருமதி எம்.பீ.டி.நீலகாந்தி**
பணிப்பாளர் (தர உறுதிப்படுத்தல்) – 07.10.2016 முதல்
MBA, M.Sc./B.Sc.(Special) Hons.
QMS/EMS/EaMS/OHSAS Auditor, Six Sigma (Green Belt), ASQ member

**திரு.எ.ஏகநாயக்க**
பணிப்பாளர் (பயிற்சி)
B.Sc. (Sp), M.Sc.-Physics, ISO 9000 Lead Auditor, NQA Examiner

**திரு.எல்.பீ.எல்.சித்திரகே**
பணிப்பாளர் (ஆய்வுகூட சேவைகள்)
B.Sc (sp), M.Sc. C Phys, MIP (SL)

**திருமதி எஸ்.உடகர**
பணிப்பாளர் (எடையளவியல்)
B.Sc (Sp), M.Sc (Physics of Materials) M I P (SL), ISO 17025 Technical Assessor, ISO 9001 & QMS Auditor

**திருமதி எ.சீ.தென்னக்கோன்**
பதில் பணிப்பாளர் (ஆவணப்படுத்தல் மற்றும் தகவல்)
19.12.2016 முதல்
B. Sc (Special)

**திருமதி எம்.ஐ.எஸ்.ஜயசேகர**
பணிப்பாளர் (தரப்படுத்தல்)
B.Sc. Special (Hons), M.Sc (Food Sc. & Tech)
Auditor: ISO 9001, QMS, ISO 22000 FSMS, HACCP, GMP

**திருமதி எச்.ஜீ.எஸ்.சூரியாஆரச்சி**
பணிப்பாளர் (உற்பத்தி சான்றளிப்பு)
B.Sc (Special), M.Sc. (Microbiology), ISO 22000, FSMS Auditor, HACCP AudiKjy;r, ISO14000 EMS Auditor, ISO17025 Lab Assessor

**திருமதி டி.பீ.எம்.ராஜசிங்க**
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (நிதி)
பணிப்பாளரின் (நிதி) கடமைகளைக் கவனிக்கின்றார்
Licentiate Certificate
The Institute of Chartered Accounts of Sri Lanka, APFA

**செல்வி ஆர்.ரூபசிங்க**
பணிப்பாளர் (நிதி) – 16.05.2016 முதல்
A CA (SL), AC MA – UK

**திரு.டபிள்யு.ஜீ.எம்.எஸ்.பெரேரா**
சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு அலகு)
Licenciate Certificate
இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம்

# அறிமுகம்

1964இன் 38ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் பணியகச் சட்டத்தின் கீழ், இலங்கைக் கட்டளைகள் பணியகமாக இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் (இ.க.நி) தாபிக்கப்பட்டது. 1984இன் 6ஆம் இலக்கச் சட்டத்தினால் 1984இல் இச் சட்டம் நீக்கப்பட்டு, இலங்கைக் கட்டளைகள் நிறுவனமாக தாபனத்தை மீள்பெயரிட்டதுடன், இலங்கையில் தரப்படுத்தலையும், தர முகாமைத்துவச் செயற்பாடுகளையும் மேம்படுத்தும் ஆரம்பநிலைப் பொறுப்புடன் அதிகாரமளிக்கப்பட்டது.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், பின்வரும் பிரதான நோக்கங்கள் நிறுவனத்திற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளன:

அ. தேசிய மற்றும் சர்வதேச அடிப்படையில் கட்டளைகளை வகுத்தமைத்தல்.

ஆ. கட்டளைப்படுத்தலின் மேம்படுத்தல் மற்றும் கைத்தொழிலிலும், வர்த்தகத்திலும் தரத்தைக் கட்டுப்படுத்தல்.

இ. கட்டளைப்படுத்தலினதும், மற்றும் தரக் கட்டுப்பாட்டினதும் நடைமுறையை நீடிப்பதற்காக ஆய்வுகூடங்களையும், நூலகத்தையும் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட வசதிகளையும் தாபித்தல்.

ஈ. உற்பத்திகளையும், பண்டங்களையும் மற்றும் பொருட்களையும் அத்துடன் உள்ளூரில் தயாரிக்கப்படும் உற்பத்திகளினதும், பண்டங்களினதும் மற்றும் பொருட்களினதும் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் செய்முறைகளையும், வழக்கங்களையும் பரீட்சித்தலும், சோதித்தலும்.

உ. அவசியப்படும் நியமங்களுக்கு இணங்கத்தக்கதாக கருவிகளினதும் மற்றும் வேறு உபகரணங்களினதும் சோதித்தலுக்கும் மதிப்பாராய்தலுக்கும் ஒழுங்குகளைச் செய்தல் அல்லது வசதிகளை வழங்குதல்.

ஊ. கட்டளைப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டுச் செயற்பாடு ஆகியவற்றில் ஆராய்ச்சியைப் பொறுப்பேற்பதற்காக வசதிகளை வழங்குதலும், ஒழுங்கு செய்தலும்.

எ. சான்றளிப்பு குறிகள் திட்டமொன்றைச் செயற்படுத்தல்.

ஏ. பண்டங்களினதும், பொருட்களினதும் மற்றும் வேறு உற்பத்திகளினதும் தரத்தை சான்றுப்படுத்தல்.

ஐ. கட்டளைப்படுத்தலையும் மற்றும் தரக் கட்டுப்பாட்டையும் மேம்படுத்தல்.

ஒ. ஏதாவது நபருடன், சங்கத்துடன் அல்லது நிறுவனத்துக்கு ஒத்த இலங்கைக்கு வெளியேயுள்ள தாபனத்துடன் ஒத்துழைப்பை வழங்குதல்.

ஓ. பண்டங்களினதும், பொருட்களினதும் உற்பத்திகளினதும் மேம்படுத்தலுக்கு உற்பத்தியாளர்களினதும், பாவனையாளர்களினதும் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.

## மனித மூலவளங்கள்

2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், பணியாளரின் மொத்த எண்ணிக்கை 340 என்பதுடன், ஆண்டின் இறுதியில் 330 ஆகும்.

பணியாளர்களது அறிவை வளமாக்குமுகமாக, மனித வள அபிவிருத்தித் துறையில் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக பயிற்சியை நிறுவனம் வழங்கியுள்ளது. இதனால் தமது பணிகளை மேற்கொள்வதில் அவர்களால் பயனுறுதிவாய்ந்ததாக பங்களிக்க முடியும். மேலும், 2016ஆம் ஆண்டின் போது, அவசியமான தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சியை வழங்குவதன் மூலம், ஊழியர்களின் நிறைவேற்றுப் பணியாளர் வகுதியின் தொழில்நுட்பத் தகுதியை விருத்திசெய்வதற்கும், உயர்த்துவதற்கும் நிறுவனம் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது.

2016ஆம் ஆண்டின் போது, கைத்தொழிலுக்கும், வர்த்தகத்திற்கும் அதன் சேவைகளைச் செயற்றிறனாகவும், பயனுறுதிவாய்ந்ததாகவும் வழங்குவதன் மூலமும், எட்டாவது தொடர்ச்சியான ஆண்டுக்கு இலாபகரமான தாபனமொன்றாக நிறுவனத்தை செய்யும் அதேவேளை, அதன் சுயநிறைவு நிலையை பராமரிப்பதன் மூலமும் வரலாற்றில் ஆகக்கூடுதலான வருமானத்தை தோற்றுவித்த அதேவேளை, சுயநிதிப்படுத்தல் நிலையைப் பராமரிப்பதற்கு இ.க.நி.இனால் இயலக்கூடியதாக இருந்தது. 2016ஆம் ஆண்டின் போது தொழிற்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 706.304 மில்லியனாக இருந்த வேளை, 2015ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 614.055 மில்லியனாகும். இது ரூபா 92.249 மில்லியன் கொண்ட அதிகரிப்பொன்றை விளைவித்துள்ளது. இதன் பிரகாரம் முழுமையான இலாபம் ரூபா 167.274 மில்லியனாகும். மேலும், இச் சூழ்நிலையானது 2015ஆம் ஆண்டிலிருந்து 2016 வரை ஊழியர் ஒருவரின் வருமானத்தில் ரூபா 1.8 மில்லியனிலிருந்து ரூபா 2.1 மில்லியன் வரை அதிகரிப்பொன்றுக்கு இட்டுச்சென்றுள்ளதுடன், இது அண்ணளவாக 17% அதிகரிப்பாகும்.

# 2016 ஆம் ஆண்டின் சிறப்பம்சங்கள்

- ஒரு தொகையிலான கட்டளைகள் மேம்படுத்தல் விழிப்பியல் நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வரும் கட்டளைகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி கைத்தொழிலுக்கும் மற்றும் வேறு அக்கறையிலான தரப்புகளுக்கும் அறிவூட்டுவதற்காக நடத்தப்பட்டன:

| | |
|---|---|
| SLS 1458: 2015 | > 50V வோல்டேஜினால் பொதுவான ஒளியேற்றல் சேவைகளுக்கு சுய ஞாலப்பால LEDவிளக்குகள் (பாகம் 1 மற்றும் பாகம் 2) |
| SLS 1493: 2014 | தும்புக் கைத்தொழிலில் நார் பரித்தெடுத்தலுக்கு சிறந்த தயாரிப்பு நடைமுறைகளின் நியதி |
| SLS 1487: 2014 | தும்பு நார் மரச்சோறு அடிப்படைக்கான சிறந்த தயாரிப்பு நடைமுறைகள் |

- 2016ஆம் ஆண்டின் போது நடைமுறையிலான கட்டளைகளுக்கும், ஒரு தொகையிலான மீளாய்வுகளுக்கும், திருத்தங்களுக்கும் மேலதிகமாக, எந்திரவியல் மற்றும் விஞ்ஞானரீதியிலான துறைகளை உள்ளடக்கி, எழுபத்திநான்கு (74) கட்டளைகள் வெளியிடப்பட்டன.
- சொல்லப்பட்ட தரக் கட்டளைகளின் பிரயோகம் பற்றி சிறிய, நடுத்தர வியாபாரமுயற்சித் துறைத் தாபனங்களுக்கு அறிவூட்டுவதற்காக விதாத நிலையங்கள், IDB மற்றும் தேயிலைச் சபை ஆகியவற்றுடனான கூட்டுடன் உணவுப் பாதுகாப்பு, GMP, ISO 9001 ஆகியன மீது ஒரு தொகையிலான விழிப்பியலைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.
- தொழில்வாண்மையாளர்கள் மத்தியில் இந்த கருத்துருவை மேம்படுத்துகின்ற அதேவேளை உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் சந்தையில் ஊடுருவுவதற்கு அவர்களை உறுதிப்படுத்தி சி.ந.தொ.மு. துறை தாபனங்களை நோக்காகக் கொண்டு ஜேர்மனி – GIZஇன் ஆதரவுடன் வடக்கு மற்றும் கிழக்கு மற்றும் ஊவா பிராந்தியங்களில் ஒரு தொகையிலான GMP நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவொன்றாக GMP சான்றுப்படுத்தல் திட்டங்களின் கீழ் இந்தப் பிராந்தியங்களில் பெருமளவு தாபனங்களை சான்றுப்படுத்துவதற்கு இயலக்கூடியதாக இருந்தது.
- ஜேர்மனிய GIZஇன் விசாலமனத்திலான நிதிப்படுத்தலுடன், பிராந்திய அடிப்படையின் மீது உசாவுகையிலான கருத்தரங்குகளை நடத்துவதன் மூலம் தேசிய தரக் கொள்கையை மீளவாய்வதற்கு வேறுபட்ட பங்காளர்களிடமிருந்து உள்ளீடுகளைப் பெறுவதற்கான பரந்த உசாவுகை நடைமுறையொன்றை இ.க.நி. மேற்கொண்டள்ளதுடன், அந்த உள்ளீடுகளைப் பயன்படுத்தி தேசிய தரக் கொள்கை மீளவாயப்பட்டுள்ளதுடன், தேசிய தரக் கொள்கையின் புதிய விருத்தாந்தத்தை வெளியிடுவதை முடிவுறுத்துவதற்கான வேறு பணிகளை ஒழுங்குபடுத்தும நடைமுறையில் தற்போதுள்ளது.
- திட்டத்தின் செயற்பாடுகளைச் சீர்படுத்துவது மூலம், கட்டாயமான இறக்குமதிச் சோதனைத் திட்டத்தைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- தனியார் மற்றும் அரசாங்கத் துறைத் தாபனங்களின் ஆதரவுடன், தேசிய தர வாரத்தையும், உலகக் கட்டளைகள் தினத்தையும் நிறுவனம் கொண்டாடியது. இதன் பொருட்டு, இச் செயற்பாடுகளின் முக்கியத்துவம் பற்றி கைத்தொழிலுக்கும், வர்த்தகத்திற்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவூட்டுவதற்கும், தரத்தினதும், கட்டளைப்படுத்தலினதும் செய்தியைப் பரப்புவதற்கும் சமர்ப்பணங்கள் செய்யப்பட்டதுடன், கட்டுரைகளும் வெளியிடப்பட்டன. பொது மக்களுக்கு தரத்தின் செய்தியைப் பரப்புவதற்காக தரம் மீதான வாகனப் பேரணியொன்றை நிறுவனம் ஒழுங்குசெய்துள்ளது.
- வேறு நாடுகளின் கட்டளைகள் மீது பிந்திய தகவலைப் பரப்புவதற்காக, “Standards Alert” என்ற பெயரிலான இலத்திரனியல் செய்திக்கடிதமொன்றை நிறுவனம் வடிவமைத்து, அக்கறையிலான தரப்புகளுக்கு ஈ-மெயில் ஊடாக அனுப்புகின்றது.
- பங்காளர்கள் மத்தியில் இ.க.நி. இன் செயற்பாடுகள் பற்றிய விழிப்பியலை அதிகரிப்பதற்காக SLSI News Bulletinஐ வெளியிடுவதற்கு இ.க.நி. ஒழுங்குகளைச் செய்துள்ளது.
- பச்சை இல்ல வாயு தொகைரீதிப்படுத்தல் அத்துடன் சொல்லப்பட்ட கட்டளைகளுக்கு எதிராக தாபனங்களை சான்றுப்படுத்துவதற்கான சான்றளிப்புத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக உள்ளகப் பணியாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக, ISO 14064 மற்றும் ISO 14065 ஆகியன மீதான அடிப்படையில் அறிக்கைகளினதும் சரிபார்த்தல்களினதும் மீது இ.க.நி. செயலமர்வொன்றையும் நடத்தியது.

# 2016 ஆம் ஆண்டின் சிறப்பம்சங்கள்

- பிரயோகிக்கத்தக்க இலங்கைக் கட்டளைக்கு எதிராக தேயிலைப் பொதிப்படுத்தல் தாபனங்களை உள்ளடக்குவதற்கும் அத்துடன் உற்பத்திச் சான்றளிப்புச் சின்னமொன்றை வழங்குவதற்கும் SLSI/SLTB உற்பத்திச் சான்றளிப்புத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
- புதிய சோதித்தல் சாதனங்களை வழங்குவதன் மூலம், ஆய்வுகூடங்களின் தொழில்நுட்ப ஆற்றலளவைப் பலப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- அமுக்கம், நீளம், விசை மற்றும் வெப்பநிலை ஆகிய துறைகளில் எடையளவியல் பிரிவின் தத்துவமளிப்புக்களின் நோக்கெல்லை விரிவடைந்துள்ளது.
- இலங்கை தத்துவமளிப்பு சபையிலிருந்து தத்துவமளிப்பினை தொடர்வதன் மூலம் ஆய்வுகூடப் பணிகளை மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, தத்துவமளிப்பினைச் சாதிப்பதற்காக வேறு ஆய்வுகூட அலகுகளின் பணி சீர்படுத்தப்பட்டுள்ளது.
- பிரிவின் பணிகளைச் சீர்படுத்துவதன் ஊடாக இலங்கைத் தத்துவமளிப்புச் சபையிலிருந்து தத்துவமளிப்பினை பேணுவதன் மூலம், இ.க.நி.இன் எடையளவியல் பிரிவின் செயற்பாடு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.
- நடைமுறையிலான RvA தத்துவமளிப்புக்கு மேலதிகமான தேசிய தத்துவமளிப்புச் சபையிலிருந்து தத்துவமளிப்பினைப் பேணுவதன் மூலம் ISO 9001, ISO 14001மற்றும் ISO 22000 முறைமைகள் சான்றளிப்புத் திட்டங்கள் மேலும் பலப்படுத்தப்பட்டன.
- விஞ்ஞானக் கட்டளைகள் மற்றும் எந்திரவியல் கட்டளைகள் ஆகிய இ.க.நி.இன் கட்டளைகள் பிரிவுகளின் பணிகள் பயனுறுதிவாய்ந்த தன்மையொன்றில் கட்டளைகளை வகுத்தமைப்பதற்காக சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அவசியப்பட்ட பணியாளரை வழங்குவதன் மூலம் மேலும் பலப்படுத்தப்பட்டது.
- SAARC கட்டளைகளை வகுத்தமைத்தல் மீது இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திப் பொருள்கள் மற்றும் உணவு மற்றும் கமத்தொழில் உற்பத்திப்பொருள்கள் மற்றும் உணவு மற்றும் கமத்தொழில் உற்பத்திப் பொருட்கள் மீது தென் ஆசிய பிராந்திய கட்டளைகள் தாபனத்தின் (SARSO) மூன்று துறைசார் தொழில்நுட்பக் குழு (STC) கூட்டங்கள் கொழும்பில் நடைபெற்றதுடன், இக் கூட்டங்கள் இ.க.நி. இனால் விருந்தோம்பப்பட்டன.
- உற்பத்திப்பொருட்கள் அவசியப்பட்ட தணிக்கைகளையும், சோதனைகளையும் நடத்திய பின்னர் ஒரு தொகையிலான கடல்கடந்த நாட்டுத் தயாரிப்புத் தாபனங்களுக்கு SLS குறி வழங்கப்பட்டுள்ளது. இதனால் இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களின் தயாரிப்பினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை SLS குறியுடன் உற்பத்திப் பொருட்களை இறக்குமதியாளர்கள் இறக்குமதி செய்ய முடியும் என்பதுடன் அவசியமற்ற பிரச்சனைகளுக்கு இறக்குமதியாளர்கள் முகங்கொடுக்கமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தவும் முடியும்.
- அரசாங்க மற்றும் தனியார் துறை தாபனங்களுடன் செயற்றிறன் திறமை விருது செயற்றிட்டமொன்றாக நிறுவனம் சுயேட்சையாக 22ஆவது தேசிய தர விருதுகள் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தியது.
- வயம்ப பல்கலைக்கழகத்துடன் தர முகாமைத்துவம் மீது பட்ட செயற்றிட்டமொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- அரசாங்க மற்றும் தனியார் துறைத் தாபனங்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு தொகையிலான பொருட்காட்சிகளில் நிறுவனம் தீவிரமாகப் பங்கெடுத்ததுடன், இ.க.நி. சேவைகளை மேம்படுத்துவதற்காக இந்த வாய்ப்புக்களையும் பயன்படுத்தியது.
- ஊடக வெளியீடுகள், கலந்துரையாடல்களில் பங்கெடுத்தல், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் நேர்முகங்காணல்கள் ஆகிய வழிவகைகளினால் இ.க.நி. சேவைகள் மேம்படுத்தப்பட்டன.
- 2016ஆம் ஆண்டின் போது, மாலபேயில் அதிநவீன ஆய்வுகூடத்தைக் கட்டுவதற்காக, மந்திரிகளின் அமைச்சரவையின் அங்கீகாரததைப் பெறுவதற்கும் அத்துடன் UDAஇலிருந்து பௌதீக கைவசப்படுத்தலைப் பெறுவதற்கும் இயலக்கூடியதாக இருந்தது.

# வருமானத்தைத் தோற்றுவித்தல் செயற்பாடுகள்

2001இல் அறிமுகப்படுத்தப்பட்ட இ.க.நி.இன் வருமானத்தைத் தோற்றுவித்தல் மீதான உந்துகை 2016ஆம் ஆண்டின் போது தொடர்ந்ததுடன், அது 745.371 மில்லியன் ரூபா கொண்ட வருமானத்தைப் பதிவு செய்தது. இது எதிர்வுகூறப்பட்ட வருமானத்தை 161.671 மில்லியன் ரூபாவினால் விஞ்சியுள்ளதுடன், வருமானத்தின் மூலமொன்றாக, அரசாங்க உதவு தொகைகள் மீது தங்கியிருத்தலையும் நீக்கியுள்ளது.

நிறுவனத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் (ஆண்டுக்காக ரூபா 583.700 மில்லியன் கொண்ட வரவு-செலவு திட்டமிடப்பட்ட வருமானத்திற்கு எதிராக ரூபா 745.371 மில்லியன் மொத்தம்) பின்வரும் செயற்பாட்டுத் துறைகளிலிருந்து பெறப்பட்டது. இவை 2015ஆம் ஆண்டுக்கான தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு, கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

| செயற்பாட்டுத் துறை | 2015 (ரூபா ’000) | 2016 (ரூபா ’000) |
|---|---|---|
| இறக்குமதிச் சோதித்தல் செயற்பாடுகள் | 197.091 | 235.802 |
| உற்பத்திச் சான்றுப்படுத்தலும், மீன்பிடித்தலைச் சோதித்தலும், போத்தலிலடைக்கப்பட்ட நீரின் பதிவுக் கட்டணமும் | 141.941 | 134.073 |
| முறைமைச் சான்றுப்படுத்தல் செயற்பாடுகள் | 58.665 | 67.956 |
| ஆய்வுகூடச் சோதித்தலும், மதிப்பாராய்தலும் | 164.983 | 200.182 |
| கருத்தரங்குகளும், பயிற்சித் திட்டங்களும் | 32.372 | 43.985 |
| கட்டளைகளினதும், வேறு தகவல் செயற்பாடுகளினதும் விற்பனை | 14.201 | 18.130 |
| வேறு | 26.527 | 45.243 |
| | **636.170** | **745.371** |

முன்னைய ஆண்டான 2015ஐப் போன்று, 2016ஆம் ஆண்டுக்கு மூலதனச் செலவினத்தையும், மீளவரும் செலவினத்தையும் உள்ளடக்குவதற்காக திறைசேரியிலிருந்து ஏதேனும் நிதியத்தை இ.க.நி. எடுக்கவில்லை.

2016ஆம் ஆண்டுக்கான ஒப்பிட்டு எண்ணிக்கைகளுடன் மீளவரும் மற்றும் மூலதனச் செலவினத்தின் விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

| | 2015 | 2016 |
|---|---|---|
| மீளவரும் செலவினக் கொடுப்பனவுகள | ரூபா 467.469 மில்லியன் | ரூபா 520.222 மில்லியன் |
| மூலதனச் செலவினக் கொடுப்பனவுகள் | ரூபா 145.965 மில்லியன் | ரூபா 93.365 மில்லியன் |

செயற்பாடுகளும் மற்றும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கான ஒத்திசைவிலான இலக்கும் கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

| உந்துகைத் துறை | கருத்திட்டங்கள்/ செயற்றிட்டம் | செயற்பாடுகள் | 2016க்கான இலக்கு | 2016 சாதனைகள் |
|---|---|---|---|---|
| தொழில்நுட்பத்தை வர்த்தக மயப்படுத்தலும், பிரசித்தப்படுத்தலும் (தரப்படுத்தல் மற்றும் தர முகாமைத்துவம்) | தேசிய கட்டளைகளை வகுத்தமைத்தல் | நாட்டின் தேவைகள் மீதான அடிப்படையில் ஏற்றுக்கொள்ளல் உட்பட தேசியக் கட்டளைகளை வகுத்தமைத்தல் | 62 | 58 |
| | | கட்டளைகளின் மீட்டுரைத்தல்கள் | 36 | 29 |
| | | கட்டளைகளின் மீளாய்வுகள் | 44 | 52 |
| | | கட்டளைகளை மேம்படுத்தல் செயற்றிட்டங்கள் | 03 | 02 |
| | மொத்த ஒதுக்கீடு<br>மொத்தச் செலவினம் | ரூ. 5.480 மில்லியன்<br>ரூ. 3.059 மில்லியன் | | |

உணவு, கமத்தொழில், இரசாயனங்கள், அலங்காரப்பொருட்கள், பொலிமர், பொதிப்படுத்தல், கடதாசி, கடதாசி அட்டை சமூகத் தேவைகள், ஆடை, துணி, காலணி, தோல் துறைகள் மற்றும் முகாமைத்துவ முறைமைகள் ஆகிய துறைகளில் தேசியக் கட்டளைகளை வகுத்தமைப்பதே விஞ்ஞானக் கட்டளைப்படுத்தல் பிரிவின் பிரதான தொழிற்பாடாகும். தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் வெளியிடப்பட்ட கட்டளைகளை பொருட்களினதும் நடைமுறைகளினதும் புதிய முன்னேற்றம் அத்துடன் பொருளாதாரத்தினதும், வர்த்தகத்தினதும் மாற்றங்கள் ஆகியவற்றை மதிப்பாய்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. விவரக்கூற்றுக்கள், சோதனை முறைகள், நடைமுறைகளின் நியதி சொற்களஞ்சியங்கள் மற்றும் பதங்கள், சின்னங்கள் ஆகியவற்றினுள் வெளியிடப்பட்ட கட்டளைகள் வகைப்படுத்தப்பட முடியும். தேசிய கட்டளைகளின் வகுத்தமைத்தலில் சாத்தியமானளவு சர்வதேச கட்டளைகளுக்கும் மற்றும் நடைமுறைகளுக்கும் இ.க.நி.இன் கொள்கை அமைவாக விளங்கவேண்டும். இதைச் செயற்படுத்துவதற்காக பிரயோகிக்கத்தக்க போதெல்லாம் இலங்கைக் கட்டளைகளாக சர்வதேச கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ISO 9001இன் தேவைப்பாடுகளின் பிரகாரம், ஆவணப்படுத்தப்பட்ட தர முகாமைத்துவ முறைமை (QMS) ஒன்றைப் பிரிவு தாபித்து, பராமரிக்கின்றது.

பாவனையாளர்களையும், உற்பத்தியாளர்களையும், பயன்படுத்துனர்களையும், அரசாங்க நிறுவனங்களையும் மற்றும் சுதந்திரமான தொழில்நுட்பத் தாபனங்களையும் பிரதிநிதிப்படுத்தும் சகல அக்கறையிலான தரப்புக்களின் தன்னிச்சையிலான சம்பந்தத்துடனும், ஒத்துழைப்புடனும் பங்கெடுப்பிலானதும், ஒளிவுமறைவற்றதும் மற்றும் உசாவுகையிலானதுமான நடைமுறையொன்றின் ஊடாக பிரிவினால் வகுத்தமைக்கப்படுகின்ற தேசியக் கட்டளைகள் விருத்திசெய்யப்படுகின்றன. ஆக்கவுரிமை மட்டுப்படுத்தல்களுக்கு உட்பட்டு இலங்கையின் அபிவிருத்தியில் மூல ஆவணங்களாக தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேசக் கட்டளைகள் பயன்படுத்தப்பட முடியும்.

உணவு உற்பத்திப்பொருட்கள் மீதான துறைசார் குழு, கமத்தொழில் மீதான துறைசார் குழு, இரசாயன மற்றும் பல்பகுதிய தொழில்நுட்பம் மீதான துறைசார் குழு, கடதாசி, கடதாசி அட்டை மற்றும் பொதிப்படுத்தல் மீதான துறைசார் குழு, நகரத்திற்குரிய தேவைகள் மீதான துறைசார் குழு, புடவைகள், ஆடை மற்றும் தோல் மீதான துறைசார் குழு என 06 துறைசார் குழுக்களை இ.க.நி.இன் சபை நியமித்துள்ளது. துறைசார் குழுக்களின் வழிகாட்டலுடன் தேசிய பொருளாதாரத்திற்கு ஆகக்கூடுதலான நன்மைகளுக்கான சிறந்த சாத்தியமான வழியில் சகல சாத்தியமான நிபுணத்துவத்தை ஒன்றுதிரட்டும் குறிக்கோளுடன் இச்செயற்பாடுகளில் பிரிவுக்கு ஆலோசனை வழங்குவதற்கும், வழிகாட்டுவதற்கும் செயற்குழுக்களை பிரிவு நியமிக்கின்றது. இறுதி நகல் தயாரிப்பதற்கு முன்னர் பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்படுவதுடன், ஒவ்வொரு வரைவு கட்டளைக்கும் பொதுவாக இரு மாதங்களைக் கொண்டதாக பொதுசன விநியோகக் காலம் விளங்கும். பொதுசன கருத்துரை காலத்தின் போது பெறப்படும் கருத்துக்கள் தேசிய பொருளாதாரத்திற்கான நன்மைகளை அதிகபட்சமாக்குமுகமாக கரிசனைக்கெடுக்கப்படுகின்றன.

WTO/TBT உடன்படிக்கையின் கீழ் சாத்தியமானவிடத்து சர்வதேசக் கட்டளைகளின் மீது அதன் தேசியக் கட்டளைகளை தளமாகக் கொண்டிருப்பதற்கான கடப்பாடொன்றை இலங்கை கொண்டுள்ளது. இலங்கைக்

கட்டளைகளாக ISO மற்றும் IEC கட்டளைகளை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை இ.க.நி.இன் கட்டளைகள் வகுத்தமைத்தல் பிரிவுகள் கொண்டுள்ளன. எனினும், சில தருணங்களில் குறிப்பான நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தமது ஆவணங்களை ஏற்றுக்கொள்வதற்காக வேறு பிராந்திய மற்றும் சர்வதேச கட்டளைகள் சபைகளுடன் இ.க.நி.இன் கட்டளைகள் வகுத்தமைத்தல் பிரிவு உடன்படிக்கைகளைக் கொண்டுள்ளது.

சகல வகுத்தமைக்கப்பட்ட வரைவுக் கட்டளைகளும் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டளைகளும் இ.க.நி.இன் சபையின் இறுதியிலான அங்கீகாரத்தினால் தொடர்ந்து தொடர்பான துறைசார் குழுக்களினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மட்டுமே வெளியிடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

தொடர்ச்சியான சந்தை தொடர்பினை உறுதிப்படுத்துவதற்காக வெளியிடப்படும் இலங்கைக் கட்டளைகள் கிரமமாக மதிப்பாயப்படுகின்றன. தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்துடன் வெளியிடப்பட்ட கட்டளைகளை மதிப்பாய்தல் மற்றும் புதுப்பித்தல், விடயதானங்களினதும் மற்றும் நடைமுறைகளினதும் புதிய முன்னேற்றம் அத்துடன் பொருளாதாரத்தினதும் மற்றும் வர்த்தகத்தினதும் மாற்றங்கள் ஆகியன பிரிவினால் ஒழுங்குசெய்யப்படுகின்றன. ஏதேனும் மாற்றம் அவசியப்பட்டால் ஒரு மீளாய்வு அல்லது ஒரு திருத்தம் முன்னெடுக்கப்பட முடியும்.

2016ஆம் ஆண்டின் போது, ஐம்பத்தெட்டு (58) புதிய தேசியக் கட்டளைகள் வகுத்தமைக்கப்பட்டு, சபையினால் அங்கீகரிக்கப்பட்டன. இதில் நாற்பத்தியேழு (47) கட்டளைகள் ISO கட்டளைகளின் புதிய ஏற்றுக்கொள்ளல்களாகும். QMS நடைமுறைகளின் பிரகாரம் ஐம்பத்தியிரண்டு (52) கட்டளைகள் மதிப்பாயப்பட்டன. இருபத்தொன்பது (29) கட்டளைகள் மீளவாயப்பட்டன. இதில் பதினெட்டு (18) ISO கட்டளைகளின் புதிய ஏற்றுக்கொள்ளல்களாகும். மேலதிகமாக, அறுபது (60) கட்டளைகள் பொதுசன கருத்துரை கட்டம் வரை முன்னேற்றமடைந்தது. பதினொரு (11) திருத்தங்கள் வழங்கப்பட்டதுடன், இரு (02) கட்டளைகள் மீளப்பெறப்பட்டன.

கருத்துக்களைச் சேகரிப்பதற்காக பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட எழுபத்திநான்கு (74) செயற்குழுக் கூட்டங்கள், ஆறு (06) துறைசார் குழுக் கூட்டங்கள், மற்றும் பத்து (10) மேலதிகக் கூட்டங்கள் அத்துடன் ஆறு (06) தேசிய சாளரக்குழுக் கூட்டங்கள் ஆகியவற்றின் விளைவொன்றே கட்டளை வகுத்தமைத்தல் செயற்பாடுகளின் மேற்படி விளைவாகும்.

### சர்வதேச தரப்படுத்தல் பணி

*ISO (சர்வதேச கட்டளைப்படுத்தல் மீதான தாபனம்)*

ISO தொழில்நுட்பக் குழுக்களின் பங்கெடுப்பிலான அல்லது அவதானிப்பிலான உறுப்புரிமையை பெருமளவு பணியாட் உறுப்பினர்கள் கொண்டிருப்பதுடன், வரைவு ISO கட்டளைகள் மீது வாக்களித்து, கருத்துரைத்த அதேவேளை சர்வதேசக் கட்டளைகளின் வகுத்தமைத்தலில் பங்கெடுத்தனர்.

### பிராந்தியத் தரப்படுத்தல் பணி

*SARSO (தென் ஆசிய பிராந்தியக் கட்டளைப்படுத்தல் தாபனம்)*

SAARC பிராந்தியத்தில் சில கட்டளைகளை இசைவாக்கும் நோக்கத்துடன், வேறுபட்ட துறைகளுக்காக கூட்டங்களை SAARC - SARSO புறம்பாக நடத்துகின்றது. SARSOஇன் ஆறு (06) துறைசார் தொழில்நுட்ப குழுக்களில் (STC) பிரிவுகளின் நோக்கெல்லைகளுக்கு மூன்று (03) சம்பந்தப்பட்டவையாகும்: உணவு மற்றும் கமத்தொழில் மீதான STC, இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திப்பொருட்கள் மீதான STC, சணல் புடவை மற்றும் தோல் மீதான STC. பிரிவின் பணியாளர்கள் SAARC-SARSOஇன் துறைசார் தொழில்நுட்பக் குழுக் கூட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுத்தனர். பணியாளர் பிரிவினால் முப்பத்திநான்கு (34) கருத்திட்டங்கள் கையாளப்பட்டன.

2016ஆம் ஆண்டின் போது, பின்வரும் கூட்டம் பிரிவினால் ஒழுங்குபடுத்தப்பட்டு, இ.க.நி.இனால் விருந்தோம்பப்பட்டது. கொழும்பில் உள்ள ஹொட்டேல் பெஸ்ட் வெஸ்ரேனில் கூட்டம் நடைபெற்றது. அதே ஹொட்டேலில் ஏனைய SAARC நாடுகளின் பேராளர்களுக்கு இடவசதி ஒழுங்குபடுத்தப்பட்டது.

உணவு மற்றும் கமத்தொழில் உற்பத்திப் பொருட்கள் மீதான துறைசார் தொழில்நுட்பக் குழுவின் (STC) 6ஆவது கூட்டம் இரு நாட்கள் - 2016.05.10 மற்றும் 2016.05.11.

### கட்டளைகள் மேம்படுத்தல்/விழிப்பியல் செயற்றிட்டங்கள்/கருத்தரங்குகள்

பின்வருமாறு 2016ஆம் ஆண்டில் இரு விழிப்பியல் செயற்றிட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு, நடத்தப்பட்டன.

அ. கமத்தொழில் திணைக்களத்தின் உதவியுடன் பேராதனையில் நடைபெற்ற பழங்களுக்கும் மரக்கறிகளுக்குமான சிறந்த கமத்தொழில் நடைமுறைகளுக்கான வரைவு இலங்கை கட்டளைகள் மீதான விழிப்பியல் செயற்றிட்டம்

ஆ. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவியுடன், களுத்துறையில் நடைபெற்ற பௌத்த குருமார்களுக்கான காவிவுடைகளினதும் மற்றும் அட்டபிரிகரவினதும் மீதான விழிப்பியல் செயற்றிட்டம்

## ஏனைய பிரிவுகளுக்கான சேவைகள்

இ.க.நி.இன் ஏனைய பிரிவுகளுக்கு ஆதரவளிப்பதற்காக, பலதரப்பட்ட வழிகளில் வள நபர்களாகவும், தணிக்கையாளர்களாகவும், மதிப்பீட்டாளர்களாகவும் மற்றும் பரீட்சகர்களாகவும் பணியாளர் சேவையாற்றினார்கள். ISO 9001, ISO 22000, ISO 14000, OSHAS ஆகியன மீது தணிக்கையாளர் தகைமைகளைக் கொண்டதும் அத்துடன் GMP மீதான அறிவையும், அனுபவத்தையும் கொண்டதுமான பணியாளரினால் 147 மனித நாட்கள் செலவழிக்கப்பட்டன. உற்பத்திகள் சான்றளிப்புப் பிரிவின் தணிக்கைகளுக்காக பணியாளரினால் எண்பத்தியாறு (86) மனித நாட்கள் செலவழிக்கப்பட்டதுடன், தர உறுதிப்படுத்தல் பிரிவின் இறக்குமதிச் சோதனைத் திட்டத்தின் கீழ் கூருணர்வு மதிப்பாய்வுக்கான தகரத்திலடைக்கப்பட்ட மீன் மாதிரிகளின் தணிக்கையாளர்களாக சில பணியாட் உறுப்பினர்கள் சேவையாற்றினார்கள். பயிற்சிப் பிரிவுக்காக வள நபர்களாக அறுபத்தொன்பதரை (69½) மனித மணித்தியாலங்களைக் கொண்ட விரிவுரைகள் பொறுப்பேற்கப்பட்டன. ஏனைய பிரிவுகளினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பலதரப்பட்ட தொழில்நுட்பக் கூட்டங்களில் பணியாட் உறுப்பினர்கள் பங்கெடுத்ததுடன், 2016ஆம் ஆண்டுக்கான தேசிய தர விருதுகள் செயற்றிட்டத்திற்காக தாபனங்களின் மதிப்பீட்டில் சேவைகள் வழங்கப்பட்டன.

## வெளியார் தாபனங்களுக்கான சேவைகள்

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பலதரப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள், கல்வி அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்கள், சுகாதார அமைச்சு, அலங்காரப்பொருட் கருவிகள், ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, தேசிய உரச் செயலகம், இலங்கை வர்த்தக சபை ஆகியவற்றின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள் போன்ற பலதரப்பட்ட குழுக்களின் கூட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுப்பதன் மூலம் வேறு தாபனங்களுக்கு பிரிவின் சிரேஷ்ட பணியாளர்கள் சேவையாற்றினர்.

அத்துடன் இலங்கை வர்த்தகச் சபையினால் ஒருங்கிணைக்கப்பட்டதும், ஒழுங்குபடுத்தப்பட்டதுமான இலங்கையின் பழங்களினதும், மரக்கறிகளினதும் பாதுகாப்பினையும், தரத்தையும் மேம்படுத்துவது மீது WTO/ITC/STDF கருத்திட்டம் 354 மீதான தேசிய முன்னெடுத்தல் குழுவுக்காகவும் பணியாற்றினார்கள்.

## பணியாளரின் ஆற்றலளவின் முன்னேற்றம் (கடல் கடந்த நாடுகளில் பயிற்சி/ தணிக்கைகள்)

கடல்கடந்த நாடுகளில் நடத்தப்பட்ட குறுகிய கால பயிற்சி நெறிகளை இரு (02) அலுவலர்கள் மேற்கொண்டார்கள். பாகிஸ்தானில் நடைபெற்ற பாரிய சந்தை அடைதலுக்கான உலகளாவிய GAP மற்றும் பங்களாதேஷ் டாக்காவில் நடைபெற்ற துறைசார் தொழில்நுட்ப குழு தலைவர்களுக்கும் செயலாளர்களுக்குமான பிராந்தியப் பயிற்சி

கடல் கடந்த நாடுகளில் பயிற்சிக்கு மேலதிகமாக, ஆண்டின் போது வேறு பிரிவுகளினால் குறித்தொதுக்கப்பட்ட கடல் கடந்த நாடுகளில் தணிக்கைகளிலும், மகாநாடொன்றிலும் 04 பணியாட் உறுப்பினர்கள் பங்கெடுத்தனர்.






# எந்திரவியல் கட்டளைகள் பிரிவு

| உந்துகைத் துறை | கருத்திட்டங்கள்/ செயற்றிட்டங்கள் | செயற்பாடுகள் | 2016க்கான இலக்கு | 2016 சாதனைகள் |
|---|---|---|---|---|
| தொழில்நுட்பத்தை வர்த்தக மயப்படுத்தலும், பிரசித்தப்படுத்தலும் (தரப்படுத்தல் மற்றும் தர முகாமைத்துவம்) | தேசிய கட்டளைகளை வகுத்தமைத்தல் | நாட்டின் தேவைகள் மீதான அடிப்படையில் தேசியக் கட்டளைகளை வகுத்தமைத்தல் | 33 | 06 |
| | | கட்டளைகளை வகுத்தமைத்தல் (ஏற்றுக்கொள்ளல்/மீளாய்வு/ மீள்-உறுதிப்படுத்தல்) | 17 | 136 |
| | | கட்டளைகளை மேம்படுத்தல் செயற்றிட்டங்கள் | 01 | 01 |
| | மொத்த ஒதுக்கீடு<br>மொத்தச் செலவினம் | ரூ. 2.680 மில்லியன்<br>ரூ. 1.467 மில்லியன | | |

தகவல் தொழில்நுட்பம் உட்பட சகல எந்திரவியல் பிரிவுகளில் தேசிய கட்டளைகளை வகுத்தமைப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் எந்திரவியல் பிரிவு பொறுப்பானதாகும். மின்சாரச் சாதனங்களுக்கான சக்தி செயற்றிறன் சுட்டித்துண்டிடுதல் திட்டத்தின் செயற்பாடு, கட்டிட நிருமாணங்களின் மேற்பார்வை, கட்டிடங்களின் பராமரிப்புகள் மற்றும் வேலைத்தலச் செயற்பாடுகள் ஆகியனவும் பிரிவினால் பொறுப்பேற்கப்படுகின்றது.

மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது, ஆறு (06) புதிய இலங்கைக் கட்டளைகள் விருத்தி செய்யப்பட்டன. பத்தொன்பது (19) கட்டளைகள் மீளவாயப்பட்டதுடன், தேசிய கட்டளைகளாக நூற்றிப்பதினேழு (117) சர்வதேசக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நடைமுறையிலான கட்டளைகளுக்கு ஐந்து (05) திருத்தங்கள் வழங்கப்பட்டன. இக்கட்டளைகளை முடிவாக்குவதற்காக முப்பத்தைந்து (35) துறைசார் குழுக் கூட்டங்களும், ஐம்பத்தைந்து (55) செயற் குழுக் கூட்டங்களும் நடைபெற்றன. வேறு அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதை எந்திரவியல் பிரிவு தொடர்ந்ததுடன், கட்டளைகளின் முன்னேற்றத்திற்கு தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக் கூட்டங்களிலும் பங்கெடுத்தது.

நாற்பத்திமூன்று (43) SLSக்கு முந்திய மற்றும் இருபத்தியாறு (26) SLSக்கு பிந்திய கருத்திட்டங்கள் மீது பணியாற்றுவதன் மூலம், SLS உற்பத்திச் சான்றளிப்புச் செயற்பாடுகளுக்கு பிரிவின் எந்திரவியலாளர்கள் பங்களித்தார்கள். உற்பத்திச் சான்றளிப்புச் செயற்பாடுகளில் ஆய்வாளர்களாக பிரிவில் உள்ள சகல எந்திரவியலாளர்களும் பங்கெடுத்தார்கள்.

குடித்தனப் பிரயோகங்களில் சக்தி செயற்றிறனான மின்சார உபகரணங்களைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்காக சக்தி செயற்றிறன் சுட்டித்துண்டிடுதல் திட்டத்தின் செயற்பாடு தொடரப்பட்டது. இருநூற்றியேழு (207) புதிய மற்றும் ஐம்பத்தியெட்டு (58) புதுப்பித்தல்கள் உட்பட மொத்தமாக இருநூற்றி அறுபத்தைந்து (265) சான்றுப்பத்திரங்கள் இறுக்கமான வெள்ளொளிர் விளக்குக்கு (CFL) வழங்கப்பட்டன. LEDக்கு நான்கு (04) புதிய குறைந்தபட்ச சக்தி செயற்றிறன் (MEP) சான்றுப்பத்திரங்கள வழங்கப்பட்டன

தேசிய தரக் கொள்கையை மதிப்பர்யவதில் எந்திரவியல் பிரிவு சம்பந்தப்பட்டிருந்தது.

**வேறு தாபனங்களுடன் கட்டளைகளை முன்னேற்றும் பணி**

பின்வருமாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளபடி நிறுவனங்களின் ஆதரவுடன் கட்டளைகளை விருத்தி செய்தல் தொடர்ந்தது:

1. சிவில் எந்திரவியல் பணிகளுக்கான அளவீட்டின் நியம முறைகள் - ICTAD என்றவாறு முன்னர் அறியப்பட்ட நிருமாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA)

2. இலங்கை நிலைத்திருத்தல் சக்தி அதிகார சபையுடன் மின்சார உபகரணங்களுக்கான சக்தி செயற்றிறன் வீதப்பாட்டுக் கட்டளைக

3. இலங்கை நிலைத்திருத்தல் சக்தி அதிகாரசபையுடன் LED விளக்குகளுக்கு குறைந்தபட்ச சக்தி செயற்றிறன் வீதப்பாட்டிலான கட்டளைகள்

4. இலங்கை நிலைத்திருத்தல் சக்தி அதிகாரசபையுடன் சூரியசக்தி பனல்களுக்கும் மற்றும் தொடர்பான துணைக்கருவிகளுக்கும் இலங்கை கட்டளைகளை விருத்திசெய்தல்

5. அவசியத்தில் உள்ள மக்களுடன் உயிரக எரிவாயு முறைகளுக்காக நடைமுறையின் இலங்கை கட்டளைகள் நியதியின் மீளாய்வு

6. உணவு, விவசாய தாபனத்தின் அனுசரணையுடன் நிலைத்திருக்கத்தக்கதாக உற்பத்தி செய்யப்படும் எரிபொருள் மரங்களுக்கான கட்டளை

மேற்படி பிரதான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, வெளியார் தாபனங்களுக்கும் மற்றும் இ.க.நி.இன் வேறு பிரிவுகளுக்கும் ஆலோசனைச் சேவைகளை பிரிவு வழங்கியது. இ.க.நி. உட்பட அரசாங்கத் தாபனங்களில் அரசாங்க கேள்வி மதிப்பாய்வு நடைமுறையில் உதவியளிப்பதற்காக பெருமளவு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்கள் மற்றும் கொள்வனவு குழுக்கள் ஆகியன மீது பிரிவின் உத்தியோகத்தர்கள் சேவையாற்றினார்கள்.

இ.க.நி.இனால் நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களுக்கு வள நபர்களாக பிரிவின் எந்திரவியலாளர்கள் பணியாற்றியதுடன், தர முகாமைத்துவ முறைமை (ISO 9001), சூழல் முகாமைத்துவ முறைமை (ISO 14001), தொழில்நிலை சுகாதார, பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினாலும் (OSHAS 18001), சக்தி முகாமைத்துவ முறைமைகளம் (ISO 50001) மற்றும் தேசிய தர விருதுக்கான தாபனங்களின் மதிப்பீடு ஆகியவற்றில் தணிக்கையாளர்களாகப் பங்கெடுத்தார்கள்.

**கட்டிட நிருமாண மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகள்**

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, வேலைத்தலம் உட்பட மேம்படுத்தல்கள் மற்றும் பராமரிப்பு வேலைக்கான நிருமாண வேலையில் பிரிவிலுள்ள எந்திரவியலாளர்களின் உதவியுடன் இச் சேவைகளைப் பிரிவு தொடர்ந்தும் வழங்கியது. இ.க.நி. கட்டிடத்தின் 08ஆவது தளத்தின் மேலதிக நிருமாணம் ஆண்டின் போது தொடர்ந்து.

**வாகனப் பராமரிப்பு**

வாகனங்களின் தொகுதிக்கான சேவைகளினதும், பராமரிப்பினதும் மற்றும் பழுதுபார்ப்பினதும் ஏற்பாட்டினைப் பிரிவு தொடர்ந்தது.



# தர உறுதிப்படுத்தல் பிரிவு

| உந்துகைத் துறை | கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் | செயற்பாடுகள் | இலக்கு 2016 | சாதனை |
|---|---|---|---|---|
| உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களில் தர உறுதிப்படுத்தலை மேம்படுத்தல் | இறக்குமதி சோதனை திட்டத்தின் கீழ் இறக்குமதிகளின் தரத்தை உறுதிப்படுத்தல் | இறக்குமதி சோதித்தல் திட்டத்தின் கீழ் இறக்குமதிகளின் தரத்தை உறுதிப்படுத்தல் | 13.500 | 20.221 |
| | | தகரத்திலடைக்கப்பட்ட மீன்களின் மாதிரிகளை சோதித்தல் (கூருணர்வுக்கு) | 800 | 718 |
| | | கடல்கடந்த நாடுகளின் விநியோகஸ்தர்களை/ஆய்வுகூடங்களை பதிவுசெய்தல் | 20 | 69 |
| | மொத்த ஒதுக்கீடு<br>மொத்தச் செலவினம் | ரூ. 1.585 மில்லியன்<br>ரூ. 0.904 மில்லியன | | |

கைத்தொழிலினாலும், வர்த்தகத்தினாலும் வழங்கப்படும் உற்பத்திப்பொருட்களினதும், சேவைகளினதும் தரத்தைக் கண்காணிப்பதற்காக ஒரு தொகையிலான முக்கியமான திட்டங்களை இப்பிரிவு தொழிற்படுத்துகின்றது. தோதான கட்டுப்பாடுகளையும், சிறந்த விளைவுகளையும் உறுதிப்படுத்துவதற்காக, ஆண்டின் போது மதிப்பாய்வின் கீழான இத்திட்டங்கள் மேலும் பலப்படுத்தப்பட்டன.



## அ. தொழிற்பாட்டில் உள்ள திட்டங்கள்

### அ. இறக்குமதிச் சோதனை

இத் திட்டத்தின் கீழ் கண்காணிக்கப்பட்ட மொத்த விடயங்களின் எண்ணிக்கை 123 ஆகும்.

ஆண்டின் போது, 20,221 அனுப்புப்பொருட்பொதிகள் கண்காணிக்கப்பட்டதுடன், 10,101 அனுப்புப்பொருட்களிலிருந்து மாதிரிகள் பெறப்பட்டன. ஆண்டின் போது இச் செயற்பாட்டிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 168 மில்லியன் என்ற இலக்குக்கு எதிராக ரூபா 237 மில்லியனாகும்.

திட்டத்தின் சக்திமிக்கதன்மையையும், செயற்றிறனையும் மேம்படுத்தும் நடவடிக்கையொன்றாக, தயாரிப்பாளர்களின் பதிவு 2016ஆம் ஆண்டின் போது மேலும் விஸ்தரிக்கப்பட்டதுடன், இறக்குமதி சோதனைத் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 69 தயாரிப்பாளர்கள் உள்ளனர்.

### ஆ. முந்திரிப் பருப்புக்களின் ஏற்றுமதிக்கு முன்னரான தரச் சான்றளிப்பு

முந்திரிப் பருப்புகளுக்கு கட்டாய அடிப்படையில், இத் திட்டம் தொழிற்படுத்தப்பட்டது. 2016ஆம் ஆண்டின் போது வேண்டுகோள்கள் கிடைக்காதபடியினால், தற்போதைய திட்டத்தின் கீழ், 2016ஆம் ஆண்டின் போது முந்திரிப் பருப்பு அனுப்புப் பொருட்பொதிகள் பரிசோதிக்கப்படவில்லை.

## ஆ. பிரிவின் முழுமையான வருமானம்

பிரிவானது ரூபா 168 மில்லியன் கொண்ட இலக்குக்கு எதிராக ரூபா 237 மில்லியன் கொண்ட முழுமையான வருமானத்தைப் பதிவு செய்தது. இது 2016ஆம் ஆண்டுக்கு இ.க.நி.இன் இலக்கு வருமானத்தில் 32% என்ற உறுதியான மாறலொன்றைச் சாதிப்பதை நோக்கி பிரதானமாக பங்களித்தது. 2016ஆம் ஆண்டுக்கு இ.க.நி.இன் வருமானத்தின் அண்ணளவாக 1/3ஐ இப்பிரிவு ஈட்டியுள்ளது.



# முறைமைச் சான்றளிப்புப் பிரிவு

| உந்துகைத் துறை | கருத்திட்டங்கள்/ செயற்றிட்டங்கள் | செயற்பாடுகள் | இலக்கு 2016 | சாதனை 2016 |
|---|---|---|---|---|
| ஏற்றுமதிகளில் தர உறுதிப்படுத்தலை மேம்படுத்தல் (தயாரிப்பு மற்றும் சேவைத் துறை) | முறைமை சான்றளிப்பு சேவைகளின் ஏற்பாடு | சான்றுப்பத்திரங்களை வழங்குதல் | 100 | 120 |
| | | தணிக்கைகளை மேற்கொள்ளுதல் | 800 | 763 |
| | மொத்த ஒதுக்கீடு<br>மொத்தச் செலவினம் | ரூ. 18.360 மில்லியன்<br>ரூ. 12.816 மில்லியன | | |

இ.க.நி.இன் முறைமைச் சான்றளிப்புப் பிரிவானது பின்வருமாறு பதினொரு முகாமைத்துவ முறைமைகள் சான்றளிப்புத் திட்டங்களை தற்போது தொழிற்படுத்துகின்றது:

- ISO 9001 தர முகாமைத்துவ முறைமை
- ISO14001 சூழல் முகாமைத்துவ முறைமை
- ISO 22000 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை
- HACCP உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை
- OHSAS 18001 சான்றளிப்புத் திட்டம்
- GMP சிறந்த தயாரிப்புச் செயற்பாடுகள் திட்டம்
- பெரும் சந்தை சான்றளிப்புத் திட்டம்
- சேதனச் சான்றளிப்புத் திட்டம்
- ISO 50001 சக்தி முகாமைத்துவ முறைமை சான்றளிப்புத் திட்டம்
- உணவுக்கும், குடிபானத்திற்கும் மரக்கறி முறைமைச் சான்றளிப்பு
- விதாத முறைமைச் சான்றளிப்புத் திட்டம்

2016ஆம் ஆண்டின் போது, இலங்கை தத்துவமளிப்பு சபை மற்றும் நெதர்லாந்து RvA ஆகியவற்றிலிருந்து QMS, FSMS, HACCP மற்றும் EMS ஆகியவற்றுக்கான தத்துவமளிப்பு நிலையை முறைமைச் சான்றளிப்பு பிரிவினால் பராமரிக்கக்கூடியதாகவிருந்தது.

**ISO 9001: 2008/ISO 9001: 2015 தர முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம்**

2016ஆம் ஆண்டின் போது, ISO 9001 தர முறைமைகள் சான்றளிப்பிற்கு 50 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 50 தகுந்தளவு தணிக்கைகளும், 46 கட்டம் 1 தணிக்கைகளும், 40 கட்டம் 2 தணிக்கைகளும், 252 கண்காணிப்புத் தணிக்கைகளும், 63 மீள்-மதிப்பீட்டுத் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2016ஆம் ஆண்டின் போது, முப்பத்தினான்கு புதிய சான்றுப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இரு தணிக்கையாளர்களை தலைமை தணிக்கையாளர் அந்தஸ்துக்கும், இரு அவதானிப்பாளர்களை தணிக்கையாளர் அந்தஸ்துக்கும் தரமுயர்த்துவதன் மூலம், தர முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டது. ஆண்டின் போது RvA தத்துவமளிப்புத் திட்டத்தின் கீழ் பத்தொன்பது நோக்கெல்லைத் துறைகளைப் பராமரிப்பது சாத்தியப்பட்டது.

2016ஆம் ஆண்டின் போது, அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், பேரவைகள் ஆகியன உட்பட பலதரப்பட்ட தாபனங்களில் ஒரு தொகை மேம்படுத்தல் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், அதன் விளைவாக அவற்றில் பெரும்பாலானவற்றை இ.க.நி.இனால் சான்றளிக்க முடிந்தது.

மீள்சான்றுப்படுத்தல் தணிக்கையை RvA மேற்கொண்ட அதே வேளை, மீள்-சான்றளிப்பு தணிக்கையை SLAB மேற்கொண்டது. இரு தத்துவமளிப்பு தணிக்கைகளின் கீழ் அலுவலக மதிப்பாய்வும், சாட்சிய தணிக்கைகளும் உள்ளடக்கப்பட்டன

இ.க.நி. மீதான தத்துவமளிப்பின் அதன் நம்பகத்தன்மையை RvA மீள்-உறுதிப்படுத்தியதுடன், ISO/IEC 17021: பாகம் 1: 2015க்கு எதிராக மூன்று வருடங்களைக் கொண்ட மேலும் காலமொன்றுக்கு அதன் தத்துவமளிப்பு நிலையுடன் தொடர்வதற்கு இ.க.நிறுவனத்தை SLAB அங்கீகரித்தது.

### ISO14001: 2004/1SO 14001: 2015 சூழல் முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம்

2016ஆம் ஆண்டின் போது, ISO 14001 திட்டத்தின் கீழ், 18 விண்ணப்பங்கள் கிடைத்தன. 18 தகுந்தளவு தணிக்கைகளும், 12 கட்டம் 1 தணிக்கைகளும், 14 கட்டம் 2 தணிக்கைகளும், 45 கண்காணிப்புத் தணிக்கைகளும் மற்றும் 24 மீள்-சான்றுப்படுத்தல் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், 13 புதிய சான்றுப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

தலைமை தணிக்கையாளர் நிலைக்கு இரு தணிக்கையாளர்களையும், தணிக்கையாய்வு நிலைக்கு இரு அவதானிகளையும் தரமுயர்த்துவதன் மூலம், சூழல் முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டது.

மீள்சான்றுபடுத்தல் தணிக்கையொன்றை RvA மேற்கொண்ட அதேவேளை மீள்-சான்றளிப்பு தணிக்கையை SLAB மேற்கொண்டது. இரு தத்துவமளிப்பு தணிக்ககைளின் கீழ் அலுவலக மதிப்பாய்வும் மற்றும் சாட்சிய தணிக்கைகளும் உள்ளடக்கப்பட்டன.

இ.க.நி. மீதான தத்துவமளிப்பின் அதன் நம்பகத்தன்மையை RvA மீள்-உறுதிப்படுத்தியதுடன், ISO/IEC 17021: பாகம் 1: 2015க்கு எதிராக மூன்று வருடங்களைக் கொண்ட மேலும் காலமொன்றுக்கு அதன் தத்துவமளிப்பு நிலையுடன் தொடர்வதற்கு இ.க.நிறுவனத்தை SLAB அங்கீகரித்தது.

### ISO 22000 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, 32 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. 32 தகுந்தளவு தணிக்கைகளும், 11 கட்டம் 1 தணிக்கையும், 21 கட்டம் 2 தணிக்கைகளும், 162 கண்காணிப்புத் தணிக்கைகளும் மற்றும் 11 மீள்-மதிப்பீட்டுக் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன. மேலும், 54 புதிய சான்றுப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

இரு தணிக்கையாளர்களை தலைமை தணிக்கையாளர் அந்தஸ்துக்கும், இரு அவதானிப்பாளர்களை தணிக்கையாளர் அந்தஸ்துக்கும் தரமுயர்த்துவதன் மூலம், உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டது.

கண்காணிப்புத் தணிக்கைகளை RvA மேற்கொண்ட அதே வேளை, மீள்-சான்றளிப்பு தணிக்கையை SLAB மேற்கொண்டது. இரு தத்துவமளிப்பு தணிக்கைகளின் கீழ் அலுவலக மதிப்பாய்வும், சாட்சிய தணிக்கைகளும் உள்ளடக்கப்பட்டன.

இ.க.நி. மீதான தத்துவமளிப்பின் அதன் நம்பகத்தன்மையை RvA மீள்-உறுதிப்படுத்தியதுடன், ISO/IEC 17021: பாகம் 1: 2015க்கு எதிராக மூன்று வருடங்களைக் கொண்ட மேலும் காலமொன்றுக்கு அதன் தத்துவமளிப்பு நிலையுடன் தொடர்வதற்கு இ.க.நிறுவனத்தை SLAB அங்கீகரித்தது.

### HACCP உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, 16 விண்ணப்பங்கள் கிடைத்தன. 12 தகுந்தளவு தணிக்கைகளும், 33 கட்டம் 1 தணிக்கைகளும், 35 கட்டம் 2 தணிக்கைகளும், 93 கண்காணிப்புத் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மற்றும் 17 மீள்-மதிப்பீட்டுத் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், 16 புதிய சான்றுப்பத்திரங்களும் வழங்ங்கப்பட்டன.

தலைமை தணிக்கையாளர் நிலைக்கு ஒரு தணிக்கையாளரையும்,தணிக்கையாளர் நிலைக்கு ஒரு அவதானிப்பாளரையும் தரமுயர்த்துவதன் மூலம் HACCP உணவுப் பாதுகாப்பு முறைமைச் சான்றளிப்பு திட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டது.

கண்காணிப்புத் தணிக்கைகளை RvA மேற்கொண்ட அதே வேளை, கண்காணிப்பு தணிக்கையை SLAB மேற்கொண்டது. இரு தத்துவமளிப்பு தணிக்கைகளின் கீழ் அலுவலக மதிப்பாய்வும், சாட்சிய தணிக்கைகளும் உள்ளடக்கப்பட்டன.

இ.க.நி. மீதான தத்துவமளிப்பின் அதன் நம்பகத்தன்மையை RvA மீள்-உறுதிப்படுத்தியதுடன், ISO/IEC 17021: பாகம் 1: 2015க்கு எதிராக மூன்று வருடங்களைக் கொண்ட மேலும் காலமொன்றுக்கு அதன் தத்துவமளிப்பு நிலையுடன் தொடர்வதற்கு இ.க.நிறுவனத்தை SLAB அங்கீகரித்தது.

**OHSAS சான்றளிப்புத் திட்டம்**

இந்த சான்றளிப்புத் திட்டத்தின் கீழ், 2016ஆம் ஆண்டின் போது 14 விண்ணப்பங்கள் கிடைத்ததுடன், 06 தகுந்தளவு தணிக்கைகளும், 07 கட்டம் 1 தணிக்கைகளும், 06 கட்டம் 2 தணிக்கைகளும் மற்றும் 22 கண்காணிப்புத் தணிக்கைகளும், 07 மீள்-சான்றளிப்புத் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2016ஆம் ஆண்டின் போது, ஐந்து புதிய கம்பனிகள் சான்றுபடுத்தப்பட்டன.

**சிறந்த தயாரிப்புச் செயற்பாடுகள் (GMP) திட்டம்**

ஆண்டின் போது 131 விண்ணப்பங்கள் கிடைத்ததுடன், 131 தகுந்தளவு தணிக்கைகளும், 65 கட்டம் 1 தணிக்கைகளும், 65 கட்டம் 2 தணிக்கைகளும் மற்றும் 82 கண்காணிப்புத் தணிக்கைகளும், 53 மீள்-சான்றளிப்புத் தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஐம்பத்தைந்து புதிய சான்றுப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகள் மத்தியில், GMP திட்டத்தை மேம்படுத்துவதற்காக முறைமைகள் சான்றளிப்புப் பிரிவு பெருமளவு மேம்பாட்டிலான செயற்றிட்டங்களில் பங்கெடுத்தது.

சிறிய, நடுத்தர வியாபார முயற்சிகள் துறையில் GMP முறைமைகளை மேம்படுத்துவதற்காக விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட GMP சான்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தது.

தும்பு மற்றும் நார்மரச்சோறு மற்றும் உணவு வழங்கல் கைத்தொழில் போன்ற புதிய நோக்கெல்லைத் துறைகளுக்கு GMP சான்றளிப்பு நீடிக்கப்பட்டது.

**பெரும் சந்தை சான்றளிப்புத் திட்டம்**

பெரும் சந்தை சான்றளிப்புத் திட்டத்தை அமுலாக்குவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், ஆண்டின் போது கீல்ஸ் சுப்பர் மார்க்கெட்டின் 34 விற்பனைக்கூடங்கள் சான்றளிக்கப்பட்டன. ஒரு கட்டம் 1 தணிக்கை 01 கட்டம் 2 தணிக்கைகள் மற்றும் 30 கண்காணிப்புத் தணிக்கைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. ஒரு புதிய சான்றுப்பத்திரம் வழங்கப்பட்டது.

**சேதனச் சான்றளிப்பு**

ஒரு மீள்-சான்றளிப்புத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், புதிய சான்றுப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

**சக்தி முகாமைத்துவ முறைமைச் சான்றளிப்புத் திட்டம்**

ஒரு விண்ணப்பம் பெறப்பட்டதுடன், 01 தகுந்தளவு கணக்காய்வும் மற்றும் 17 கண்காணிப்பு தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. புதிய சான்றுப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

**வருமானம்**

2016ஆம் ஆண்டின் போது, முறைமைச் சான்றளிப்புப் பிரிவு ரூபா 56 மில்லியன் என்ற இலக்குக்கு எதிராக ரூபா 75.8 மில்லியன் கொண்ட வருமானத்தைத் தோற்றுவித்துள்ளது.

**வேறு செயற்பாடுகள்**

1. தம்மால் அமுல்படுத்தப்படும் முறைமைச் சான்றளிப்பு திட்டங்களை கவனத்திற்கெடுப்பதற்காக 400க்கு மேற்பட்ட பங்காளர்களின் பங்கெடுப்புடன் “21ஆவது நூற்றாண்டில் நிலைத்திருக்கத்தக்க வெற்றிக்கான முகாமைத்துவ முறைமைகள்” மீதான தேசிய கருத்தரங்கொன்றை முறைமைச் சான்றளிப்புப் பிரிவு நடத்தியது.

2. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கூட்டுமுயற்சியுடன் உணவளித்தல் கைத்தொழில்களுக்காக GMP சான்றளிப்பு மீது தீவகம் பூராகவும் எட்டு பயிற்சி செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன.

3. பலதரப்பட்ட சம்பந்தப்பட்ட கருப்பொருட்கள் மீது முகாமைத்துவ முறைமைக் கணிப்பீட்டாளர்களை அறிவூட்டுவதற்காக ஒரு தொகையிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை முறைமை சான்றளிப்புப் பிரிவு நடத்தியது.

4. உற்பத்தி சான்றளிப்பு பிரிவு, தர உறுதிப்படுத்தல் பிரிவு, பயிற்சிப் பிரிவு, கட்டளை வகுத்தமைத்தல், சந்தைப்படுத்தல் பிரிவு ஆகியவற்றுக்கு தமது சேவைகளை பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் வழங்கினர்.

5. உறுப்பினர்களாகவும், வாக்காளர்களாகவும் சேவையாற்றுவதன் மூலம், ISO தொழில்நுட்பக் குழுக்களுக்கான தொழில்நுட்ப உள்ளீடுகளை முறைமைகள் சான்றளிப்புப் பிரிவைச் சேர்ந்த பெருமளவு அலுவலர்கள் வழங்கினார்கள்.

6. கொரியாவில் நடைபெற்ற TC 207/SC7/WG8 இல் முறைமைகள் சான்றளிப்பு பிரிவின் ஓர் அலுவலர் பங்கெடுத்தார்.

7. இலங்கையிலும் மற்றும் கடல் கடந்த நாடுகளிலும் ISO 14001: 2005 மற்றும் ISO 9001: 2015 ஆகியன மீதான பயிற்சி செயற்றிட்டங்களில் பெருமளவு அலுவலர்களும் மற்றும் பணிப்பாளரும் பங்கெடுத்தனர்.

8. சூழல் முகாமைத்துவம் மீதான தேசிய சாளர குழுவுக்கான செயலாளராக பணிப்பாளர் தொடர்ந்தார்.

9. சுவீடிஷ் சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி முகவராண்மையின் (SIDA) கூட்டுமுயற்சியுடன் சுவீடிஷ் கட்டளைகள் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட கட்டளைப்படுத்தல் ஊடாக வர்த்தகத்தை மேம்படுத்தல் மீதான SESA (தென் மற்றும் தென் கிழக்கு ஆசியா) செயற்றிட்டத்திற்கான இணைப்பாளராக பணிப்பாளர் பணியாற்றினார்.

10. ஐந்து நாடுகளின் பிரதிநிதிகளினால் பங்கெடுக்கப்பட்ட சக்தி முகாமைத்துவ முறைமைகளுக்கான ISO 50001 மற்றும் ISO 50006 மீது ISO பிராந்தியப் பயிற்சியை சர்வதேசக் கட்டளைப்படுத்தல் தாபனத்தின் கூட்டுமுயற்சியுடன் முறைமைகள் சான்றளிப்பு பிரிவு ஒழுங்குபடுத்தியது.

11. அமைச்சுக்களின் பெருமளவு ஆலோசனைக் கூட்டங்களில் பணிப்பாளரும், மற்றும் பிரிவின் சிரேஷ்ட அலுவலர்களும் பங்கெடுத்ததுடன் தமது பெறுமதிமிக்க பங்களிப்பை வழங்கினர்.

| உந்துகைத் துறை | கருத்திட்டங்கள்/ செயற்றிட்டங்கள் | செயற்பாடுகள் | இலக்கு 2016 | சாதனை 2016 |
|---|---|---|---|---|
| தொழில்நுட்ப கட்டளைப்படுத்தலையும் தர முகாமைத்துவத்தையும் வர்த்தகமயப்படுத்தலும், பிரசித்தப்படுத்தலும் | கட்டளைப்படுத்தல்,தர முகாமைத்துவ முறைமைகள் மற்றும் தொடர்பான துறைகள் ஆகியன மீது உயர் முகாமைத்துவத்தையும், நடு முகாமைத்துவத்தையும், கடைத் தளத்தையும் உள்ளடக்கும் கைத்தொழில் ஆளணியினருக்கு பயிற்சித் திட்டத்தை விஸ்தரித்தல் | பயிற்சித் திட்டங்களை நடத்துதல் | 80 | 181 |
| | | பயிற்றுவிக்கப்பட்ட கைத்தொழில் ஆளணியினரின் எண்ணிக்கை | 1,650 | 5,022 |
| | தூர கற்கைத் திட்டங்களை அறிமுகப்படுத்தல் | தூர கற்கைத் திட்டங்களை நடத்துதல் | 06 | 03 |
| | மொத்த ஒதுக்கீடு<br>மொத்தச் செலவினம் | ரூ. 12.275 மில்லியன்<br>ரூ. 13.273 மில்லியன் | | |

## கைத்தொழிலுக்கான/சேவைகளுக்கான பயிற்சி

கைத்தொழில், தனியார்/அரசாங்க துறைத் தாபனங்கள் ஆகியவற்றுக்கும் மற்றும் தனிப்பட்டவர்களுக்கும் சிறந்த தரத்திலான உற்பத்திப்பொருட்களை/சேவைகளை முன்வைப்பதற்கு அவசியமான அறிவுத்தளத்தைப் பகிரும் நோக்கமொன்றுடன் கட்டளைப்படுத்தல் மற்றும் தர முகாமைத்துவம் மீது பயிற்சியை நிறுவனம் வழங்குகின்றது. உயர் முகாமைத்துவம், நடுத்தர முகாமைத்துவம், நிறைவேற்றுனர்கள், மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் கடைத் தள ஊழியர்கள் போன்ற சகல தரங்களையும் கொண்ட ஆளணியினருக்காக ISO 9001 தர முகாமைத்துவ முறைமைகள், ISO 14001 சூழல் முகாமைத்துவ முறைமைகள், ISO 22000 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள், ISO 50001 சக்தி முகாமைத்துவ முறைமைகள் OHSAS 18001 தொழில்நிலை சுகாதார மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள் மற்றும் வேறு தரம் தொடர்பான துறைகள் ஆகியவற்றின் மீது பயிற்சி செயற்றிட்டங்களை இ.க.நி. உள்ளடக்குகின்றது. இந்த செயற்றிட்டங்கள் வேண்டுகோளின் பேரில் வாடிக்கையாளர்களின் இடப்பரப்புக்களில் நடத்தப்படுகின்றன.

2016ஆம் ஆண்டின் போது, நூற்றியெட்டு (108) செயற்றிட்டங்கள் இ.க.நி.இல் நடத்தப்பட்டதுடன், இரண்டாயிரத்து ஐநூற்றி தொன்னூற்றி ஐந்து (2,595) நபர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள். எழுபத்தி மூன்று (73) நிறுவனத்திலான பயிற்சி செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டதுடன், இரண்டாயிரத்து நானூற்றி இருபத்தியேழு (2,427) நபர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

2016ஆம் ஆண்டின் போது, ஐந்து புதிய பயிற்சி செயற்றிட்டங்களில் அதாவது ISO 9001: 2008 முதல் ISO 9001: 2015 மற்றும் ISO 14001: 2005 முதல் ISO 14001: 2015 வரை மாறுமுறை மீதான தேசிய மட்ட செயற்றிட்டங்கள், தொழில் நிலையிலான சுகாதார மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளுக்கான உள்ளக தணிப்பு, உணவு வழங்கல் மற்றும் உணவு விநியோகத்திற்கான சிறந்த தயாரிப்பு நடைமுறைகள் (GMP), 05 தின சான்றளிப்பு பயிற்சிநெறி ஆகியன அறிமுகப்படுத்தப்பட்ட நடத்தப்பட்டன.

ஒவ்வொன்றும் ஒரு வருட காலத்தைக் கொண்ட தர முகாமைத்துவத்தில் இரு டிப்ளோமா செயற்றிட்டங்களும், உணவு தர உறுதிப்பாட்டில் ஒரு டிப்ளோமா செயற்றிட்டமும் கைத்தொழில்/சேவை தாபனங்களின் ஆளணியினருக்காகவும், இத்துறைகளில் அபிவிருத்தித் தொழிலை நோக்குகின்றவர்களுக்காகவும் நடத்தப்பட்டன. தர முகாமைத்துவ செயற்றிட்டங்களில் இரு டிப்ளோமாவில் நூற்றியிருபத்தியிரண்டு (122) பங்கெடுப்பாளர்கள் பங்கெடுத்ததுடன், உணவு தர உறுதிப்படுத்தல் செயற்றிட்டத்தில் டிப்ளோமாவில் நாற்பத்தியாறு (46) பங்கெடுப்பாளர்கள் பங்கெடுத்தனர்.

2016இன் போது, தர முகாமைத்துவம் மீது ஆறு சான்றுப்பத்திர பயிற்சிநெறிகள் நடத்தப்பட்டதுடன், இந்தச் செயற்றிட்டங்களில் நூற்றி எழுபத்தியிரண்டு (172) பங்கெடுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

தூர கற்கை பயிற்சிச் செயற்றிட்டங்களின் கீழ், தர முகாமைத்துவம் மீது மூன்று சான்றுப்பத்திர நெறிகளை இ.க.நி. நடத்தியது.

2016ஆம் ஆண்டுக்கு பயிற்சிச் செயற்பாடுகள் ஊடாக ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூபா 39.74 மில்லியன் ஆகும்.

### அச்சிடுதல் அலகு

2016ஆம் ஆண்டின் போது, பதின்மூன்று (13) கட்டளைகள் அச்சிடப்பட்டதுடன், பயிற்சி செயற்றிட்டங்களுக்கான கையேடுகள், பரீட்சைப் பத்திரங்கள், தர முறைமை ஆவணங்கள், கட்டளைகள் மீதான மேம்படுத்தல் சாதனங்கள், பிரச்சார விடயதானங்கள், தரவுத் தாள்கள் ஆகியவற்றை அடக்கிய சுமார் 517,665 பதிவுகள் அச்சிடப்பட்டன.

# சந்தைப்படுத்தல், மேம்படுத்தல் பிரிவு

| உந்துகைத் துறை | கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் | செயற்பாடுகள் | இலக்கு 2016 | சாதனை 2016 |
|---|---|---|---|---|
| பாவனையாளர் அறிவையும், முன்னேற்றத்தையும் மேம்படுத்தல் | இ.க.நி. சேவைகள் மீது துண்டுப் பிரசுரங்கள் /புதிய செய்தி விடயங்கள்/பத்திரிகை வெளியீடுகள் ஆகியவற்றை வெளியிடுதல் | **இ.க.நி.சேவைகளை முன்னேற்றுதல்** | | |
| | | பொருத்தமான ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பாவனையாளர் தகவலைப் பரப்புதல் | 08 | 15 |
| | பொருட்காட்சிகள் /செயலமர்வுகள் /கூட்டங்கள் /விழிப்பியல் திட்டங்கள் ஆகியவற்றில் பங்கெடுத்தல் | பொருட்காட்சிகள் /செயலமர்வுகள் /கூட்டங்கள் /விழிப்பியல் திட்டங்கள் ஆகியவற்றில் பங்கெடுத்தல் | 05 | 39 |
| | | பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி சார் திட்டங்களை ஒழுங்குபடுத்தல் | 24 | 29 |
| தர முகாமைத்துவத்தில் திறமையைச் சாதிப்பதற்காக உள்நாட்டு தாபனங்களுக்கு ஊக்கமளித்தல் | | தேசிய தர விருதுகள் மீதான செயல்திட்டம் | | |
| | | NQA திட்டங்களை மேம்படுத்தல் (பங்கெடுத்த தாபனங்களின் எண்.) | 10 | 17 |
| | | வழங்கப்பட்ட விருதுகளின் எண்ணிக்கை | 05 | 07 |
| | | சி.ந.வி.துறையை முன்னேற்றுவதற்காக விதார்த்த நிலையங்களுடன் இணைந்து GMP செயற்திட்டங்களை ஒழுங்குபடுத்தல் | 15 | 10 |
| | மொத்த ஒதுக்கீடு<br>மொத்தச் செலவினம் | ரூ. 5.800 மில்லியன்<br>ரூ. 3.614 மில்லியன் | | |

இ.க.நி.இன் கூட்டுப் பிரதிமையை மேம்படுத்துவதும், இ.க.நி.இன் வேறு பிரிவுகளின் சேவைகளை மேம்படுத்துவதுமே இப்பிரிவின் பிரதான பணியாகும்.

வெற்றியீட்டாளர்களை மதிப்பாய்வதற்காக செயற்றிறன் திறமையை சாதிக்கும் தாபனங்களை அங்கீகரிப்பதற்காக இருபத்தியிரண்டாவது வருடமாக இலங்கை தேசிய தர விருது மேற்கொள்ளப்பட்டது. 2016ஆம் ஆண்டு செயற்றிட்டத்திற்காக இலங்கை தேசிய தர விருதுகளின் வெற்றியீட்டாளர்களாக நான்கு (04) தாபனங்களுக்கு விருது வழங்கப்பட்டதுடன், திறமை விருதுகளாக மூன்று (03) விருதுகளும், பதினேழு (17) விண்ணப்பங்களில் இருந்து நான்கு (04) பாராட்டு சான்றுப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

GIZ ஊடாக எள் எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் தயாரிப்பாளர்களுக்காக ஒரு (01) மேம்படுத்தல் செயற்றிட்டம் நடத்தப்பட்டது. கொலன்னாவை பிரதேச செயலகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட சி.ந.தொழில்வாண்மையாளர்களையும் மற்றும் வேறு கைத்தொழில் அதிபர்களையும் அறிவூட்டுவதற்காக ஒரு (01) விழிப்பியல் செயற்றிட்டம் நடத்தப்பட்டது. SLS, GMP, ISO 9001 மற்றும் ISO 22000, மற்றும் தர மற்றும் கட்டளைப்படுத்தல் கருத்துருக்கள் ஆகியன மீது சி.ந.தொ. துறையை அறிவூட்டுவதற்காக மஹரகமை, சிலாபம் மற்றும் களுத்துறை ஆகியவற்றில் மூன்று (03) வியாபார ஆற்றுப்படுத்தல் நிலையங்கள் (தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரிவின் ஆதரவுடன்) நடத்தப்பட்டது. சான்றுப்பத்திரங்களைப் பெறுவதற்காக எட்டு (08) விண்ணப்பங்கள் மேம்படுத்தப்பட்டன.

கட்டளைப்படுத்தல் மற்றும் தர முகாமைத்துவம் மீது உ/த. வர்த்தகப் பிரிவில் உள்ள பாடசாலைச் சிறுவர்களுக்கு அறிவூட்டுவதற்காக நான்கு (04) மேம்படுத்தல் செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன. கிரியுல்லவில் வலய மட்டத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்காக ஒரு (01) மேம்படுத்தல் செயற்றிட்டம் நடத்தப்பட்டது. கமத்தொழில் அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தென் மாகாணத்தின் பாடசாலைச் சிறுவர்களுக்காக ஒரு (01) விழிப்பியல் செயற்றிட்டம் நடத்தப்பட்டது.

'ராஜகாரியட்ட விராமயக்' செயற்றிட்டத்திற்காக இ.க.நி. பணியாளருக்காக வெளியார் வள ஆளணியினால் நடத்தப்படுவதற்காக இரு (02) விரிவுரைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

கல்வி அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பாடசாலை ஆசிரியர்களை அறிவூட்டுவதற்காக இ.க.நி.இன் அலுவலர்களினால் பதினேழு (17) ஆற்றலளவை முன்னேற்றும் செயற்றிட்டங்கள் பொறுப்பேற்கப்பட்டன.

காலியிலும், மற்றும் கேகாலையிலும் கல்வி அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இரு (02) பொருட்காட்சிகளிலும், இலங்கைக் கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு (01) பொருட்காட்சியிலும், யாழ்ப்பாணத்திலும் மற்றும் மட்டக்களப்பிலும் GIZஇனால் ஒழுங்குபடுத்தப்பட்ட இரு (02) வர்த்தகக் கண்காட்சிகளிலும், கோட்டே சென். தோமஸ் கல்லூரி, நுகேகொடை அனுலா கல்லூரி மற்றும் பியகம வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளினால் ஒழுங்குசெய்யப்பட்ட மூன்று (03) கண்காட்சிகளிலும் இ.க.நி. பங்கெடுத்தது. நீர்கொழும்பு நியூஸ்ரெட் கல்லூரியில் நடைபெற்ற பொருட்காட்சியில் ஒரு (01) செயற்றிட்டம் பொறுப்பேற்கப்பட்டது.

உணவு மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் மீதான ஆறாவது துறைசார் தொழில்நுட்பக் குழு (STC) கூட்டம் மற்றும் SAARC பிராந்தியத்தில் கட்டளைகளை இசைவாக்குவதற்காக தென் ஆசிய பிராந்திய கட்டளைகள் தாபனத்தின் கட்டிடப்பொருட்கள் மீதான 4ஆவது STC கூட்டம் ஆகியன இ.க.நி.இனால் விருந்தோம்பப்பட்டதுடன், சந்தைப்படுத்தல், மேம்படுத்தல் பிரிவினால் நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தப்பட்டது.

பழத்தினதும் மற்றும் பழ அடிப்படையிலான உற்பத்திப்பொருட்களினதும் SLS குறித்தல் திட்டத்தின் கீழ் அனுமதிச்சீட்டு உடைமையாளர்கள் மீது பாவனையாளர் விழிப்பியலை உருவாக்குவதற்காக இரு (02) விளம்பரங்கள் (SLS அனுமதிச்சீட்டு உடைமையாளர்களின் பட்டியல்) *'லங்கா தீப'* மற்றும் *'டெயிலி நியூஸ்'* ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.

பொதுமக்கள் மத்தியில் விழிப்பியலை உருவாக்குவதற்காக, பௌத்த கொடி மீது இரு (02) செய்திப்பத்திரிகை விளம்பரங்கள் *'லங்கா தீப'* இல் வெளியிடப்பட்டதுடன், இ.க.நி. இடப்பரப்பிலும் மற்றும் கண்டியிலும் பௌத்த கொடியின் தயாரிப்பாளர்களையும், இறக்குமதியாளர்களையும் மற்றும் வர்த்தகர்களையும் அறிவூட்டுவதற்காக இரு (02) விழிப்பியல் செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன.

வடக்கு மற்றும் மேல் மாகாணங்களில் விநியோகிக்கப்படும் *'தினக்குரல்'* தமிழ் செய்திப்பத்திரிகையில் SLS கட்டாய பொருட்கள் பற்றிய ஒரு (01) செய்திப்பத்திரிகை அனுபந்தம் வெளியிடப்பட்டது.

பல்கலைக்கழகப் பணியாளர்கள்/மாணவர்கள் ஊடாக சி.ந.தொ. துறைக்கான தரம் மற்றும் கட்டளைப்படுத்தல் பற்றிய அறிவைப் பரப்பும் பிரதான நோக்கத்துடன், ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் ஒரு நாள் செயலமர்வொன்று (இ.க.நி. – பல்கலைக்கழகங்கள் - சி.ந.தொ. இணைப்பு செயற்றிட்டம்) ஜேர்மனியின் GIZஉடனான கூட்டுமுயற்சியுடன் இ.க.நி.இனால் ஒழுங்குபடுத்தப்பட்டது.

தேசிய தர வாரத்தின் போது, உலக கட்டளைகள் தினத்தைக் குறிப்பதற்காக இ.க.நிறுவனத்தினுள்ளும், வெளியிலும் பலதரப்பட்ட செயற்பாடுகள் நடத்தப்பட்டன. 2016ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் 'நம்பிக்கையை கட்டளைகள் கட்டியெழுப்புகின்றன' என்பதாகும்.

உலக கட்டளைகள் தினத்தைக் குறிப்பதற்காக, உலக கட்டளைகள் தின செய்தியின் ஆயிரத்திஐந்நூறு (1,500) பிரதிகள் தாபனங்களுக்கும், பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டு, பங்கிடப்பட்டன. உலக கட்டளைகள் தினத்தைக் கொண்டாடுவதற்காக, *'டெயிலி நியூஸ்'* *'லங்கா தீப'*, *'தினக்குரல்'* மற்றும் *'எக்கனமிக் ரைம்ஸ்'* ஆகியவற்றில் நான்கு (04) செய்திப்பத்திரிகை விளம்பர அனுபந்தங்கள் வெளியிடப்பட்டன. உலக கட்டளைகள் தின சுவரொட்டி, செய்தி மற்றும் தேசத்திற்கு இ.க.நி.இனால் வழங்கப்படும் சேவைகள் ஆகியன விளம்பர அனுபந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

உலக கட்டளைகள் தினத்தைக் குறிப்பதற்காக இ.க.நி. இடப்பரப்பில் வைபவமொன்றில் 'Q' கொடி ஏற்றப்பட்டதுடன், பணிப்பாளர் நாயகமும், பிரதிப் பணிப்பாளர் நாயகமும் பணியாளர் முன் உரையாற்றினார்கள். மேலும், ஒரு தொகையிலான கைத்தொழில்கள் தமது இடப்பரப்பில் 'தர வாரத்தின்' போது 'Q' கொடியைப் பறக்கவிட்டதுடன், தமது கொண்டாட்டங்களின் அங்கமாக ஒரு தொகையிலான சமர்ப்பணங்களை ஒழுங்குபடுத்தின. உலக கட்டளைகள் தினத்தைக் குறிப்பதற்காக இ.க.நி. அலுவலர்களினால் ஆறு (06) விருந்தினர் விரிவுரைகள் பொறுப்பேற்கப்பட்டதுடன், இ.க.நி. பணியாளர் மத்தியில் கட்டுரைப் போட்டியொன்றும் நடத்தப்பட்டது.

'பிரமித்தியாய் ஒபாய்' வெளியிடப்பட்டதுடன், பாடசாலைச் சிறுவர்களுக்கு அறிவூட்டுவதற்காக அறுநூறு (600) பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டது. குழு கருத்திட்டப் பணிக்காக பத்து (10) பாடசாலைகளுக்கு இ.க.நி.இன் சேவைகள் பற்றிய தகவல் வழங்கப்பட்டது. புதிதாக வெளியிடப்பட்ட கட்டளைகளையும் மற்றும் அவை மீதான அடிப்படையிலான சான்றளிப்புத் திட்டங்களையும் மேம்படுத்துவதற்காக உத்தேசமான வாடிக்கையாளர்களுக்கு நான்கு (04) இலத்திரனியல் துண்டுப்பிரசுரங்கள் அனுப்பப்பட்டன.



| உந்துகைத் துறை | கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் | செயற்பாடுகள் | இலக்கு 2016 | சாதனை 2016 |
|---|---|---|---|---|
| தொழில்நுட்பத்தை வர்த்தக மயப்படுத்தலும் பிரசித்தப் படுத்தலும் (தரப்படுத்தல் மற்றும் தர முகாமைத்துவம்) | ஆய்வுகூடச் சோதித்தல் சேவைகளை விஸ்தரித்தலும், அலகுகளுக்கு தத்துமளிப்பினை பெறுதலும் | **ஆய்வுகூடச் சேவைகள்**<br>வழங்கப்பட்ட சோதனை அறிக்கைகளுக்கு சோதனைச் சேவைகளை நடத்துதல் | 11,000 | 15,983 |
| | சோதனை சேவைகளை வழங்குதல் | புதிய சோதித்தல் துறைகள் | 14 | 04 |
| | மொத்த ஒதுக்கீடு<br>மொத்தச் செலவினம் | ரூ. 17.970 மில்லியன்<br>ரூ. 16.074 மில்லியன் | | |

## 1. மேலோட்டம்

ஒன்றிணைந்த தேசியக் கட்டளைப்படுத்தல் செயற்பாட்டின் அத்தியாவசியமான மூலப்பொருளொன்றாக செயற்றிறனானதும், தகுதியானதுமான ஆய்வுகூடச் சேவைகளின் ஏற்பாடு விளங்குகின்றது. இந்த ஆய்வுகூடங்களைத் தாபிப்பதற்கும், பராமரிப்பதற்குமான ஏற்பாடுகளை இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் அதிகாரச் சட்டம் (1984இன் இல.6) விளங்குகின்றது. தாபனத்தின் பாரிய அம்சங்களில் ஒன்றாகவும், நாட்டில் மிகவும் பிரசித்தமான சோதித்தல் ஆய்வுகூடமாகவும் விளங்குகின்ற ஆய்வுகூடச் சேவைகள் பிரிவானது பரந்த பலதரப்பட்ட பாவனையாளர் உற்பத்திப்பொருட்களுக்காக விரிவான இணங்குகின்ற சோதித்தல் சேவைகளை வழங்கி இம் முயற்சியில் உதவியளிக்கின்றது. தேசிய மட்டத்தில் கட்டளைப்படுத்தலுக்கும், தர உறுதிப்படுத்தலுக்கும் மற்றும் வேறு தொடர்பான செயற்பாடுகளுக்கும் உதவியளிப்பதற்காக தாபிக்கப்பட்ட முதலாவது தேசிய சோதித்தல் ஆய்வுகூடமாகவும் இந்த ஆய்வுகூடம் விளங்குகின்றது.

## 2. சேவைப் பிரிவு

கீழே வழங்கப்பட்டுள்ளவாறு, ஆறு முழுமையாக நவீனமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடங்களினால் தகுதிவாய்ந்ததும், நம்பகமானதுமான சோதித்தல் சேவைகளை ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு வழங்குகின்றது:

- இரசாயனங்களின் சோதனை
- மின்சார மற்றும், இலத்திரனியல் சோதனை
- உணவின் சோதனை
- பொருட்களின் சோதனை
- நுண்ணுயிரியல் சோதனை
- புடவையின் சோதனை

உள்நாட்டு மற்றும் கடல்கடந்த தொழில்நுட்ப பயிற்சியை வழங்குவதன் மூலம் ஆய்வுகூடச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டனர். மேலும், தேசிய மற்றும் சர்வதேசக் கட்டளை சோதனை முறைமைகளின் பிரகாரம் உற்பத்திப்பொருட்கள்/பண்டங்கள்/பொருட்கள் ஆகியவற்றை சோதிப்பதற்கு/ பகுப்பாய்வதற்கு பணியாட் உறுப்பினர்கள் விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## 3. ஆய்வுகூடத்தின் பாரிய சேவை ஏற்பாடுகள்

தேசத்தின் சேமநலனைப் பேணுவதற்காகவும் சமகாலத்தில் அவர்களின் வாழ்க்கையின் திறமையை மேம்படுத்துவதற்காகவும் நாட்டில் முக்கியமான தேவைப்பாடொன்றாக தரத்திலான உற்பத்தியின் ஆராய்ச்சியை மேற்கொள்வது விளங்குகின்றது. தேசியக் கட்டளைகள் உறுப்பாக பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்காக கைத்தொழில் பங்களிக்கக்கூடியதாக இருக்கும் வகையில் போட்டிக்குரியதாக கைத்தொழில்கள் இருப்பதற்கு ஆதரவளிக்கும் அதேவேளை தேசியக் கட்டளை விபரக்கூற்றுக்களுடன் இணங்கும் விதத்தில் உற்பத்திப்பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதானமாக பாவனையாளர்களின் பாதுகாப்பிற்காக இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்தினாலும், அத்துடன் வேறு அரசாங்க ஒழுங்குவிதிகளினாலும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலைக் கரிசனைக்கெடுத்து மூன்று கட்டாயமான திட்டங்களை இ.க.நி. ஆரம்பித்துள்ளது. கட்டளைச் சோதனை முறையின்(முறைகளின்) பிரகாரம் உற்பத்திப்பொருட்களின்/பொருட்களின் பகுப்பாய்வும் கட்டளை விவரக்கூற்றுடன்(விபரக்கூற்றுக்களுடன்)

உற்பத்திப்பொருட்களின்/பொருட்களின் உறுதித்தன்மையின் சரிபார்த்தலும் அந்த சகல திட்டங்களின் முக்கியமான செயற்பாடாகும்.

தேசிய கட்டளைகள் உறுப்புடன் இணைந்துள்ள ஆய்வுகூடமாக ஆய்வு சேவைகள் பிரிவானது நம்பகமானதும், செம்மையானதுமான சோதனை முடிவுகளை வழங்குவதன் ஊடாக மேற்படி திட்டங்களின் நேர்மையை உறுதிப்படுத்துவதற்கான முக்கியமான தேசிய பொறுப்பொன்றைக் கொண்டுள்ளது. மேற்படி திட்டங்களை பயனுறுதிவாய்ந்ததாக நிருவகிப்பதற்கு ஆய்வுகூடச் சேவைகள் பிரிவு உதவுவது மட்டுமன்றி ஆனால் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு பல் எண்ணிக்கையிலான வழகளில் அரசாங்க நிறுவனங்களுக்கும் அத்துடன் தனியார் துறை தாபனங்களுக்கும் உதவியளிக்கின்றது.

ஆய்வுகூடச் சேவைகள் பிரிவினாலும் மற்றும் அதன் பயனாளர்களாலும் வழங்கப்படும் பாரிய சேவைகள் பின்வருமாறு தொகுக்கப்பட முடியும்:

- உற்பத்திப்பொருட்களினதும், பண்டங்களினதும் மற்றும் பொருட்களினதும் சோதித்தலுக்கான சேவைகள்

  - இ.க.நி.இனால் நிருவகிக்கப்படும் கட்டாயமான திட்டங்களுக்கு உதவுதல்

    அ) உற்பத்திப்பொருள் சான்றளிப்பு குறிகள் திட்டம் (SLS குறி) – தேசிய கட்டளைகளின் பிரகாரம் உற்பத்திப்பொருட்களின் தரத்தை சான்றுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

    ஆ) இறக்குமதி சோதனைத் திட்டம் - தேசிய கட்டளைகளின் பிரகாரம் தரத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதன் ஊடாக இறக்குமதிகளின் கட்டுப்பாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்டது.

    இ) சக்தி செயற்றிறன் சுட்டித்துண்டிடுதல் திட்டம் - மின்சார உற்பத்திப் பொருட்களின் சக்தி செயற்றிறன் செயல் நிறைவேற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

    உற்பத்திப்பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதன் மூலமும், சுகாதார மற்றும் பாதுகாப்பு தேவைப்பாடுகளை உறுதிப்படுத்துவதன் மூலமும் பாவனையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே இந்த தர உறுதிப்படுத்தல் திட்டங்களின் நோக்கமாகும்.

  - ஏனைய தர உறுதிப்படுத்தல் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தல்:

    அ) SLS கட்டளைகளின் வகுத்தமைத்தலுக்கு அவசியப்படும் சம்பந்தப்பட்ட சோதனைத் தரவுகளை வழங்குதல்

    ஆ) வெளியார் தாபனங்களிலிருந்து/கைத்தொழில்களிலிருந்து மாதிரிகளின் பகுப்பாய்வு – அவற்றின் தர மேம்படுத்தலையும், உற்பத்திப்பொருள் முன்னேற்றத்தையும் மற்றும் உற்பத்திப் பொருட்களின் தரஉறுதிப்படுத்தல் செயற்பாடுகளையும் ஆதரவளிப்பதற்காக

    இ) ஏற்றுமதி உற்பத்திப்பொருள் சோதித்தல்

    ஈ) அரசாங்கத் தாபனங்களினால் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வுகளுக்கு மாதிரிகளின் பகுப்பாய்வு

    உ) அரசாங்க/தனியார் துறைத் தாபனங்களின் கொள்வனவு நோக்கங்களுக்காக மாதிரிகளின் பகுப்பாய்வு

    ஊ) நீதித்துறை கட்டளைகளுக்காக கௌரவ சேவைகள் (நீதிமன்றங்களின் கட்டளையினால் மாதிரிகளை சோதித்தல்)

- அதன் சேவைகளின் செயலடைக்கோவையின் மத்தியில் தேசிய சோதனை தகுதியின் முன்னேற்றமானது ஆய்வுகூடத்தின் இன்னொரு முக்கிய பொறுப்பாகும். இது பின்வருமாறு இவ் வழயாக உதவியளிக்கின்றது.

  - சேவைத்துறைக்கு/தயாரிப்பு கைத்தொழில்களுக்கு ஆய்வுகூட சோதித்தல், பொதுவான ஆய்வுகூட நடைமுறைகள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் ஆகியன மீது தொழில்நுட்ப பயிற்சியை வழங்குதல்
  - பட்ட பயிற்சிநெறியில் பயிற்சிநெறி மொடியூல் ஒன்றை முழுமைப்படுத்துவதற்காக பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியை வழங்குதல்

- தர தணிக்கைகள் ஊடாக தர உறுதிப்படுத்தல் நடைமுறைகளை முன்னேற்றுவதற்காக கைத்தொழில்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்

- அரசாங்க/தனியார் துறைத் தாபனங்களில் சோதித்தல்/அளவிடுதல் உபகரணங்களினதும் மற்றும் வேறு விடயங்களினதும் கொள்வனவில் தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்

- அரசாங்க/தனியார் துறை தாபனங்களுக்கு நிறுவனரீதியிலான மட்ட உற்பத்திப்பொருள் விவரக்கூற்றுக்களைத் தயாரித்தல்.

**4. ஆய்வுகூடத் தத்துவமளிப்பு நிலை**

இணக்க மதிப்பீட்டுக்கு இலங்கை தத்துவமளிப்புச் சபையினால் (SLAB) மூன்று ஆய்வுகூடங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளவாறு தத்துவமளிக்கப்பட்டுள்ளன.

- இரசாயன ஆய்வுகூடம்
- உணவு ஆய்வுகூடம்
- நுண்ணுயிரியல் ஆய்வுகூடம்





## இரசாயன ஆய்வுகூடம்

| தத்துவமளிப்பு நிலை | | பிரயோகிக்கத்தக்க சோதனை முறைகள்/கட்டளைகள் |
|---|---|---|
| உற்பத்தி (சோதனைகளின் எண்.) | குறிப்பான சாராமாறி | |
| நீர் மற்றும் கழிவு நீர் (18) | சல்பேற் | APHA 22nd Ed., 4500 $SO_4^{2-}$-E |
| | நிறுத்திவைத்தற் திண்மங்கள் | APHA 22ndEd., 2540 -D |
| | மொத்த கரைந்த திண்மங்கள் | APHA 22ndEd., 2540 -C |
| | கலங்கல் | APHA 22nd Ed., 2130 -B |
| | மக்னீசியம் | APHA 22nd Ed., 3500 –Mg B |
| | நைத்திரேற்றுக்கள் | APHA 22nd Ed., 4500 –$NO_3$ B |
| | pH | APHA 22nd Ed., 4500 –$H^+$B |
| | பொசுபரசு | APHA 22nd Ed., 4500 –PC |
| | குளோரைட் | APHA 22nd Ed., 4500 –$H^+$B CI B |
| | குளோரின், சுயேட்சையான மீதம் | APHA 22nd Ed., 4500 –CI G |
| | மின்சாரக் கடத்தி | APHA 22nd Ed., 2510 –B |
| | வன்தன்மை | APHA 22nd Ed., 2340 –C |
| | காரத்தன்மை, மொத்தம் | APHA 22nd Ed., 2320 –B |
| | அமோனியா, அல்புமினொயிட் | SLS 614: 2013 |
| | அமோனியா, சுயேட்சையான | SLS 614: 2013 |
| | கல்சியம் | APHA 22nd Ed., 3500 - Ca B |
| | சுவை | CH-TM-5.4-001 கூருணர்வு மதிப்பாய்வு * |
| | மணம் | CH-TM-5.4-001 கூருணர்வு மதிப்பாய்வு * |
| உரம் மற்றும் உரக் கலவைகள் (11) | அமோனியம்சார் N | SLS 645: பாகம் 1:2009 B மீதான பிரிவு |
| | மொத்த நைதரசன் | SLS 645: பாகம்1:2009 C மீதான பிரிவு |
| | ஈரப்பதன் | SLS 645: பாகம் 2:1984 |
| | புளரட் | SLS 645: பாகம் 3:2009 முறை 2 |
| | மொத்த பொட்டாசியம் | CH-TM_5.4_003 (SLS 645: பாகம் 4: பிரிவு 01: 1989 மீதான அடிப்படை |
| | நீரில் கரையத்தக்க பொட்டாசியம் | CH-TM_5.4_002 (AOAC 983.02 மீதான அடிப்படை) |
| | மொத்த பொசுபரசு | SLS 645: பாகம் 5:1985 வாசகம் 7 |
| | நீரில் கரையத்தக்க பொசுபரசு | SLS 645: பாகம்5:1985 வாசகம் 8 |
| | சிற்றிக் அமிலம் கரையத்தக்க பொசுபரசு | SLS 645: பாகம் 5:1985 வாசகம் 10 |
| | கல்சியம் | SLS 645: பாகம் 6: 1990 01 மீதான பிரிவு |
| | மக்னீசியம் | SLS 645: பாகம் 6: 1990 01 மீதான பிரிவு |
| மட்பாண்டம் (02) | ஈயம் | SLS 1222: பாகம் 2:2001<br>ISO 6486-1 : 1999 |
| | கட்மியம் | SLS 1222: பாகம் 2:2001<br>ISO 6486-1 : 1999 |

*குடிக்கக்கூடிய நீர், போத்திலிலிடைக்கப்பட்ட குடி நீர் மற்றும் இயற்கையான கனிபொருள் நீர் ஆகியனவற்றுக்கு மட்டுமே கூருணர்வு மதிப்பாய்வின் ஊடாக சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## உணவு ஆய்வுகூடம்

| தத்துவமளிப்பு நிலை | | பிரயோகிக்கத்தக்க சோதனை முறைகள்/கட்டளைகள் |
|---|---|---|
| உற்பத்தி (சோதனைகளின் எண்.) | குறிப்பான சாராமாறி | |
| தேயிலை (08) | உலர் பதார்த்தம் | SLS 28: பாகம் 1: 2008 (ISO 1572:1980 (E)) |
| | திரளில் இழப்பு | SLS 28: பாகம் 2: 2008 (ISO 1573:1980 (E)) |
| | மொத்த சாம்பல் | SLS 28: பாகம் 3: 2008 (ISO 1575:1987 (E)) |
| | மொத்த சாம்பலின் நீரில் கரையத்தக்க சாம்பல் | SLS 28: பாகம் 4: 2008 (ISO 1576:1988 (E)) |
| | அமிலத்தில் கரையாத சாம்பல் | SLS 28: பாகம் 5: 2008 (ISO 1577: 1987 (E)) |
| | நீரில் கரையத்தக்க சாம்பலின் காரத்தனமை | SLS 28: பாகம் 6: 2008 (ISO 1578: 1975 (E)) |
| | நீர் பிரித்தெடுப்பு | SLS 28: பாகம் 7: 2008 (ISO 9768: 1994 (E)) |
| | சுத்திகரிக்கப்படாத நார் | SLS 28: பாகம் 8: 2008 (ISO 15598: 1999 (E)) |
| பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள் | பால் கொழுப்பு | SLS 735 பாகம் 1 : பிரிவு 2 : 2009 (ISO 1736: 2008) |
| | நியமிக்கத்தக்க அமிலத்தன்மை | SLS 735 பாகம் 2: 1987 |
| | ஈரப்பதன் | SLS 735 பாகம் 3 :1987 வாசகம் 4 |
| உண்ணத்தக்க எண்ணெய்கள் மற்றும் கொழுப்புகள் (08) | முறிவுக்குரிய காட்டி | SLS 313 பாகம்1: பிரிவு 5 : 2009 (ISO 6320 : 2000) |
| | சவர்க்காரமயமாக்கல் பெறுமதி | SLS 313 பாகம் 2 : பிரிவு 1: 2014 (ISO 3657 : 2013) |
| | அயோடின் பெறுமதி | SLS 313 பாகம் 2: பிரிவு 2: 2014 (ISO 3961 : 2013) |
| | சுயேட்சையான கொழுப்பு அமிலங்கள் | SLS 313 பாகம் 2: பிரிவு 6: 2009 (ISO 660 : 2009) |
| | கரையாத மாசுக்கள் | SLS 313 பாகம் 3: பிரிவு 4: 2009 (ISO 663 : 2007) |
| | ஈரப்பதன் மற்றும் பொருள் எரிபற்றற்தன்மை | SLS 313 பாகம் 3: பிரிவு 5: 2009 (ISO 662 : 1998) |
| | பெரொக்ஸைட் பெறுமதி | SLS 313 பாகம் 3: பிரிவு 7: 2009 (ISO 3960 : 2007) |
| | சவர்க்காரமயமாகாத பொருள் | SLS 313 பாகம் 4 : பிரிவு 3: 2010 (ISO 3596 : 2000 (E)) |
| சீனி மற்றும் சீனி உற்பத்திப் பொருட்கள் | முனைவாக்கம் | SLS 191: 1989 பிற்சேர்க்கை A |
| | உலர்த்தல் மீதான இழப்பு | SLS 191: 1989 பிற்சேர்க்கை C |

| தத்துவமளிப்பு நிலை | | பிரயோகிக்கத்தக்க சோதனை முறைகள்/கட்டளைகள் |
|---|---|---|
| உற்பத்தி | குறிப்பான சாராமாறி | |
| காபனேற்றப்பட்ட குடிபானங்கள் (SLS 183: 2013)<br>R.T.S. பழப் பானங்கள் (SLS 729: 2010)<br>சிந்தெட்டிக் செயற்கை கோர்டியல்கள் (SLS 221: 2010)<br>பழப் பானம் மற்றும் நெக்டார்கள் (SLS1328: 2008) | காற்றில்வாழுகின்ற தகட்டு எண்ணிக்கை/மி.லீ. | SLS 516: பாகம் 1: பிரிவு1 : 2013 (ISO 4833) |
| | மதுவம் மற்றும் பூஞ்சண எண்ணிக்கை/மி.லீ. | SLS 516: பாகம் 2: பிரிவு 1 : 2013 (ISO 21527) |
| தேயிலை கறுப்பு மற்றும் பச்சை<br>கோழி இறைச்சி (SLS 1161: 2003)<br>கொழுப்பு பரவுகைகள் மற்றும் கலப்பிடப்பட்டகொழுப்பு பரவுகைகள் (SLS 1427: 2011)<br>சாப்பிடுவதற்குத் தயாரான வெளிதள்ளப்பட்ட சிற்றுண்டிகள் (SLS 1162: 1997)<br>பால் மா (SLS 731 : 2008)<br>ஐஸ் கிரீம் (SLS 223: 1989)<br>உலர்த்தப்பட்ட தேங்காய்ப்பூ (SLS 98: 2013)<br>கறுவாடு (SLS 643: 2007)<br>உறைபனியிலான கலப்புக்கள் மற்றும் உறைந்துள்ள குடிபானங்கள் (SLS 967: 1992)<br>இழையத்திலான சோயா புரதம் (SLS 898: 1990)<br>பதப்படுத்தப்பட்ட தானிய அடிப்படையிலான உணவுகள் குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் (SLS 1036: 2011)<br>இனிப்பூட்டப்பட்ட கட்டிப் பால் (SLS 179: 2012)<br>அரைக்கப்பட்ட கறுத்த மிளகு மற்றும் வெள்ளை மிளகு (SLS 1372: 2009)<br>பிஸ்கட் (SLS 251:2010)<br>தேங்காய் பால் மா (SLS 1309: 2007) | காற்றில்வாழுகின்ற தகட்டு எண்ணிக்கை/கி. | SLS 516: பாகம் 1: பிரிவு 1: 2013 (ISO 4833-1: 2013) |
| தேயிலை கறுப்பு மற்றும் பச்சை (SLS 98: 2013)<br>உலர்த்தப்பட்ட தேங்காய்ப்பூ (SLS 643: 2007)<br>கறுவாடு (SLS773: 1987)<br>சீஸ் (SLS 179: 2012)<br>வேர்பர்ஸ் (SLS 1313: 2007)<br>பிஸ்கட் (SLS 251: 2010)<br>அரைக்கப்பட்ட கறுத்த மிளகு மற்றும் வெள்ளை மிளகு (SLS 1372: 2009) | மதுவம் மற்றும் பூஞ்சண எண்ணிக்கை/கி. | SLS 516 : பாகம் 2 : பிரிவு 2 : 2013<br>(ISO 21527 -2: 2008) |
| கொழுப்பு பரவுகைகள் மற்றும் கலக்கப்பட்ட கொழுப்பு பரவுகைகள் (SLS 1427: 2011)<br>பட்டர் (SLS 2 79: 1988)<br>சொக்லேட் (SLS 326: 2015) | மதுவம் மற்றும் பூஞ்சண எண்ணிக்கை/கி. | SL S 516 : பாகம் 2: பிரிவு 2 : 2013<br>(ISO 21527 -2: 2008) |

| | | |
|---|---|---|
| யோகர்ட் (SLS 824: பாகம் 2: 1989) | மதுவம் மற்றும் பூஞ்சண எண்ணிக்கை/கி. | SLS 516 : பாகம் 2: பிரிவு 1 : 2013 (ISO 21527 -2: 2008) |
| குரக்கன் மா (SLS 928: 1991)<br>அரிசி மா (SLS 913:1991) | பூஞ்சண எண்ணிக்கை/கி. | SLS 516 : பாகம் 2: பிரிவு 2 : 2013 (ISO 21527 -2: 2008) |
| காபனேற்றப்பட்ட குடிபானங்கள் (SLS 183 : 2013)<br>R.T.S. பழப் பானங்கள் (SLS 729 : 2010)<br>சிந்தெட்டிக் செயற்கை கோர்டியல்கள் (SLS 221: 2010)<br>பழப் பானம் மற்றும் நெக்டார்கள் (SLS 1328: 2008)<br>பியர் (SLS 234: 1985) | Coliforms MPN/மி.லீ. | SLS 516 : பாகம் 3: பிரிவு 1: 2013 (ISO 4831:2006) |
| தேயிலை கறுப்பு மற்றும் பச்சை<br>சாப்பிடுவதற்குத் தயாரான வெளிதள்ளப்பட்ட சிற்றுண்டிகள் (SLS 1162:1997)<br>கறுவாடு (SLS 643:2007)<br>யோகர்ட் (SLS 824: பாகம் 2: 1989<br>நுண்ணியதாக்கப்பட்ட இறைச்சி (SLS 1218: 2001)<br>சீஸ் (SLS 179: 2012)<br>வேர்பர்ஸ் (SLS 1313: 2007)<br>பிஸ்கட் (SLS 251: 2010)<br>அரைக்கப்பட்ட கறுத்த மிளகு மற்றும் வெள்ளை மிளகு (SLS 1372: 2009)<br>பால் மா (SLS 731: 2008)<br>தயிர் (SLS 824: பாகம் 1 :1989)<br>தேங்காய் பால் மா (SLS 1309: 2007)<br>பேக்கன் (SLS 342: 2001)<br>ஹாம் (SLS 1146: 2001) | E. coli MPN/கி. | SLS 5 16 : பாகம் 12: 2013 (ISO 725 1 : 2005) |
| தேயிலை கறுப்பு மற்றும் பச்சை<br>கொழுப்பு பரவுகைகள் மற்றும் கலக்கப்பட்ட கொழுப்பு பரவுகைகள் (SLS 1427: 2011)<br>பட்டர் (SLS 279: 1988)<br>சாப்பிடுவதற்குத் தயாரான வெளிதள்ளப்பட்ட சிற்றுண்டிகள் (SLS 1162: 1997)<br>பால் மா (SLS 731: 2008)<br>ஐஸ் கிரீம் (SLS 223: 1989)<br>உலர்த்தப்பட்ட தேங்காய்ப்பூ (SLS 98: 2013)<br>கறுவாடு (SLS 643:2007)<br>உறைபனியிலான இனிப்புகள் மற்றும் உறைந்துள்ள குடிபானங்கள் (SLS 967:1992)<br>இழையத்திலான சோயா புரதம் (SLS 898:1990)<br>பதப்படுத்தப்பட்ட தானிய அடிப்படையிலான உணவுகள் குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் (SLS 1036:2011)<br>இனிப்பூட்டப்பட்ட கட்டிப் பால் (SLS 179: 2012)<br>பிஸ்கட் (SLS 251: 2010)<br>தேங்காய் பால் மா (SLS 1309: 2007)<br>வேர்பர்ஸ் (SLS 1313: 2007) | Coliforms MPN/கி. | SLS 516: பாகம் 3: பிரிவு 1 : 2013 (ISO 4831: 2006) |

| | | |
|---|---|---|
| கொழுப்பு பரவுகைகள் மற்றும் கலக்கப்பட்டகொழுப்பு பரவுகைகள் (SLS 1427: 2011)<br>பட்டர் (SLS 279: 1988) | லெப்லோரிக் அங்கிகள்/கி. | SLS 516: பாகம் 11: 1999 |
| கோழி இறைச்சி (SLS 1161:2003)<br>நுண்ணியதாக்கப்பட்டஇறைச்சி (SLS1218:2001)<br>பால் மா (SLS 731 :2008)<br>இனிப்பூட்டப்பட்ட கட்டிப் பால் (SLS 179:2012)<br>பிஸ்கட் (SLS 251:2010)<br>வேர்பர்ஸ் (SLS 1313:2007)<br>கறுவாடு (SLS 643:2007)<br>சீஸ் (SLS 179:2012)<br>ஹாம் (S LS 1146:2001) | *Staphylococcus aureus* /கி. | SLS 516: பாகம் 6: பிரிவு 1: 2013 (ISO 68881: 1999) |
| தேயிலை கறுப்பு மற்றும் பச்சை<br>கோழி இறைச்சி (SLS 1161:2003)<br>சாப்பிடுவதற்குத் தயாரான வெளிதள்ளப்பட்ட சிற்றுண்டிகள் (SLS 1162:1997)<br>பால் மா (SLS 731 : 2008)<br>ஐஸ் கிரீம் (SLS 223:1989)<br>உலர்த்தப்பட்ட தேங்காய்ப்பூ (SLS 98:2013)<br>கறுவாடு (SLS 643:2007)<br>உறைபனியிலான கலப்புக்கள் மற்றும் உறைந்துள்ள குடிபானங்கள் (SLS 967:1992)<br>இழையத்திலான சோயா புரதம் (SLS 898:1990)<br>பதப்படுத்தப்பட்ட தானிய அடிப்படையிலான உணவுகள் குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்கள் (SLS 1036:2011)<br>இனிப்பூட்டப்பட்ட கட்டிப் பால் (SLS 179:2012)<br>அரைக்கப்பட்ட கறுத்த மிளகு மற்றும் வெள்ளை மிளகு (SLS 1372:2009)<br>பிஸ்கட் (SLS 251:2010)<br>தேங்காய் பால் மா (SLS 1309: 2007)<br>பேக்கன் (SLS 342:2001)<br>ஹாம் (S LS 1146:2001)<br>சொக்லேட் (SLS 326:2015)<br>வேர்பர்ஸ் (SLS 1313:2007) | சல்மொனல்லா/கி. | SLS 516: பாகம் 5: பிரிவு 1: 2013 (ISO 6579: 2002) |
| தக்காளி சோஸ்/கெச்அப் (SLS 260:2008) | ஹொவார்ட் பூஞ்சண எண்ணிக்கை | SLS 260: 2008 |
| மிளகாய் சோஸ் (SLS 581:20 08) | ஹொவார்ட் பூஞ்சண எண்ணிக்கை | SLS 581: 20 08 |
| ஜாம்கள், ஜெலிகள் மற்றும் மார்மலேட்கள் (SLS 265 : 2011) | ஹொவார்ட் பூஞ்சண எண்ணிக்கை | SLS 265: 2011 |
| மாங்காய் சட்னி (SLS 446:2001) | ஹொவார்ட் பூஞ்சண எண்ணிக்கை | SLS 446: 2001 |
| தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் (SLS 591:2014) | வர்த்தக மலட்டுத்தன்மை | SLS 516: பாகம் 10: 1983 |

| | | |
|---|---|---|
| நீர்/ஐஸ்<br>போத்தலில் அடைக்கப்பட்ட நீர் (SLS 894:2003)<br>போத்தலில் இயற்கையான கனிப்பொருள் நீர் (SLS 1038:2003)<br>குடி நீர் (SLS 614:2013)<br>பதப்படுத்தலுக்கு ஐஸ் (SLS 971:1992)<br>நீர்/ஐஸ் (EU தேவைப்பாடு) | 22 ºC & 37ºCஇல் காற்றில்வாழுகின்ற தகட்டு எண்ணிக்கை/மி.லீ. | SLS 516: பாகம் 1: பிரிவு 1: 2013 (ISO 4833-1:2013) |
| | Coliforms MF / 250 ml | SLS 1461: பாகம் 1 பிரிவு 3: 2013 |
| | E. coli MF / 250 ml | SLS 1461: பாகம் 1 பிரிவு 3: 2013 |
| | Coliforms MF / 100 ml | SLS 1461: பாகம் 1 பிரிவு 1: 2013 (ISO 9308-1: 2000) |
| | Faecal Ciliforms MF / 100 ml | SLS 1461: பாகம் 1 பிரிவு 1: 2013 (ISO 9308-1:2000) |
| | E. coli MF / 250 ml | SLS 1461: பாகம் 1 Sec 1: 2013 (ISO 9308-1:2000) |
| | Intestinal Enter ococci (Faecal Streptococci) MF/100 ml | ISO 7899-2: 2000 |
| | Coliforms MPN / 100 ml | SLS 1461: பாகம் 1 பிரிவு 3: 2013 |
| | E. coli MPN/ 100 ml | SLS 1461: பாகம் 1 பிரிவு 3: 2013 |
| | Faecal Ciliforms MPN / 100 ml | SLS 1461: பாகம் 1 பிரிவு 3: 2013 |

| செயற்பாடு | மொத்த வருமானம் ரூபா மில். |
|---|---|
| சோதித்தல் சேவைகள் | |
| o உற்பத்தி சான்றளிப்பு<br>o இறக்குமதிச் சோதனை<br>o வெளியார் வாடிக்கையாளர்களுக்கு சேவை<br>o | 160 |
| தொழில்நுட்பப் பயிற்சி | |
| o வெளியார் தாபனங்களின் தொழில்நுட்ப பணியாளரின் பயிற்சி | 0.3 |

# எடையளவியல் பிரிவு

| உந்துகைத் துறை | கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் | செயற்பாடுகள் | இலக்கு 2016 | சாதனை 2016 |
|---|---|---|---|---|
| தொழில்நுட்பத்தை வர்த்தகமயப்படுத்தலும், பிரசித்தப்படுத்தலும் (கட்டளைகள் மற்றும் தர முகாமைத்துவம்) | மதிப்பாராய்தல் சேவைகளை விஸ்தரித்தலும், தத்துவமளிப்பினை பெறுதலும் | **மதிப்பாராய்தல் சேவைகள்** அன்சல் லங்கா லிமிற்றெற், டிப்ட் புரடக்ஸ் லிமிற்றெற் போன்ற வெளியார் வாடிக்கையாளர்களுக்கு மதிப்பாராய்தலை மேற்கொள்ளுதல் | 3,300 | 3,707 |
| | கைத்தொழில் மதிப்பாராய்தல் சேவைகளை வழங்குதல் | இ.க.நி. ஆய்வுகூடத்திற்கு மதிப்பாராய்தலை மேற்கொள்ளுதல் | | |
| | மொத்த ஒதுக்கீடு<br>மொத்தச் செலவினம் | ரூ. 3.380 மில்லியன்<br>ரூ. 0.872 மில்லியன் | | |

இலங்கையின் தேசிய அளவீட்டு முறைமையின் முக்கியமான அங்கமொன்றாக இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் எடையளவியல் பிரிவு விளங்குகின்றது. கைத்தொழில் மற்றும் வர்த்தகம், அளவீட்டு முறைமைகளைத் தொழிற்படுத்தல் சோதித்தல் மற்றும் மதிப்பாராய்தல் ஆய்வுகூடங்கள் ஆகியனவற்றின் மத்தியில் செல்லுபடியான அளவீட்டு நடைமுறைகளைப் பரப்புவதே அதன் ஆரம்பநிலையான நோக்கமாகும். சக்தி, திரள், நீளம், அமுக்கம் மற்றும் வெப்பநிலை ஆகியனவற்றின் துறைகளில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ISO/IEC 17025 தத்துவமளிப்பினைக் கொண்டுள்ளது.

2016ஆம் ஆண்டின் போது, பிரிவினால் வழங்கப்பட்ட செயற்பாடுகளினதும், சேவைகளின் பெறுமதியினதும் சாராம்சம் ஒன்று கீழே வழங்கப்பட்டுள்ளது:

| செயற்பாடு | வழங்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ. மில்.) |
|---|---|---|
| 1 மதிப்பாராய்தல் மற்றும் அளவிடுதல் | | |
| 1.1 உள்ளக (ஆய்வுகூடச் சேவைகள் பிரிவுக்கு) | 206 | 1.2 |
| 1.2 வெளிவாரி (கைத்தொழில் மற்றும் சேவைத் துறை) | 3,119 | 24 |
| மொத்தம் | 3,325 | 25.2 |
| 2. மேற்கொள்ளப்பட்ட செயலமர்வுகள் | 02 | 0.33 |

# ஆவணப்படுத்தல், தகவல் பிரிவு

| உந்துகைத் துறை | கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் | செயற்பாடுகள் | இலக்கு 2016 | சாதனை 2016 |
|---|---|---|---|---|
| தொழில்நுட்பத்தை வர்த்தக மயப்படுத்தலும் பிரசித்தப்படுத்தலும் (தரப்படுத்தல் மற்றும் தர முகாமைத்துவம்) | ஆவணப்படுத்தல் மற்றும் தகவல் சேவைகளை விஸ்தரித்தல் | வெளிநாட்டு, உள்நாட்டு கட்டளைகளின் விற்பனை | 3,975 | 6,339 |
| | மொத்த ஒதுக்கீடு<br>மொத்தச் செலவினம் | ரூ. 12.350 மில்லியன்<br>ரூ. 15.537 மில்லியன் | | |

ISOஇன் உறுப்புக்களாக தேசிய மட்டத்தில் சமூகத்திற்கான கட்டளைகள், தொழில்நுட்ப ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் தொடர்பான செயற்பாடுகள் ஆகியன மீதான தகவலைப் பரப்புவதற்கு தேசிய கட்டளைகள் உறுப்புக்கள் பொறுப்பானவையாகும். இந்நோக்கத்திற்கு சேவையளிப்பதற்காக ஆ.த. பிரிவு குறித்துரைக்கப்பட்டுள்ளது.

கட்டளைப்படுத்தலினதும் மற்றும் தர முகாமைத்துவத்தினதும் மீதான இலக்கியத்திற்கு ஒரு நிறுத்துகையிலான தகவல் நிலையமொன்றாக இ.க.நி.இன் ஆ.த. பிரிவு விளங்குகின்றது. நிபுணத்துவத்தைக் கொண்ட தகவல் நிலையமொன்றாக தேசிய, சர்வதேச மற்றும் வெளிநாட்டு தேசிய கட்டளைகளின் விரிவானதும், புதுப்பிக்கப்பட்டதுமான சேகரிப்பினையும் மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கு பயனுள்ள தொழில்நுட்ப ஒழுங்குவிதிகளையும் கொண்ட கட்டளைகள் மற்றும் தர முகாமைத்துவம் மீதான வளங்களின் ஒரு புதுமையான சேகரிப்பொன்றை வாடிக்கையாளர்களுக்கு அது வழங்குகின்றது.

WTO உடன்படிக்கையினதும் மற்றும் WTO விசாரணைப் புள்ளியினதும் கீழ் இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் மாதாந்த ஈ-மெயில் ஊடாக இலங்கையின் பங்காளர்களுக்கு WTO அறிவித்தல்களை இ.க.நி. பங்கிட்டதுடன், இ.க.நி. இணையதளத்திலும் பதிவேற்றியது. தேசிய, வெளிநாட்டு மற்றும் சர்வதேச கட்டளைகள் மீதான சகல தொழில்நுட்ப விசாரணைகளுக்கும் ஆ.த. பிரிவு பதிலிறுத்துள்ளது.

நூலகமானது பொதுமக்களுக்கு இலவசமாக திறந்திருப்பதுடன், ஆண்டின் போது கிட்டுகின்ற வளங்களை கொள்வனவு செய்வதற்கும் பார்வையிடுவதற்கும் நூலகத்திற்கு 2,617 வாடிக்கையாளர்கள் வருகை தந்தனர்.

செய்திப்பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்ற இ.க.நி. தொடர்பான ஏதேனும் தகவல் 'ஸ்கான்' செய்யப்பட்டு ஈ-மெயில் ஊடாக உள்ளகப் பணியாளருக்குப் பரப்பப்படுகின்றது. 2016ஆம் ஆண்டில், அனுப்பப்பட்ட செய்தி நறுக்குகளின் எண்ணிக்கை 242 ஆகும். வேறு கட்டளைகள் தாபனங்களின் செய்தியை உள்ளடக்கும் "WSSN News" என்ற செய்தித்திரட்டு தயாரிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கும் மற்றும் உள்ளகப் பணியாளருக்கும் அனுப்பப்பட்டது. ஏனைய செய்தித் திரட்டுக்களாக 30 Library Alerts, 12 Library News மற்றும் 12 Standards Alerts ஆகியன தயாரிக்கப்பட்டு, ஈ-மெயில் ஊடாக உள்ளகப் பணியாளருக்கும் மற்றும் வெளியிலான வாடிக்கையாளர்களுக்கும் அனுப்பப்பட்டன.

பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளவாறு, கட்டளைகளினதும் மற்றும் வேறு சேவைகளினதும் விற்பனையிலிருந்து ரூபா 18 மில்லியன் கொண்ட வருமானமொன்றை ஆவணப்படுத்தல், தகவல் பிரிவு பதிவுசெய்தது.

| | தோற்றுவிக்கப்பட்ட வருமானம் (மில்.) |
|---|---|
| உறுப்புரிமை | 0.02 |
| **கட்டளைகளின் விற்பனை** | |
| இலங்கைக் கட்டளைகள் | 9 |
| பிரிட்டிஷ் கட்டளைகள் | 4.2 |
| ISO கட்டளைகள் | 2 |
| ASTM கட்டளைகள் | 0.7 |
| IEC கட்டளைகள் | 1.6 |
| வேறு வெளிநாட்டுக் கட்டளைகள் | 0.2 |
| சர்வதேசச் செய்திகள் | 0.07 |
| சுவரொட்டிகள் | 0.02 |
| Q கொடிகள் | 0.01 |

# உற்பத்திச் சான்றளிப்புப் பிரிவு

| உந்துகைத் துறை | கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் | செயற்பாடுகள் | இலக்கு 2016 | சாதனை 2016 |
|---|---|---|---|---|
| உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களில் தர உறுதிப் படுத்தலை மேம்படுத்தல் | உற்பத்தி சான்றளிப்பு சேவைகளின் ஏற்பாடு | **உற்பத்தி சான்றளிப்பு** | | |
| | | அ) உத்தரவுப்பத்திரத்தை வழங்குதல் (SLS குறி) | 120 | 141 |
| | | ஆ) சுகாதார அமைச்சுக்கு போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் மீதான பரிந்துரைப்பு | சுகாதார அமைச்சினால் அனுப்பப்படும் விண்ணப்பங் களைப் பொறுத்து | 36 |
| | | இ) அ) மற்றும் ஆ) ஆகியவற்றின் தொழிற்சாலைச் சோதனைகளை மேற்கொள்ளுதல் | 450 | 353 |
| | மொத்த ஒதுக்கீடு<br>மொத்தச் செலவினம் | ரூ. 3.270 மில்லியன்<br>ரூ. .732 மில்லியன் | | |

தர உறுதிப்படுத்தல் பிரிவு தற்போது SLS குறிகள் திட்டம் மற்றும் சுகாதார அமைச்சின் சார்பில் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் பதிவுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் விண்ணப்ப தாரிகளின் தொழில்நுட்ப மதிப்பாய்வு ஆகிய இரு திட்டங்கள் பிரிவினால் தொழிற்படுத்தப்படுகின்றது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தயாரிப்பாளர்களுக்காக SLS குறிகள் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

**அ. SLS குறிகள் திட்டம்**

இவ்வருடத்தின் போது, உள்நாட்டுத் தயாரிப்பாளர்களிடமிருந்து, 170 விண்ணப்பங்களும், வெளிநாட்டுத் தயாரிப்பாளர்களிடமிருந்து 69 விண்ணப்பங்களும் கிடைத்தன.

உற்பத்தி இணக்கத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக திட்டத்தின் கீழ் 2,467 மாதிரிகள் பெறப்பட்டன. இது அனுமதிச்சீட்டுக்களை வழங்கும் நோக்கத்திற்காக உற்பத்தி தர மதிப்பாய்வுக்காகப் பெறப்பட்ட மாதிரிகளையும், திட்டத்தின் கீழ் அனுமதிச்சீட்டுக்களைக் கொண்டுள்ள தயாரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளையும் உள்ளடக்குகின்றது.

ஆண்டின் போது,நூற்றி நாற்பத்தியொரு புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன், 430 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன.

ஆண்டின் போது உற்பத்தி சான்றுப்படுத்தல் திட்டத்தில் பின்வரும் புதிய உற்பத்திப்பொருட்கள் பிரவேசித்தன:
- தயாரிக்கப்பட்ட மணல்
- நீர் விநியோகத்திற்கான பொலிதிலீன் (PE) குழாய்கள்
- நீர் விநியோகத்திற்கான பொலிதிலீன் (PE) பொருத்திகள்
- மணமூட்டப்பட்ட பால்
- பாம் ஒலியன்

SLS குறிகள் திட்டத்திலிருந்து தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 132.0 மில்லியன் கொண்ட இலக்குக்கு எதிராக ரூபா 137.8 மில்லியன் ஆகும்.

**ஆ. போத்தலில் அடைக்கப்பட்ட நீர் பதிவுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரிகளின் தொழில்நுட்ப மதிப்பாய்வு**

சுகாதார அமைச்சுக்கும், இ.க.நி.க்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றின் கீழ், சுகாதார அமைச்சினால் 2005 உணவு (போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதிப்படுத்தப்பட்ட நீர்) ஒழுங்குவிதியின் பிரகாரம், தொழிற்படுத்தப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் பதிவுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரிகளின் தொழில்நுட்ப மதிப்பாய்வு இ.க.நி.இனால் மேற்கொள்ளப்படுவதுடன், பதிவு நோக்கங்களுக்காக அமைச்சுக்கு சிபார்சுகள் அனுப்பப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், ஆண்டின் போது 10 விண்ணப்பங்கள் கிடைத்தன. ஆண்டின் போது அவசியமான மாதிரிப்படுத்தல் மற்றும் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 36 விண்ணப்பங்கள் மீது சிபார்சுகள் செய்யப்பட்டன.

இத்திட்டத்தின் ஊடாகத் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 0.1 மில்லியன் என்ற இலக்குக்கு எதிராக ரூபா 0.13 மில்லியன் ஆகும்.

**பிரிவின் முழுமையான வருமானம்**

இத்திட்டத்தின் ஊடாகத் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 133.6 மில்லியன் என்ற இலக்குக்கு எதிராக ரூபா 138.7 மில்லியன் ஆகும்.

# நிருவாகப் பிரிவு

நிறுவனத்தின் சகல நிருவாகப் பணிக்கும் பிரிவு பொறுப்பானதாகும். ஊழியர்களின் ஆட்சேர்ப்புக்கள், பதவியேற்றங்கள், பயிற்சி/தணிக்கைகள் /கருத்தரங்குகள் ஆகியன தொடர்பான கடல்கடந்த நாடுகளுக்கான வருகைதரல்கள், சகல தனிப்பட்ட கோவைகள், போக்குவரத்து, கொள்வனவு மற்றும் நிருவாக விடயங்கள் தொடர்பான நாளாந்த கிரமமான பிரச்சனைகள் ஆகியவற்றினை ஒழுங்குபடுத்தல் ஆகியன பிரிவின் பணிகளாகும்.

2016ஆம் ஆண்டின் போது மூலதன கொள்வனவுகளின் கீழ் ரூபா 61.02 மில்லியன் பெறுமதியைக் கொண்ட ஆய்வுகூடங்களும் மற்றும் ரூபா 32.35 மில்லியன் பெறுமதியைக் கொண்ட வேறு மூலதனச் சாதனங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

மேலும், கடல் கடந்த நாடுகளுக்கான தணிக்கைகளுக்கும், பயிற்சிக்கும் அலுவலர்களை அனுப்புவதில் நிருவாகப் பிரிவு உதவியளித்துள்ளது.

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, வெற்றிடங்களை நிரப்புவதற்காக பின்வரும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன:

| | | |
|---|---|---|
| 1. | பிரதி பணிப்பாளர் நாயகம் | 01 |
| 2. | பணிப்பாளர் | 01 |
| 3. | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) | 06 |
| 4. | சிற்றூழியர் | 05 |

பாதுகாப்பு, உணவகம், போக்குவரத்து மற்றும் தூய்மைப்படுத்தல் ஆகியவற்றின் வெளிவாரியிலான சேவை ஒப்பந்தங்கள் வெற்றிகரமான சேவை வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டன. முன்னாள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி எல்.என்.செனவீரவின் இளைப்பாறுதலும் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றிய திரு.ரி.ஜி.ஜி.தர்மவர்தன பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்கான நியமனமும் 2016ஆம் ஆண்டின் போது இடம்பெற்றன.

உற்பத்தி சான்றளிப்பு, பயிற்சிப் பிரிவினால் புதிதாக நிருமாணிக்கப்பட்ட 08ஆவது தள அலுவலகப் பகுதிக்கு குடியிருந்தமை ஆண்டின் குறிப்பிடத்தக்க நிகழ்வொன்றாகும்.

நலன்புரி சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இரவு முழுவதுமான பிரித் வைபவம் மற்றும் தானம் வழங்குதல், விளையாட்டுப் போட்டி, ஒரு நாள் சுற்றுலா மற்றும் 03 நாட்களைக் கொண்ட சுற்றுலா ஆகியன பணியாட் உறுப்பினர்களின் முழுமையான ஒத்துழைப்புடனும், பங்கெடுப்புடனும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

இ.க.நி.இன் துரிதமாக வளர்ச்சியுறும் செயற்பாடுகளின் ஆகக்கூடுதலான கிராக்கியை நிறைவேற்றுமுகமாக அதன் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை நிறைவேற்றுவதற்காக அதன் ஆழமான பங்களிப்பினை நிருவாகப் பிரிவு வழங்கியுள்ளது.



# தகவல் தொழில்நுட்ப அலகு

ஆண்டின் போது நிறுவனத்திற்கு பின்வரும் சேவைகளை தகவல் தொழில்நுட்ப அலகு வழங்கியது:

**01. மென்கணியப் பொதிகளின் கண்காணித்தல் மற்றும் பராமரிப்பு**

- நிதிசார் முறைமைப் பொதிகள்
  - * பொதுப் பேரேட்டு முறைமை (GL)
  - * கடன்வழங்குனர் முறைமை (CS)
  - * கடன்தருனர் முறைமை (DS)
- சம்பள முறைமை
- பொருட்பட்டியல் கட்டுப்பாட்டு முறைமை
- இறக்குமதிச் சோதனைத் திட்ட மென்கணிய முறைமை
- கடல்கடந்த நாடுகள் தணிக்கை முகாமைத்துவ முறைமை
- த.தொ. பொருட்பட்டியல், பராமரிப்பு முறைமை
- சான்றுப்பத்திர அச்சிடல் மென்கணிய முறைமை
- பவர் ஏஷியா பிறை. லிமிற்றெற்றினால் விருத்தி செய்யப்பட்ட சமநிலையிலான புள்ளிஅட்டை மென்கணியம்
- பிரிவுகளுக்கான சமநிலையிலான புள்ளிஅட்டை தரவு கண்காணித்தல் முறைமை

**02. புதிய மென்கணிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள்**

அ) P.C பிரிவுக்கு சான்றுப்பத்திர அச்சிடுதல் மென்கணியம்
ஆ) ஆய்வுகூடப் பிரிவுக்கு செயல்நிறைவேற்றல் கண்காணித்தல் முறைமை

**03. இ.க.நி. இணையதள அபிவிருத்திக் கருத்திட்டங்கள்**

அபிவிருத்தி வேலையின் சுமார் 60% முடிவடைந்துள்ளது

**04. இ.க.நி. செயற்பாடுகளுக்கு ஒன்றிணைந்த முகாமைத்துவத் தகவல் மென்கணிய (IMIS) அபிவிருத்திக் கருத்திட்டம்**

கொள்வனவுக் குழுவினால் கருத்திட்டத்திற்காக தகவல் தொழில்நுட்ப உசாவலர் தெரிவுசெய்யப்பட்டு, வழங்கப்பட்டுள்ளது.

**05. தனிப்பட்ட கணனிகளையும், மொனிட்டர்களையும், பிரின்டர்களையும், சேவர்களையும், மடிக்கணனிகளையும் மற்றும் வலைப்பின்னல் சாதனங்களையும்/கருவிகளையும், ஸ்கானர் சாதனங்களையும்/கருவிகளையும் பழுதுபார்த்தல்**

| விடயம் | கவனிக்கப்பட்ட பிரச்சனைகளின் எண். |
|---|---|
| தனிப்பட்ட கணனிகள் | 170 |
| சேவர்கள் | 30 |
| மொனிட்டர் | 25 |
| மடிக்கணனி | 30 |
| பிரின்டர் | 80 |
| N/W உபகரணம் (Firewall/Routers Switchers/Access Points/Patch panel) | 20 |
| ஸ்கானர் | 05 |

**06. சேவர் மென்கணியத்தைக் கண்காணித்தலும், பராமரித்தலும்**

| விடயம் | கவனிக்கப்பட்ட பிரச்சனைகளின் எண். |
|---|---|
| ஈ-மெயில் | 50 |
| இன்ரர்நெற் | 55 |
| **நிதிசார் அனுமானங்கள்** | | |
| வட்டியின் வீதம் (வரியின் நிகர) | 9% | 9% |
| எதிர்பார்க்கப்பட்ட சம்பள ஏற்றம் % | 2% | 2% |
| **குடிசன அனுமானங்கள்** | | |
| பணியாளர் மொத்தக் காரணி % | 1% | 1% |
| இளைப்பாற்று வயது | 60 ஆண்டுகள் | 60 ஆண்டுகள் |
| நடைமுறையிலான கரிசனையொன்றாக நிறுவனம் தொடரும் | | |

## இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்
### நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2016

### குறிப்பு 14 – கொடுப்பனவுக்குரியவை

| | குறிப்பு | 2016 ரூபா சதம் | 2015 ரூபா சதம் |
|---|---|---|---|
| கடன்வழங்குனர்கள் | 14.1 | 9,983,421.05 | 10,724,497.29 |
| நிறுத்திவைத்தல் | 14.2 | 13,112,538.87 | 9,833,957.25 |
| மீளளிக்கத்தக்க வைப்புக்கள் | 14.3 | 771,000.00 | 477,000.00 |
| SME கருத்திட்டம் | | 4,126,759.83 | 4,126,759.83 |
| பிணைப்பண வைப்புக்கள் | 14.4 | 19,856.57 | 40,140.78 |
| ரத்துசெய்யப்பட்ட காசோலைகள் | | 2,561,836.10 | |
| CDAஉடன் GMPஇலிருந்து கருத்திட்டம் | | 6,020.00 | 6,020.00 |
| அமைச்சு நிதிப்படுத்தலிலான கருத்திட்டம் | | 750,981.00 | 750,981.00 |
| கட்டளைகள் கருத்திட்டத்தின் பொருளாதார நன்மை | | 178,787.71 | 178,787.71 |
| GIZ சான்றளிப்பு செயற்பாடுகள் | | 317,702.43 | 1,661,250.06 |
| முன்கூட்டியே பெறப்பட்ட வருமானம் | | 35,649,238.00 | 31,734,688.00 |
| | | 67,478,141.56 | 59,534,081.92 |

### குறிப்பு 14.1 – கடன்வழங்குனர்கள்

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| தொழில் கடன்வழங்குனர்கள் | குறிப்பு 14.1 | 1,197,464.17 | 574,925.11 |
| கொடுப்பனவுக்குரிய சம்பளம் | | 45,436.30 | 77,306.20 |
| ஊ.சே.நி. | | 3,415,583.92 | 431,869.16 |
| ஊ.ந.நி. | | 397,807.07 | 3,598,909.77 |
| கொடுப்பனவுக்குரிய VAT | | 4,124,782.27 | 5,470,443.41 |
| **சமபளத் தணிப்பு** | | | |
| மருத்துவக் காப்புறுதி | | 88,832.00 | |
| மரண நன்கொடை | | 200.00 | 240.00 |
| தொழிற்சங்கங்கள் | | | 4,500.00 |
| சில்லறை | | 36,880.00 | 25,020.00 |
| நலன்புரி | | 30,782.02 | 19,462.26 |
| PAYE வரி | | 12,650.71 | 17,612.90 |
| கொடுப்பனவுக்குரிய WHT | | 10,969.11 | |
| கோரப்படாத நன்மைகள் - திரு.ஜ.பி.சிறிபால | | 304,417.00 | 304,417.00 |
| உணவு, விவசாயத் தாபனம் | | 258,125.00 | 139,350.00 |
| சுவீடிஷ் கட்டளைகள் நிறுவனம் | | 59,491.48 | 60,441.48 |
| | | 9,983,421.05 | 10,724,497.29 |

### குறிப்பு 14.1 – வர்த்தக கடன்வழங்குனர்கள்

| | 2016 | 2015 |
|---|---|---|
| அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒ.ஃப் சிலோன் லிமிற். | | 138,000.75 |
| சிலோன் பிசினஸ் அப்ளைன்சஸ் | 45,080.00 | |
| ஹம்சன்ஸ் இன்ரர்நஷனல் (பிறை.) லிமிற். | | 285,981.86 |
| கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் | 83,030.00 | |
| கே.ஜே.பவர் செக்கியூரிட்டி சேர்விசஸ் (பிறை.) லிமிற். | 635.00 | 635.00 |
| லீ.ஃப் டி பிறைவேற் லிமிற். | 175,000.00 | |
| ML மோட்டர்ஸ் | | 64,575.00 |
| மெற்ரோபொலிற்றன் கொமினிக்கேஷன் (பிறை.) லிமிற். | | 13,186.80 |
| இலங்கை அரச வாத்தக (பொது) கூட்டுத்தாபனம் | | 16,316.00 |
| எஸ்.எஸ்.கொத்தலாவ | 76,047.00 | |
| எஸ்.ஆர்.தினமித்ர | 78,162.00 | |
| எஸ்.ஜி.கேட்டர்ஸ் | 300.00 | 300.00 |
| சமீர கேட்டர்ஸ் | | 2,205.00 |
| இலங்கை தத்துவமளிப்புச் சபை | 187,755.11 | |
| இ.க.நி. நலன்புரிச் சங்கம் | 68,273.00 | |
| SGS லங்கா (பிறை.) லிமிற். | 74,294.96 | |
| ரொயோட்டா லங்கா (பிறை.) லிமிற். | 334,789.30 | |
| யுனைட்டெட் மோட்டார்ஸ் லங்கா PLC | 74,097.80 | 12,313.58 |
| வை நொட் ரெஸ்ரோரண்ட் | | 14,555.00 |
| வின்சொப்ட் ரெக்னொலஜீஸ் (பிறை.) லிமிற். | | 26,856.12 |
| | 1,197,464.17 | 574,925.11 |

## இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்

### நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2016

**குறிப்பு 14.2 – தடுத்துவைத்தல்கள்**

| | 2016 ரூபா சதம் | 2015 ரூபா சதம் |
|---|---|---|
| கெயின் ஸ்டீல்- களஞ்சியத்தினதும், இறாக்கைகளினதும் நிருமாணம் | | 65,223.56 |
| கெயின் ஸ்டீல்- களஞ்சியத்தின் நிருமாணம் | | 11,688.53 |
| ஹெம்சன் இன்ரர்நஷனல் - மின்சார ஒவன் | 20,091.00 | 20,091.00 |
| PC ஹவுஸ் - 21 கணனிகள் | 99,750.00 | 99,750.00 |
| கெயின் ஸ்டீல் பப்ரிக்கேஷன்ஸ் - இரசாயன ஆய்வுகூடத்திற்கு நிருமாண வேலை | | 17,628.75 |
| E-W இன்போமேஷன் சிஸ்ரம் | 97,000.00 | 97,000.00 |
| E-W இன்போமேஷன் சிஸ்ரம் - 04 கணனிகள் | 24,250.00 | 24,250.00 |
| சொப்ட்லொஜிக் - 20 கணனிகள் | | 97,000.00 |
| ஜோன் கீல்ஸ் - தன்னியக்க முறைமைகள் டிஜிட்டல் இரட்டிப்பாக்கி | 22,950.00 | 22,950.00 |
| கண்டி கொன்ஸ்ரக்ஷன் - கோரல் இல.1-2 | 674,498.43 | 674,498.43 |
| **2015** | | |
| கண்டி கொன்ஸ்ரக்ஷன் - கோரல் இல.3-5 | 3,688,999.98 | 3,688,999.98 |
| பவர் ஏஷியா – சமநிலை புள்ளி அட்டை | 307,500.00 | 307,500.00 |
| இன்ஸ்ரெக் லிமிற். – தரைஓட்டு பரிமாணத்தை நிர்ணயித்தல் | | 2,093,125.00 |
| பூமி ரெக் (பிறை.) லிமிற். – ரின்ரோ மானி | | 68,500.00 |
| பகுப்பாய்வு உபகரணங்கள் - உலர்த்தும் சூட்டடுப்பு | | 52,743.75 |
| பகுப்பாய்வு உபகரணங்கள் - அடைகாப்பான் | | 45,546.25 |
| சொப்ட்லொஜிக் - 05 கணனிகள் | | 24,250.00 |
| எக்ஸ்சோடஸ் லேப் - மேலேற்றி ஓட்டோ கிளேவ் | | 48,000.00 |
| சொப்ட்லொஜிக் - 05 கணனிகள் | 24,250.00 | 24,250.00 |
| டெக்னோசொலுஷன் - கதிர் குறைந்த குளிரூட்டி | 44,300.00 | 44,300.00 |
| பூமி ரெக் (பிறை.) லிமிற்.– சுத்திகரிக்கப்படாத தும்பு பிரித்தெடுப்பான் | 199,150.00 | 199,150.00 |
| சொப்ட்லொஜிக் - 45 கணனிகள் | | 200,250.00 |
| ரிச்சோட்சன் புரஜெக்ட்ஸ் - டிஜட்டல் ரோக் மானி | | 25,000.00 |
| ரோச் புரஜெக்ட்ஸ் - ஒன்றிணைக்கும் ஸ்பெயர் | 1,796,012.00 | 1,796,012.00 |
| இன்ட்.கலிபிரேஷன் அன்ட் சேர்விசஸ் சென்ரர் - ஜோடியாக்கும் இயந்திரம் | | 46,250.00 |
| சிவிட்சன் ரெக்னொலஜீஸ் - முப்படை ஆயுள் சோதிப்பான் | | 40,000.00 |
| **2016** | | |
| பூமி ரெக்- ஆழ் உராய்வு சோதனைக் கருவி | 112,500.00 | |
| கண்டி கொன்ஸ்ரக்ஸன்ஸ்-கோரல் இல.08 | 1,207,528.23 | |
| பூமி ரெக் (பிறை.) லிமிற். - இமேஜ் பிளேட் ஸ்கானர் | 1,497,544.00 | |
| பூமி ரெக்-ரொப் லோடிங் மெஷின் | 117,500.00 | |
| ஹெம்சன் இன்ரர்நஷனல் - ஹீற்றட் இன்கியூபேட்டர் | 39,430.00 | |
| பூமி ரெக் - அனலிற்ரிக்கல் பலன்ஸ் | 32,100.00 | |
| பூமி ரெக்- 2000 KN லோட் செல்ஸ் | 59,250.00 | |
| மெற்றோபொலிற்றன் கொம் லிட்-20இல கம்பியூட்டர் | 97,800.00 | |
| AC போல் அன்ட் கொம் - முறுக்கு முறுக்கலி மதிப்பாராய்தல் முறைமை | 181,255.23 | |
| P&T ரேடிங் (பிறை.) லிமிற். குளிரூட்டி | 64,035.00 | |
| மெற்றோபொலிற்றன் கொம் லிட் 30 இல. கொம்பியூட்டர் | 146,700.00 | |
| P&T ரேடிங் (பிறை.) லிமிற். குளிரூட்டி | 49,285.00 | |
| S&D அசோசியேட்ஸ்- யுனிவேர்சல் ரெஸ்ரிங் மெஷின் | 2,508,860.00 | |
| | 13,112,538.87 | 9,833,957.25 |

## இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்

**நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2016**

**குறிப்பு 14.3 – மீளளிக்கத்தக்க வைப்புக்கள்**

| | | | 2016<br>ரூபா சதம் | 2015<br>ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 1991 | எலிவேற்றர்ஸ் (பிறை.) லிமிற். | 21016 | 15,000.00 | 15,000.00 |
| 1996 | களனி பல்கலைக்கழகம் | 27720 | 2,000.00 | 2,000.00 |
| 2000 | மெஸர்ஸ் வோட்டர்மன் என்ஜியரிங் (பிறை.) லிமிற். | 35282 | 2,500.00 | 2,500.00 |
| 2005 | மெஸர்ஸ் நவலோக கொன்ஸ்ரக்ஷன்ஸ் | 8955 | 10,000.00 | 10,000.00 |
| | | 9223 | 5,000.00 | 5,000.00 |
| 2007 | **நூலக வைப்புக்கள்** | | | |
| | திரு.டி.என்.சி.ஆட்டிகல | 68358 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.டபிள்யு.எம்.கே.அதுலசிரி | 68362 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.எஸ்.எ.ஆ.திசநாயக்க | 68365 | 1,500.00 | 1,500.00 |
| | மெஸர்ஸ் நவலோக கொன்ஸ்ரக்ஷன்ஸ் | 13464 | 50,000.00 | 50,000.00 |
| | மெஸர்ஸ் சிங்கப்பூர் பிலிங்கோ சிவில் | 13731 | 50,000.00 | 50,000.00 |
| 2008 | திரு.எச்.கமால்டீன் | 82575 | 2,000.00 | 2,000.00 |
| | திரு.ரீ.உ.தயகுமார் | 84021 | 2,000.00 | 2,000.00 |
| | திரு.எல்.பந்துல டி சில்வா | 84022 | 2,000.00 | 2,000.00 |
| | திரு.டி.எஸ்.ரஞ்ஜித் | 84026 | 2,000.00 | 2,000.00 |
| 2009 | **நூலக வைப்புக்கள்** | | | |
| | திரு. கே.பி.டி.வீரரத்ன | 68373 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.எம்.இ.சஞ்ஜீவ | 68376 | 3,500.00 | 3,500.00 |
| | டோக்கியோ சிமெந்து கொழும்பு | 19889 | 50,000.00 | 50,000.00 |
| 2010 | **நூலக வைப்புக்கள்** | | | |
| | திரு.எச்.என்.லொக்குபத்திரகே | 68377 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.பண்டிகோரல | 68378 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.என்.என்.கே.பீ. அபேகுணவர்தன | 68379 | 1,500.00 | 1,500.00 |
| | மேஜர்எ.எம்.என்.டபிள்யு. அத்தநாயக்க | 68381 | 1,500.00 | 1,500.00 |
| | திருமதி பிரியந்தி பீரிஸ் | 68382 | 1,500.00 | 1,500.00 |
| | நொரிரேக் லங்கா போர்சலீன் (பிறை.) லிமிற். | 23823 | 75,000.00 | 75,000.00 |
| | திரு.பீ.ஜே. டி சில்வா | 24810 | 5,000.00 | 5,000.00 |
| 2011 | **நூலக வைப்புக்கள்** | | | |
| | திரு.சி.டி.விமலசிறி | 68383 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.ஜே.எ.ஆர்.ஜயக்கொடி | 68384 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.எ.யு.அமரதாச | 68385 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.டி.எம்எஸ்.எல்.பீ.ஜயரத்ன | 68386 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.எஸ்.கே.கே.சோமசேகர | 68387 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.எ.ஐ.பெரேரா | 68388 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.டபிள்யு.எ.பி.எஸ்.துமிந்த | 68389 | 1,500.00 | 1,500.00 |
| 2012 | **நூலக வைப்புக்கள்** | | | |
| | திருமதி ரத்னசீலி | 68390 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.எ.எல்.எ.ஜே.ஜி.விஜேரத்ன | 68391 | 1,500.00 | 1,500.00 |
| | மெஸர்ஸ் அக்ஸ்ரார் | 30704 | 50,000.00 | 50,000.00 |
| | திரு. ஆர்.பி.பிரியரத்ன | 30863 | 5,000.00 | 5,000.00 |
| | திரு.டபிள்யு.டி.எஸ்.டி சில்வா | 30921 | 5,000.00 | 5,000.00 |
| 2013 | **நூலக வைப்புக்கள்** | | | |
| | திருமதி எல்.ஐ.ஜே. சில்வா | 68392 | 1,500.00 | 1,500.00 |
| | திரு. டி.பீ.டி. மென்டிஸ் | 68393 | 1,500.00 | 1,500.00 |
| | திரு. எச்.சி. குணதிலக | 68394 | 1,500.00 | 1,500.00 |
| **மீதி மு/கா** | | | 367,500.00 | 367,500.00 |

## இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்
### நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2016

| | | | 2016 ரூபா சதம் | 2015 ரூபா சதம் |
|---|---|---|---|---|
| மு/கொ மீதி | | | 367,500.00 | 367,500.00 |
| **2014** | **நூலக வைப்புக்கள்** | | | |
| | திரு.ஜே.பி.எல்.பி.ஜயசுந்தர | 68395 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.எஸ்.எ.ஆர்.திசநாயக்க | 68396 | 1,500.00 | 1,500.00 |
| | திருமதி ரி.பெர்னாண்டோ | 68397 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.எச்.எல்.எ.வணிகசேகர | 68398 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.பேர்னாட் பெரேரா | 68399 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.எ.ஹேவகே | 13276 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.இ.டபிள்யு.எல்.சாந்த | 68400 | 1,500.00 | 1,500.00 |
| | ட்ராங்கிள் ருவர்ஸ் அன்ட் ட்ரவலர் | 35520 | 20,000.00 | 20,000.00 |
| | கண்டி கொன்ஸ்ரக்ஷன் | 98653 | 5,000.00 | 5,000.00 |
| | ஜே.பி.எ.ஜயலத் | 98654 | 5,000.00 | 5,000.00 |
| | எம்.பலயா | 98663 | 5,000.00 | 5,000.00 |
| | பீ.டபிள்யு.டி.கே.பெர்னாண்டோ | 98669 | 5,000.00 | 5,000.00 |
| | என்.ஹப்புஹாமி | 103365 | 500.00 | 500.00 |
| | ஆர்.கே.சி.ரணசிங்க | 98679 | 2,000.00 | 2,000.00 |
| | டபிள்யு.எல்.பண்டார | 98680 | 2,000.00 | 2,000.00 |
| | எம்.ஜி.சி.ஜயலத் | 98694 | 2,000.00 | 2,000.00 |
| | **நூலக வைப்புக்கள்** | | | |
| | திரு.எ.குணசேகர | 13278 | 1,500.00 | 1,500.00 |
| | கலாநிதி மஜீத் | 111001 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.சி.எஸ்.மஹிபால | 111003 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.எல்.வசந்த | 111004 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.சி.என்.அமரசிங்க | 111005 | 1,500.00 | 1,500.00 |
| | திரு.டபிள்யு.எம்.கே.அதுலசிறி | 111006 | 1,500.00 | 1,500.00 |
| | டி.எம்.பீ.திசநாயக்க | 40869 | 20,000.00 | 20,000.00 |
| | பீ.ஜே.சில்வா | 41107 | 5,000.0 | 5,000.00 |
| | எம்.டி.எல்.திசநாயக்க | 111195 | | 500.00 |
| | எம்.டி.பிறேமரத்ன | 111197 | | 500.00 |
| | வி.விஜேசிங்க | 110255 | 500.00 | 500.00 |
| | ஜி.கே.எஸ்.ஆர்.ரொட்ரிகோ | 41675 | 5,000.00 | 5,000.00 |
| | உதய ட்ரவல் சேர்விசஸ் | 41947 | 10,000.00 | 10,000.00 |
| | எஸ்.எச்.எல்.பிரியங்கர | 98567 | | 2,000.00 |
| **2016** | **நூலக வைப்புக்கள்** | | | |
| | திரு.ஆர்.அந்தோனிமுத்து | 111007 | 1,500.00 | |
| | திரு.எம்.அபேசேகர | 111008 | 1,500.00 | |
| | திரு.எ.பஸ்நாயக்க | 111009 | 1,500.00 | |
| | திரு.டி.வேரகல | 111010 | 1,500.00 | |
| | திரு.எச்.சி.டி.பீ.வது | 111011 | 1,500.00 | |
| | அலைட் கொமர்ஷல் எ.்.ப் | 42768 | 50,000.00 | |
| | சிஜசி அக்ரி பிஸ்னஸ் | 42970 | 50,000.00 | |
| | எ பவர் அன்ட் கொம் | 43067 | 75,000.00 | |
| | சிலோன் போர்ட்டிலைசர்ஸ் | 43304 | 50,000.00 | |
| | கொழும்பு கொமர்சல் | 43386 | 50,000.00 | |
| | எம் டி எல் குணரத்ன | 113137 | 2,000.00 | |
| | ஆசிக் ரெஸ்ரோரன்ற் அன்ட் பீ | 113138 | 2,000.00 | |
| | எச்.எ.என். சந்தன | 113139 | 2,000.00 | |
| | சமீர கேட்டர்ஸ் | 113140 | 2,000.00 | |
| | ஜே..எச். தேசபிரிய | 113141 | 2,000.00 | |
| | சி.ஜி.எம். கொடகே | 113142 | 2,000.00 | |
| | எச்.இ. சந்திரசேன | 113143 | 2,000.00 | |
| | எம்.எல். மெண்டிஸ் | 110319 | 500.00 | |
| | | | 771,000.00 | 477,000.00 |

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2016

குறிப்பு 14.4 – பிணைப்பண வைப்புக்கள்

| | 2016<br>ரூபா சதம் | 2015<br>ரூபா சதம் |
|---|---|---|
| திரு.ஆர்.எம்.தர்மசேன | | 21,184.27 |
| திருமதி கே.ஜி.சி.ரணசிங்க | 8,446,33 | 8,035.41 |
| திருமதி சி.ஜே.விஜேசிங்க | 2,803,31 | 2,871.74 |
| திரு.பீ.பி.எஸ்.பி.வெலகெதர | 2,803,31 | 2,683.12 |
| திரு.பி.கே.எஸ்.எம்.பனவல | 2,803,31 | 2,683.12 |
| திரு.பீ.எச்.எஸ்.சமீர | 3,000,31 | 2,683.12 |
| | 19,856,57 | 40,140.78 |

## குறிப்பு 15 – திரண்ட செலவினங்கள்

| | ரூபா சதம் 2016 | ரூபா சதம் 2015 |
|---|---|---|
| தொலைபேசிச் செலவினங்கள் | 276,641.73 | 422,179.54 |
| பணியாளர் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 2,413,600.00 | 2,514,400.00 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 1,124,000.00 | 1,116,000.00 |
| விசேட படிகள் | 279,802.63 | 202,828.08 |
| நீர்ச் செலவினங்கள் | 52,187.00 | 142,069.13 |
| மேலதிக நேர வேலை | 279,355.29 | 271,558.94 |
| பயிற்சி செயற்றிட்டம் | 183,222.50 | 45,387.35 |
| வாழ்க்கைத்தொழில் சந்தா | | 3,600.00 |
| மரத்தளபாடங்களினதும், பொருத்திகளினதும் பராமரிப்பு | 2,352.15 | |
| விளம்பரம் | 310,747.50 | |
| காகிதாதி மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | 485,119.84 | 1,100.00 |
| கணனிக்கான காகிதாதி | 348,000.00 | |
| தபால் கட்டணம் மற்றும் தந்திகள் | 46,771.77 | 3,088.29 |
| தொழிற்சாலை வருகைதரல் மற்றும் சோதனை – த.உ. | 750.00 | |
| பிரயாணம் மற்றும் போக்குவரத்து | 1,361,963 | 1,526,771.90 |
| தொழிற்சாலை வருகைதரல் - PC | 29,180.00 | |
| தொழிற்சாலை வருகைதரல் - கட்டளை | 3,500.00 | |
| தொழிற்சாலை வருகைதரல் - ஆய்வுகூடம் மற்றும் உலோகவியல் | 27,425.00 | |
| விடுமுறை மற்றும் சமயாசமய லீவு ஊக்குவிப்புக்கள் | 2,200.000.00 | 2,300,000.00 |
| மருத்துவ லீவு ஊக்குவிப்புக்கள் | 1,000,000.00 | 7,092.00 |
| ஊக்குவிப்பு பணியாளருக்கான கொடுப்பனவுகள் | 4,098,993.75 | 4,162,393.00 |
| விரிவுரைக் கட்டணங்கள் - உள்ளக | 159,500.00 | 158,937.50 |
| விரிவுரைக் கட்டணங்கள் - வெளிவாரி | 9,000.00 | |
| மருத்துவ காப்புறுதி கட்டுப்பணம் | 147,517.40 | 225,473.52 |
| பிரச்சாரம் (M&P) | 38,220.00 | 1,751.93 |
| கண்காணிப்பு வருகை தரல்கள் | 202,773.75 | 70,000.00 |
| வாகனங்களின் பராமரிப்பு | 562,614.30 | 120.00 |
| கட்டிடத்தின் பராமரிப்பு | 380,172.13 | 712,845.02 |
| அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | 324,127.74 | 51,858.08 |
| ஆய்வுகூடக் கட்டிடத்தின் பராமரிப்பு | 245,283.08 | 270,467.35 |
| கட்டிடத்தின் பராமரிப்பு (பெருநகரம்) | 14,648.33 | |
| ஆய்க்கூட சாதனங்கள் - பராமரிப்பு | 8,360.00 | |
| கணனிகளின் பராமரிப்பு | 602,327.68 | 431,250.00 |
| அலுவலக உபகரணங்கள் | 343,990.00 | |
| ஆய்வுகூட உபகரணங்கள் - புனரமைப்பு | 167,055.00 | |
| பாதுகாப்புச் செலவினங்கள் | | 260,130.00 |
| எரிபொருள் செலவினங்கள் | 229,735.00 | 255,225.00 |
| பொறிவைத்தல் சாதனம் மற்றும் பாதுகாப்பு நாடாக்கள் | | 32,065.00 |
| ஆய்வுகூட சோதித்தல் மற்றும் பொதுவான கட்டணம் | 168,800.00 | |
| ஆய்வுகூட இரசாயன பண்டங்கள் | 63,760.00 | 2,691.71 |
| தேயிலைச் செலவினங்கள் | 36,000.00 | 35,600.00 |
| வரைவு கட்டளைகளின் விநியோகம் (எந்திர) | 127,895.00 | 166,845.00 |
| வரைவு கட்டளைகளின் விநியோகம் (கட்டளை) | 128,790.00 | |
| மின்சாரம் | 101,767.50 | |
| இ.க.நி. கட்டிடக் கருத்திட்டம் | 739,949.55 | 787,106.90 |
| அனுமதிச்சீட்டு குழுச் செலவினங்கள் | 18,150.00 | |
| துறைசார் குழுச் செலவினங்கள் (கட்டளை) | 2,170.00 | |
| துறைசார் குழுச் செலவினங்கள் (எந்திர) | 1,320.00 | 2,940.00 |
| தொழில்நுட்ப நிபுணர்களுக்கான கொடுப்பனவு | | 250.00 |
| சில்லறைச் செலவினங்கள் | 7,500.00 | |
| பணிக்கொடைகள் | 910.00 | 57,470.00 |
| வெளிநாட்டுப் பயிற்சி | 603,200.00 | |
| கட்டளைகளின் மொழிபெயர்ப்பு | 2,300.00 | |
| அரசாங்க வரிகள் | | 2,787.00 |
| நானாவிதம் | 41,412.42 | 45,597.74 |
| வெளிவாரி கணக்காய்வாளர்களுக்கான கொடுப்பனவுகள் | 540.00 | |
| உபகரணங்களின் மதிப்பாராய்தல் | 124,000.00 | 112,000.00 |
| | - | 105,000.00 |
| | 20,121,401.04 | 16,506,879.98 |

**இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்**

**நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2016**

**குறிப்பு 16 - வருமானம்**

| | 2016இல் | | 2015இல் | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **கண்காணிப்புக் கட்டணம் - இறக்குமதி** | **243.005.067,46** | | 199258635,43 | |
| கழிக்குக: வெளியார் ஆய்வுகூடங்களுக்கு கொடுப்பனவாகிய சோதித்தல் கட்டணம் | -2.933.635,00 | | -1.399.833,00 | |
| வாடிக்கையாளர் அறவிடல் அடிப்படையில் அவசர சோதித்தல் பணிக்காக மேலதிநேர வேலைக் கொடுப்பனவு | 215.625,00 | | 192.827,00 | |
| மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் ஆகுசெலவு | -4.053.541,00 | **235.802.266,46** | -184.870,00 | 197.481.105,43 |
| **சோதனைக் கட்டணம்** | **185.181.139,85** | | 157.357.150,16 | |
| கழிக்குக: வெளியார் ஆய்வுகூடங்களுக்கு கொடுப்பனவாகிய சோதித்தல் கட்டணம் | -7.306.339,00 | | -9.040.525,00 | |
| வாடிக்கையாளர் அறவிடல் அடிப்படையில் அவசர சோதித்தல் பணிக்காக மேலதிநேர வேலைக் கொடுப்பனவு | -3.049.075,00 | **174.825.725,85** | -3.645.304,00 | 144.671.321,16 |
| **மதிப்பாராய்தல்** | **26.635.427,56** | | 22.496.362,76 | |
| கழிக்குக: வெளியார் ஆய்வுகூடங்களுக்கு கொடுப்பனவாகிய சோதித்தல் கட்டணம் | -957.333,00 | | -1.734.248,00 | |
| வாடிக்கையாளர் அறவிடல் அடிப்படையில் அவசர சோதித்தல் பணிக்காக மேலதிநேர வேலைக் கொடுப்பனவு | -321.774,00 | **25.356.320,56** | -450.887,00 | 20.311.227,76 |
| **சான்றுபடுத்தல் குறியிடலிலிருந்து வருமானம்** | **156.628.144,38** | | 151 .514.334,83 | |
| கழிக்குக: வெளியார் ஆய்வுகூடங்களுக்கு கொடுப்பனவாகிய சோதித்தல் கட்டணம் | -16.854.047,00 | | -10.588.396,00 | |
| வாடிக்கையாளர் அறவிடல் அடிப்படையில் அவசர சோதித்தல் பணிக்காக மேலதிநேர வேலைக் கொடுப்பனவு | -6.719.047,00 | **133055050,38** | | 140.925.938,83 |
| **கட்டளைகளின் விற்பனை** | | **18.129.734,30** | | 14.201.324,00 |
| **பயிற்சி செயற்றிட்டங்களிலிருந்து வரும்படிகள்** | **44.081.686,66** | | 32.484.299,67 | |
| கழிக்குக: வாடிக்கையாளர் அறவிடல் அடிப்படையில் அவசர சோதித்தல் பணிக்காக மேலதிநேர வேலைக் கொடுப்பனவு | -97.178,00 | **43.984.508,66** | -111.821,00 | 32.372.478,67 |
| **மீன்பிடித்தல் கண்காணிப்பு நிறுவனரீதியிலான உறுப்புரிமைக் கட்டணம்** | | **18.000,00** | | 29.000,00 |
| **முறைமை சான்றளிப்பிலிருந்து வருமானம்** | **68.426.090,80** | | 58.839.196,33 | |
| கழிக்குக: மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் ஆகுசெலவு | -469.994,00 | **67.956.096,80** | -174.528,00 | 58.664.668,33 |
| **சக்தி சுட்டித்துண்டு இடுதலிலிருந்து வருமானம்** | 3.090.533,79 | | 2.873.009,01 | |
| கழிக்குக: வெளியார் ஆய்வுகூடங்களுக்கு கொடுப்பனவாகிய சோதித்தல் கட்டணம் | -156.100,00 | **2.934.433,79** | -1.215.484,00 | 1.657.525,01 |
| **தேசிய தர விருது** | | **650.000,00** | | 598.115,23 |
| **கட்டளை வகுத்தமைத்தலிலிருந்து வருமானம்** | | **115.903,38** | | |
| **போத்தலிலடைக்கப்பட்ட நீர் பதிவு** | | **130.000,00** | | 381.403,33 |
| **தேயிலை சான்றுபடுத்தலிலிருந்து வருமானம்** | **885.539,61** | | 655.869,62 | |
| கழிக்குக: வெளியார் ஆய்வுகூடங்களுக்கு கொடுப்பனவாகிய சோதித்தல் கட்டணம் | -14.630,00 | **870.909,61** | -50.490,00 | 605.379,62 |
| **சில்லறை வருமானம்** | | **2.475.040,26** | | 2.155.410,05 |
| | | **706.303.990,05** | | 614.054.897,42 |

**இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்**

**நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2016**

| **குறிப்பு 17 – ஆளணியினர் ஆகுசெலவு** | **2016**<br>**ரூபா சதம்** | **2015**<br>**ரூபா சதம்** |
|---|---|---|
| சம்பளங்களும், வேதனங்களும் | 240,171,314.59 | 227,504,525.19 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 24,933,677.64 | 23,544,602.50 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம | 4,986,735.40 | 4,708,920.47 |
| மேலதிக நேர வேலை | 3,339,728.60 | 3,568,988.12 |
| விசேட படிகள் | 3,601,07.45 | 2,789,030.74 |
| முன்-கொடுப்பனவிலான பணியாளர் நன்மைகளைத் திருப்பாதிருத்தல் | 6,544,794.60 | 5,695,537.93 |
| | 283,577,328.28 | 267,811,604.95 |

| **குறிப்பு 18 – பிரயாணச் செலவினங்கள்** | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
|---|---|---|
| உள்நாடு | 3,298,991.00 | 2,256,128.51 |
| வெளிநாடு | 5,652,263.85 | 12,036,869.75 |
| தொழிற்சாலை வருகை தரல்கள் - கட்டளை | 10,610.00 | 1,000.00 |
| தொழிற்சாலை வருகை தரல்கள் - தர உறுதிப்படுத்தல் | 24,655.00 | 17,689.50 |
| தொழிற்சாலை வருகை தரல்கள் - உற்பத்திச் சான்றளிப்பு | 301,301.50 | 222,531.25 |
| தொழிற்சாலை வருகை தரல்கள் - தேயிலை உற்பத்திச் சான்றளிப்பு | 11,087.50 | 32,786.00 |
| தொழிற்சாலை வருகை தரல்கள் - ஆய்வுகூடம் | 485.00 | - |
| தொழிற்சாலை வருகை தரல்கள் - எடையளவியல் | 128,988.00 | 2,125.00 |
| கண்காணிப்பு வருகை தரல்கள் (உள்ளக/வெளியக) | 3,175,586.00 | 1,693,687.50 |
| | 12,603,967.85 | 16,262,817.51 |

| **குறிப்பு 19 - விநியோகங்களும், பாவனைக்குரியவையும்** | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
|---|---|---|
| காகிதாதிகளும், அலுவலக தேவைப்பாடுகளும் | 5,196,545.32 | 4,444,991.22 |
| கணனிகளுக்கான காகிதாதிகள் | 265,542.12 | 188,973.34 |
| செய்திப்பத்திரிகைகளும், வர்த்தமானிகளும் | 202,992.00 | 146,282.00 |
| தலைமையலுவலகப் பணியணியினருக்கான சீருடைகள் | 4,879,695.69 | 4,557,580.98 |
| ஆய்வுகூட/எடையளவியல் பணியாளருக்கான சீருடைகள் | 9,404.70 | 73,000.00 |
| எரிபொருள் செலவினங்கள் | 3,397,724.51 | 3,519,961.92 |
| கணனி மென்கணியமும், உசாவுகையும் | 982,542.41 | 395,316.66 |
| மாதிரிப்படுத்தல் கொள்வனவு - கட்டளை/எந்திர | 25,397.00 | 9,044.00 |
| CMSக்கான மாதிரிகளின் கொள்வனவு | 21,087.95 | 12,149.00 |
| மாதிரிப்படுத்தல் பொருட்கள் (QA) | 362,967.71 | 271,090.06 |
| பொறிவைத்தல் பொருட்கள், பாதுகாப்பு துண்டுகள் | 243,612.50 | 156,365.00 |
| இரசாயனம், வாயு மற்றும் கண்ணாடிப் பண்டங்கள் | 7,467,809.21 | 6,819,128.15 |
| பருவகால வெளியீடுகளும், சஞ்சிகைகளும் | 142,800.00 | 4,590.00 |
| விற்பனைக்கான கட்டளைகளின் கொள்வனவு | 4,256,803.14 | 3,608,466.89 |
| கட்புல சாதனம் | 6,000.00 | |
| | 27,460,924.26 | 24,206,939.22 |

**இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்**

**நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2016**

| **குறிப்பு 20- பராமரிப்பு** | **2016**<br>**ரூபா சதம்** | **2015**<br>**ரூபா சதம்** |
|---|---|---|
| கட்டிடம் - தலைமை அலுவலகம் | 7,285,693.36 | 6,106,912.35 |
| கட்டிடம் - ஆய்வுகூடம் | 3,973,254.35 | 3,544,369.62 |
| கட்டிடம் - எடையளவியல் | 189,580.27 | 158,424.62 |
| கணனிகள் | 7,393,249.88 | 4,129,433.21 |
| அலுவலக சாதனங்களும், மரத்தளபாடங்களும் | 2,336,014.05 | 3,252,817.61 |
| அலுவலக வாகனங்கள் | 5,567,401.22 | 3,281,148.94 |
| அச்சிடல் இயந்திரம் | 517,299.61 | 433,001.75 |
| ஆய்வுகூட சாதனங்கள் - ஆய்வுகூடப் பிரிவு | 1,002,228.26 | 1,059,952.98 |
| ஆய்வுகூட சாதனங்கள் - எடையளவியல் பிரிவு | 133,165.84 | 813,853.74 |
| | 28,397,886.84 | 22,779,914.82 |

| **குறிப்பு 21- ஒப்பந்தச் சேவைகள்** | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
|---|---|---|
| போக்குவரத்து | 29,690,919.67 | 20,305,156.58 |
| அலுவலக வாடகையும், சோலை வரிகளும் | 3,627,490.06 | 3,147,789.00 |
| மின்சாரம் | 9,911,408.80 | 9,868,602.94 |
| காப்புறுதி | 906,540.68 | 1,509,232.08 |
| காப்புறுதி - வாகனங்கள் | 957,353.72 | 667,912.00 |
| நீரின் செலவினங்கள் | 975,547.08 | 1,402,739.55 |
| பாதுகாப்புச் சேவைகள் | 2,836,825.00 | 2,970,840.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 3,515,193.70 | 2,319,208.85 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 788,000.00 | 714,835.00 |
| சட்டக் கட்டணங்கள் | 1,997,716.50 | 365,025.00 |
| தபால் கட்டணமும், தந்திச் சேவைகளும் | 891,374.32 | 610,663.13 |
| | 56,098,369.53 | 43,882,004.13 |

| **குறிப்பு 22 - மதிப்பிறக்கம்** | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
|---|---|---|
| கட்டிடங்கள் | 24,112,500.00 | 24,112,500.00 |
| அலுவலக மரத்தளபாடங்களும், பொருத்திகளும் | 1,182,290.04 | 1,071,472.18 |
| அலுவலக சாதனங்கள் | 6,407,496.96 | 5,163,541.67 |
| ஆய்வுகூட, தொழில்நுட்பச் சாதனங்கள் | 25,512,658.22 | 22,384,560.17 |
| மோட்டார் வாகனம் | 6,161,547.52 | 8,823,248.65 |
| நூலக நூல்கள் | 424,882.16 | 479,391.53 |
| மென்கணியம் | 307,500.00 | 222,083.33 |
| ஆய்வுகூட மரத்தளபாடங்கள் | 214,916.96 | 199,194.69 |
| | 64,323,791.86 | 62,455,992.22 |

## இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்

## நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - 2016

| குறிப்பு 23 - வேறு தொழிற்படுத்தல் செலவினங்கள் | 2016 ரூபா சதம் | 2015 ரூபா சதம் |
|---|---|---|
| பணியாளர் நன்மைகள் - பணிக்கொடைக்கான ஏற்பாடு | 10,632,049.90 | 10,396,462.48 |
| பணியாளர் சேமநலன் | 7,898,011.23 | 6,288,056.29 |
| மருத்துவச் செலவினங்கள் | 4,996,906.68 | 5,967,951.49 |
| விளம்பரம் | 1,155,820.00 | 881,265.00 |
| சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | 486,000.00 | 168,000.00 |
| சபை உப குழுக்களுக்கான கொடுப்பனவுகள் | 190,625.90 | 159,217.00 |
| கருத்தரங்குகளும், மகாநாடுகளும் | 375,467.76 | 739,179.29 |
| சீவியத்தொழில் சந்தாக்கள் | 291,861.10 | 254,679.67 |
| மருத்துவ லீவு ஊக்குவிப்பு | 10,381,357.15 | 10,779,191.89 |
| அரசாங்க வரிகள் (ESC/VAT/NBT/FSL) | 3,418,040.48 | 1,933,984.80 |
| பணியணியினருக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் | 15,904,243.16 | 16,392,436.72 |
| விடுமுறை, சமயாசமய லீவு ஊக்குவிப்பு | 2,367,848.82 | 2,120,449.12 |
| குழுத் தவணை ஆயுள் காப்புறுதி | 1,151,396.11 | 1,004,267.67 |
| வரைவு கட்டளைகளின் விநியோகம் - கட்டளை | 432,617.50 | 316,300.00 |
| வரைவு கட்டளைகளின் விநியோகம் - எந்திரவியல் | 380,790.00 | 360,950.00 |
| தொழிற்படு குழு துறைசார் குழு செலவினம் - கட்டளை | 198,516.00 | 191,859.42 |
| தொழிற்படு குழு துறைசார் குழு செலவினம் - எந்திரவியல் | 146,967.80 | 119,829.70 |
| கௌரவப் பணம் - செயற்குழு மற்றும் துறைசார் குழு உறுப்பினர்கள் | | |
| - கட்டளை | 792,000.00 | 606,000.00 |
| - எந்திரவியல் | 938,000.00 | 758,000.00 |
| கட்டளைகளின் முன்னேற்றம் - கட்டளை | 40,742.50 | 23,570.00 |
| அனுமதிச்சீட்டு குழுச் செலவினங்கள் | 242,255.00 | 104,410.00 |
| சோதித்தல் கட்டணம் - ஆய்வுகூடம் | 1,500.00 | 5,202.00 |
| சோதித்தல் கட்டணம் - கட்டளை | 191,682.00 | - |
| சோதித்தல் கட்டணம் - உற்பத்தியின் சான்றளிப்பு | 5,600.00 | 3,500.00 |
| தொழில்நுட்ப நிபுணர்களுக்கான கொடுப்பனவுகள் | 17,500.00 | 1,112,000.00 |
| தத்துவமளிப்புக்கான கட்டணம் - முறைமைச் சான்றளிப்பு | 6,168,128.11 | 6,727,672.01 |
| தத்துவமளிப்புக்கான கட்டணம் - ஆய்வுகூடம் | 1,897,700.31 | 1,262,561.71 |
| தத்துவமளிப்புக்கான கட்டணம் - தேயிலை உற்பத்தி சான்றளிப்பு | 549,059.50 | 10,204.09 |
| தத்துவமளிப்புக்கான கட்டணம் - எடையளவியல் | 117,660.82 | 110,818.82 |
| மதிப்பீட்டாளர் பதிவு | 51,807.14 | 50,833.55 |
| தர முறைமைச் சான்றுப்படுத்தல் செலவினம் | 7,205.00 | 158,695.00 |
| முகாமைத்துவ முறைமை மேம்படுத்தல்கள் | 4,024,816.90 | |
| பயிற்சித் திட்டங்கள் | 10,638,908.69 | 4,276,779.83 |
| விரிவுரைக் கட்டணம் | 1,829,100.00 | 1,272,125.00 |
| சில்லறைச் செலவினங்கள் - த.அ. | 626,466.09 | 908,324.92 |
| சில்லறைச் செலவினங்கள் - ஆய்வுகூடம் | 388,997.00 | 523,418.95 |
| சில்லறைச் செலவினங்கள் - எடையளவியல் | 184,823.07 | 51,068.56 |
| சில்லறைச் செலவினங்கள் - ஆவணப்படுத்தல், தகவல் | 90,320.00 | 62,287.00 |
| சில்லறைச் செலவினங்கள் - கட்டளைப்படுத்தல் | | 4,007.00 |
| சில்லறைச் செலவினங்கள் - உற்பத்தி சான்றளிப்பு | 98,525.00 | 4,521.00 |
| சில்லறைச் செலவினங்கள் - தர உறுதிப்படுத்தல் | 34,015.00 | 50,882.23 |
| சில்லறைச் செலவினங்கள் - முறைமைச் சான்றளிப்பு | 124,415.61 | |
| அளவீடுகளும் முன்னோடிக் கருத்திட்டங்களும் | 175,345.00 | 18,500.00 |
| ஆய்வுகூட வேலைத்தளச் செலவினம் | 40,984.60 | 61,358.00 |
| சாதனங்களின் மதிப்பாராய்தல் | | 1,131,914.92 |
| கட்டளை உறுப்புக்களுக்கான உறுப்புரிமைக் கட்டணங்கள் | 10,913,339.17 | 6,771,642.81 |
| கட்டளைகளினதும், அறிக்கைகளினதும் மொழிபெயர்ப்பு | 148,163.00 | 121,297.50 |
| தேசிய தர விருதுகள் | 934,049.74 | 3,223,026.77 |
| பாவனையாளர் கல்வி | 5,470.00 | 1,950.00 |
| நஷ்டஈடு | 475,801.82 | |
| நன்கொடைகள் | 5,420,000.00 | |

| | | |
|---|---|---|
| பிரச்சாரம் - சந்தைப்படுத்தலும், மேம்படுத்தலும் | 2,668,669.64 | 2,696,785.18 |
| பிரச்சாரம் - தர உறுதிப்படுத்தல் | 17,945.00 | 15,915.00 |
| பிரச்சாரம் - எடையளவியல் | 48,510.00 | - |
| சக்தி சுட்டித்துண்டுதல் செலவினம் | 65,816.33 | 122,334.69 |
| பிரச்சாரம் - உற்பத்தி சான்றளிப்பு | | 10,828.00 |
| பிரச்சாரம் - முறைமை சான்றளிப்பு | 17,098.00 | 162,122.58 |
| 'சார்க' பிராந்திய கட்டளைப்படுத்தல் | 1,657,870.71 | 1,534,549.80 |
| தேயிலை உற்பத்தி உறுதிப்படுத்தல் செலவினம் | 25,490.00 | - |
| இழப்புக்களும், பெறுமதியழிப்பும் (குறிப்பு 23.1) | | 492,060.42 |
| | 112,084,300.34 | 92,525,247.88 |

**குறிப்பு 23.1 – நஷ்டங்கள் மற்றும் பெறுமதியழிப்பு**

| | | |
|---|---|---|
| சேவைப்படுத்த முடியாத இரசாயனங்களை விற்றொழித்தல் | - | 197,866.88 |
| நகர முடியாத காகிதாதிகளை விற்றொழித்தல் | - | 283,241.71 |
| சேவைப்படுத்த முடியாத காகிதாதிகளை விற்றொழித்தல் | - | 10,951.83 |
| | - | 492,060.42 |

**குறிப்பு 24 – நஷ்டங்கள் மற்றும் பெறுமதியழிப்பு**

| | ரூபா சதம் | ரூபா சதம் |
|---|---|---|
| **நிதிசார் வருமானம்** | | |
| வட்டி வருமானம் | 39,067,633.49 | 22,110,556.77 |
| கையிருப்பு மேன்மிகைகள் | 108,812.93 | 8,708.89 |
| முன்கொடுப்பனவிலான பணியாளர் நன்மைகளை அவிழ்த்தல் | 6,544,794.60 | 5,695,537.93 |
| | 45,721,241.02 | 27,814,803.59 |
| **நிதிசார் செலவினங்கள்** | | |
| வங்கிக் கட்டணங்கள் | 145,940.00 | 162,676.06 |
| கையிருப்பு பற்றாக்குறைகள் | 59,093.26 | 10,135.40 |
| | 205,033.26 | 172,811.46 |
| | 45,516,207.76 | 27,641,992.13 |

**குறிப்பு 25 – ஆதனங்களினதும், பொறியினதும், சாதனங்களினதும் ஆதாயம்/(நஷ்டம்)**

| | ரூபா சதம் | ரூபா சதம் |
|---|---|---|
| சொத்துக்களின் ஆகுசெலவு | 6,542,995.67 | 4,542,182.25 |
| கழிக்குக: திரண்ட மதிப்பிறக்கம் | 6,310,411.70 | 4,277,702.25 |
| எழுதப்பட்ட பெறுமதி | 232,583.97 | 264,480.00 |
| கிடைத்த விற்பனை வரும்படி | 6,280,763.53 | 51,411.00 |
| விற்றொழித்தல் மீதான ஆதாயம்/(நஷ்டம்) | 6,048,179.56 | (213,069.00) |

**குறிப்பு 26 –அவசரகாலப் பொறுப்புக்கள்**

கடந்த கால நிகழ்வுகளிலிருந்தும், நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் முழுமையாகவன்றி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுதியற்ற எதிர்கால நிகழ்வுகளின் இடம்பெறுதலின் மூலம் அல்லது இடம்பெறாததன் மூலம் மட்டுமே உறுதிப்படுத்துகின்ற உளதாம்தன்மையிலிருந்து எழுகின்ற சாத்தியமான கடப்பாடொன்றே அவசரகால பொறுப்பாகும்.

2016 டிசம்பர் 31இல் உள்ளவாறு பின்வரும் அவசரகால பொறுப்புக்களை இ.க.நி. கொண்டுள்ளது.

1. HCALT-87-20-2012 என்ற வழக்கு எண்ணின் கீழ் மாகாண மேல்நீதிமன்றத்தில் இ.க.நி.இன் அலுவலர் ஒருவரான திரு.கே.வி.ஆர்.குணவர்தனவினால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு சட்ட வழக்கு
2. A/3422 என்ற நீதிமன்ற வழக்கு மீது கைத்தொழில் மத்தியஸ்த வழங்கலின் பிரகாரம் ஐந்து இ.க.நி. பணியாட் உறுப்பினர்களுக்கு இணக்கப்படுவதற்கான ரூபா 3,484,800 கொண்ட ஒரு தொகை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஈசீ/பீ/எஸ்எல்எஸ்ஜ/ 1/16/54
ඔබේ අංකය / உமது இல. / Your No. }
දිනය / திகதி / Date } 2018 பெப்ரவரி 14

தலைவர்,
இலங்கை நியமங்கள் நிறுவகம்

**இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 37(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவிற்கமைய விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு 2017 திசெம்பர் 13 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக்க கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்படும் போது அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது தவிர வருமானமும் செலவினமும் ஒன்றுக்கொன்று ஈடு செய்யமுடியாதிருந்த போதிலும், 07 வருமான வகைகளின் கூட்டுத்தொகையான ரூபா 724,843,092 இல் அவற்றை ஈட்டுவதற்குரிய செலவினமான ரூபா 43,148,318 தொகை ஈடுசெய்யப்பட்டு தேறிய வருமானம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

ஆண்டினுள்ளான காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் பிரதிபலிக்கக்கூடிய வகையில் காசுப்பாய்ச்சல்கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், தயாரிக்கப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 35,738,488 ஆக இருந்த போதிலும், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசப்பாய்ச்சலினைக் கணிப்பிடும் போது ஆண்டின் மிகைக்கு ரூபா 34,464,118 சீராக்கப்பட்டிருந்தது.

(ii) நிறுவனத்தின் 8 ஆம் தளத்தை நிர்மாணிப்பதற்குரிய ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதங்களின் அடிப்படையில் அறவீடுகள் ரூபா 1,610,000 ஆக இருந்த போதிலும், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலினை கணிப்பிடும் போது அது ரூபா 4,099,638 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலினை கணிப்பிடும் போது மேற்படி (i) மற்றும் (ii) ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு வட்டி வருமானத்தினதும் தாமதங்களின் அடிப்படையிலான அறவீடுகளிலும் ஏற்பட்டிருந்த மாற்றங்கள், செயற்படு மூலதன அசைவுகளின் கீழான கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு ரூபா 7,740 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தமையாலும், ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு ரூபா 1,207,528 இனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தமையால் சமப்படுத்தப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்கான படிகளை ஒதுக்கும் போது சரியாக மதிப்பீடு செய்து கணக்கு வைக்காமையால் 2015 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 881,631 தொகையான படிகள் மீளாய்வாண்டின் செலவினமொன்றாகவும்,

மீளாய்வாண்டிற்குரிய படிகள் ரூபா 461,164 இனால் குறைத்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதற்கமைய மீளாய்வாண்டின் மிகையானது ரூபா 420,467 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது மின்வலு மற்றும் வலுசக்தி அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த நிறுவனத்தின் 05 ஊழியர்களுக்காக நிறுவனத்தின் நிதியத்திலிருந்து சம்பளமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 663,675 தொகை அமைச்சிடமிருந்து நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய மீதியொன்றாக கணக்கு வைப்பதற்கு பதிலாக, நிறுவனத்தின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 30,598 தொகையான 5 முற்பணங்களும் சில வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற சைக்கிள் கடன் ரூபா 10,000 தொகையினையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 33,057,305 தொகையான 2 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதிகள் ரூபா 28,896,873 தொகை 2017 ஒக்தோபர் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் 5 வருடங்களை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,884,166 ஆகும்.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய ரூபா 3,187,024 தொகையான கட்டளை முற்பணங்களில் ரூபா 1,604,926 தொகையான 19 கட்டளை முற்பணங்கள் 2017 திசெம்பர் மாதம் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

Auditor General's Department

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) XII ஆம் அத்தியாயத்தின் 7.1.1 ஆம் பிரிவு | அரச விடுமுறைத் தினமொன்றின் அல்லது "வாரமொன்றின் ஓய்வு நாளொன்றின்" ஒரு பகுதி மாத்திரம் பணிபுரியுமாறு பணிக்கப்படும் காலத்தில் உள்ளபடியாக பணியாற்றிய மணித்தியாலங்களுக்காக மாத்திரம் பதில் விடுமுறை வழங்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் தெரிவு பரிசோதனைக்கமைய பணியாற்றிய மணித்தியாலங்களை விஞ்சி 68 சந்தர்ப்பங்களில் பதில் விடுமுறைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) XII ஆம் அத்தியாயத்தின் 7.3 ஆம் பிரிவு | பதில் வழங்குவதன் மூலம் அரசிற்கு எந்தவொரு செலவினத்தையும் மேற்கொள்ள நேரிடக்கூடாது, எனினும், கணக்காய்வு தெரிவு பரிசோதனைக்கமைய 48 ஊழியர்களால் விடுமுறை தினங்களில் பணியாற்றியமைக்காக பதில் விடுமுறையைப் போன்றே அந்த நாட்களுக்காக ரூபா 337,817 தொகையான மேலதிக நேர படிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 102 மற்றும் 760 | 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைக்கமைய 163 வாசிகசாலை புத்தகங்களின் பற்றாக்குறையொன்று இனங்காணப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் நிதிப்பிரமாணத்திற்கமைய செயற்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 189 | 1998 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 382,910 தொகையான 10 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 757 | விஞ்ஞான பிரிவின் மற்றும் இரசாயன ஆய்வு கூடங்களின் 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2015 மே 15 ஆந் திகதிய 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 4(அ)(1)(iii) ஆம் பிரிவு | வெளிநாட்டு பிரயாணங்களுக்காக கூட்டிணைந்த படிகளை செலுத்தும் போது இரண்டாம் தரத்திற்குரிய உத்தியோகத்தர்களுக்காக முதலாம் தரத்தை அடிப்படையாகக் கொண்டு கூட்டிணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தமையின் காரணத்தால், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைக்கமைய மீளாய்வாண்டின் போது 14 உத்தியோகத்தர்களுக்காக கூட்டிணைந்த படிகளாக ரூபா 876,675 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |

2.5 **போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

2001 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ/05 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையினதும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கைக்கு முரணாக திறைசேரியின் அங்கீகாரமின்றி பொதுச் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் நிறுவகத்தின் பதவியணியினருக்காக ஊக்குவிப்புப் படிகள், போக்குவரத்து படி, போசணைப் படிகள், சீருடைப் படிகள், வார இறுதி நாள் படிகள் மற்றும் சேமித்த விடுமுறைகளுக்கான படிகள் என மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 57,448,764 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

3. **நிதி மீளாய்வு**

3.1 **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 179,309,428 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 122,985,650 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 56,323,778 தொகையான அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. ஊழியர் ஊதியம் ரூபா 14,296,649 இனாலும் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளுக்கான செலவினம் ரூபா 12,216,366 இனாலும் ஏனைய செயற்பாட்டு செலவினம் ரூபா 21,691,217 ஆல் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டு வருமானம் ரூபா 92,249,093 ஆல் மற்றும் நிதி வருமானம் ரூபா 17,874,215 ஆல் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவுகளின் அதிகரிப்புக்கான பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 68,349,797 தொகையான மிகை தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 179,309,428 ஆக இருந்தது. மேலும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை மீள சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 291,105,070 ஆக காணப்பட்ட நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து, மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 545,617,634 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

(அ) நிர்மாணங்கள், வியாபார பொருட்கள், செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச அடிப்படையில் நியமங்களை தயாரித்தல் மற்றும் அந்த நியமங்களை பொதுவாக பின்பற்றப்படுவதனை மேம்படுத்தல்.

(ஆ) கைத்தொழில் மற்றும் வணிகத் துறைகளில் நியமப்படுத்தல் மற்றும் தரக்கட்டுப்பாட்டை மேம்படுத்துதல்.

(இ) நியமப்படுத்தல் மற்றும் தரக்கட்டுப்பாட்டினை வியாபிக்கும் செயற்பாட்டிற்காக ஆய்வுகூடங்களையும் நூலகங்களையும் ஸ்தாபித்தல் மற்றும் நடாத்திச் செல்லல் மற்றும் அதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(ஈ) உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகளை உள்ளடக்கிய உற்பத்திகள், வியாபாரப் பொருட்கள், 1979 இன் 52 ஆம் இலக்க புலமை ஆதன அதிகாரச்சட்டத்திற்கு அல்லது தர நியமம் அல்லது வேறு ஏதேனுமொரு நியமத்தினைப் போன்றே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், வியாபாரப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் போது பயன்படுத்தப்படும் உற்பத்தி செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான வேறு ஏதாவது எழுத்து மூல சட்டத்திற்கு இணங்க இருக்கின்றதா எனப் பரிசோதனை செய்வதற்கான வேலைத் திட்டங்களை தயாரித்தல் அல்லது வசதிகளை வழங்குதல்.

(உ) நுட்பமான உபகரணம், அளவீட்டு உபகரணம் மற்றும் விஞ்ஞான உபகரணங்களைப் பரீட்சித்தல் மற்றும் அளவுகளைப் பரீட்சிப்பதற்காகவும் தீர்மானிக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்கும் வகையில் அவை தொடர்பாக சான்றிதழ்களை வழங்குவதற்காகவும் வேலைத்திட்டங்களில் ஈடுபடல் அல்லது வசதிகளை வழங்குதல்.

(ஊ) நியமப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வசதிகளை வழங்குதல் அல்லது தயாரித்தல்.

(எ) இந்த அதிகாரச்சட்டத்திற்குரிய ஏற்பாடுகளுக்கு இணங்க சான்றிதழ் பத்திரங்களை அடையாளமிடும் முறைமையொன்றினை நடைமுறைப்படுத்தல்.

(ஏ) உள்நாட்டு நுகர்வுக்கான அல்லது ஏற்றுமதிக்கான வியாபாரப் பொருட்கள். பொருட்கள், உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் மற்றும் ஏனையவைகளின் தரத்தை உறுதிப்படுத்தல்.

(ஐ) கல்விசார், ஆலோசனை மற்றும் ஏனைய வழிகளில் நியமமிடல் மற்றும் தரக்கட்டுப்பாட்டை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும்

(ஒ) நிறுவகம் தோற்றுவிக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் சமமான நோக்கங்களையுடைய இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் நபர்கள், சங்கம் அல்லது அமைப்புக்களுடன் ஒத்துழைப்பதற்கான ஏற்பாடுகளை வழங்குதல்.

(ஓ) வியாபாரப் பொருட்கள், பொருட்கள், உற்பத்திகள், உபகரணங்கள், செயன்முறைகள் மற்றும் முறைமைகளின் தரத்தை விருத்தி செய்வதற்கு உற்பத்தியாளர்களிடமிருந்தும் பயன்படுத்துபவர்களிடமிருந்தும் ஆர்வத்தை இணைத்தல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நுகர்வோரின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக நுகர்வுக்காகவுள்ள பண்டங்களின் தரத்தினை உறுதி செய்வதற்கு சந்தை மாதிரிகளை பரிசோதித்தல் நிறுவகத்தின் பணியொன்றாகும். எனினும், சுமார் 850 உற்பத்தி நிறுவனங்கள் நியம இலட்சினை அனுமதிப்பத்திரம் பெற்றோராக நிறுவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், ஆண்டிற்கான இலக்காக 40 மாதிரிகளை மாத்திரம் பரீட்சிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது 19 மாதிரிகள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்தன. பொருட்களின் சான்றுபடுத்ததும் பிரிவிற்காக வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,770,000

தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 2,995,904 தொகை பயன்படுத்தப்படாதிருந்ததுடன், சந்தை மாதிரிகளை பரீட்சித்தல் மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியமையினால், சந்தை மாதிரிகளை பரீட்சிப்பதன் மூலம் நுகர்வோரின் பாதுகாப்பினை சான்றுபடுத்துவதற்காக நிறுவகம் கூடுதலாக கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கைத்தொழில் மற்றும் வர்த்தக துறைகளின் நியமப்படுத்தல் மற்றும் தரக்கட்டுப்பாடு, மேம்படுத்தல் ஆகியன நிறுவனத்தின் பிரதான நோக்கமொன்றாவதுடன், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) இலங்கை நியமம் 591:2014 இன் பிரகாரம் ரின் மீன்களின் நியமத்தினை பரிசோதித்தல்.**

---

- தனியார் உற்பத்திக் கம்பனியொன்றிடமிருந்து மீளாய்வாண்டின் போது 39 சந்தர்ப்பங்கள் ஐ.அ.டொலர் 3,356,709 பெறுமதியான 2,194,591 கிலோ கிராம் ரின் மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நியமத்தின் 5.15 ஆம் பிரிவிற்கமைய எந்தவொரு இருப்பிற்காகவும் பாரவுலோகம் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2 தனியார் உற்பத்திக் கம்பனிகளிடமிருந்து மீளாய்வாண்டின் போது 218 சந்தர்ப்பங்களில் ஐ.அ.டொலர் 15,089,602 பெறுமதியான 9,924,456 கிலோகிராம் ரின் மீன் இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் 211 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 10,093,925 பெறுமதியான 6,639,393 கிலோகிராம் ரின் மீன்களுக்கான பார உலோகம் தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) **இறக்குமதி செய்யப்பட்ட கல்வனைசு குழாய்களின் நியமத்தினை பரிசோதித்தல்**

---

- உற்பத்திக் கம்பனியொன்றிடமிருந்து 2015 யூலை முதல் 2016 திசெம்பர் வரையிலும் 47 சந்தர்ப்பங்களின் இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 801,336 பெறுமதியான கல்வனைசு உருக்கு குழாய்களின் 1,208,988 கிலோகிராம்களின் 43 சந்தர்ப்பங்களின் இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 744,342 பெறுமதியான 1,125,450 கிலோகிராம் கல்வனைசு உருக்கு குழாய்களுக்காக மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 4 சந்தர்ப்பங்களில் 3 சந்தர்ப்பங்களிலும் நியம அளவீடுகளுக்கு இணங்காத போது மீண்டும் மாதிரிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாது ஐ.அ.டொலர் 40,438 பெறுமதியான 58,800 கிலோ கிராம் கல்வனைசு உருக்கு குழாய்களை சந்தைக்கு விநியோகிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

- இரு இறக்குமதியாளர்களால் உற்பத்தி கம்பனியொன்றிடமிருந்து 05 சந்தர்ப்பங்களில் ஐ.அ.டொலர் 553,993.88 பெறுமதியான 812,494 கிலோகிராம் கல்வனைசு உருக்கு குழாய்களின் இருப்பொன்று இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன், அந்த இருப்புக்களின் நியம அமைப்புக் குறிப்பீடுகள் தோல்வியடைந்துள்ள போதிலும், மீண்டும் மாதிரி பரிசோதிக்கப்படாது அந்த இருப்புக்கள் சந்தைக்கு விடுவிக்கப்பட்டிருந்தன.

(iii) **இலங்கை நியமம் 1427:2011 இன் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட மாகரீனின் நியமப் பரிசோதனை**

---

- மீளாய்வாண்டின் போது தனியார் கம்பனியொன்றினால் 32 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 501,472 பெறுமதியான 732,703 கிலோகிராம் மாகரீனுக்காக இலங்கை நியமம் 1427:2011 இன் 5.6 ஆம் பிரிவுக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டிய பாரவுலோகம் தொடர்பான பரிசோதனை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அவற்றுள் 17 சந்தர்ப்பங்களில்

இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 254,237 பெறுமதியான 366,703 கிலோகிராம் மாகரீன்களுக்காக நியமத்தின் 5.5 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய நுண்ணங்கிகள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2013 நவம்பர் 01 ஆந் திகதிய DMS/Policy/03 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையினை திருத்தத்திற்கு உள்ளாக்குதல் மற்றும் சம்பள முரண்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக வெளித்தரப்பினரொருவருக்கு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 425,000 செலுத்தி அவதானிப்பு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டுத் தொழிற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இராசாயன பொருட்கள் அவ்வவ்போது பரிசோதிக்கப்பட்டு காலாவதியாகும் போது கைத்தவிர்ப்பதற்கான உரிய நடைமுறையொன்று நிறுவனத்தில் இல்லாதிருந்ததுடன், கணக்காய்வுத் தெரிவு பரிசோதனையின் போது 1996 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் காலாவதியாகிய 25 இரசாயன பொருள் உருப்படிகள் களஞ்சியத்தில் காணப்பட்டன. அவற்றை கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், அவற்றுள் 11 உருப்படிகளின் ஆய்வுகூட நடவடிக்கைகளுக்காக இரசாயன பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 10 வருடங்களுக்கு மேற்பட்ட விநியோகிக்கப்படாத ரூபா 670,626 கிரயமான 103 கண்ணாடி உபகரணங்களும் ரூபா 1,839,338 கிரயமான 454 இரசாயன பொருள் உருப்படிகளும் களஞ்சியத்தில் காணப்பட்டன. இந்த இருப்பினை பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தக்கூடிய இயலுமை காணப்படுகின்றதா என்பதை பரிசோதித்து பரிசோதனைகளுக்காக பயன்படுத்துவதற்கோ அல்லது பயன்படுத்த முடியாதாயின் கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 நிதியங்களின் குறைப்பயன்பாடு

சில பொருட்களின் சில நியம அளவீடுகள் பரிசோதிக்கப்பட்டிருக்காததுடன், போதியளவான ஆய்வுகூட வசதிகள் இல்லாதிருந்தமை அதற்கு காரணமாக அமைந்திருந்ததாக முகாமைத்துவத்தினால் குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 120,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 61,018,418 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் வருடாந்த மீண்டெழும் செலவினங்களில் ரூபா 62,777,892 தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.5 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் நிறுவனத்தின் போக்குவரத்துத் தேவைப்பாடுகளுக்காக வாடகை அடிப்படையின் 05 வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 6,618,077 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த சேவையினை பெற்றுக்கொள்ளல் பெறுகைகள் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பெறுகைகள் நடைமுறையை பூர்த்தி செய்வதற்காக 2015 பெப்ரவரி முதல் திசெம்பர் வரையான 11 மாத காலம் கடந்திருந்தது. இதற்கமைய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.11 (அ) பிரிவிற்கமைய தேவையான சேவையினை தேவையான சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்வதற்காக பெறுகைகள் நடைமுறை செயற்திறனாக திட்டமிடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் செப்தெம்பர், நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய மாதங்களில் வாடகை வாகனங்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பான உடன்படிக்கை நிறைவடைந்திருந்த போதிலும், அவற்றை நாளதுவரையாக்காது 2017 மே மாதம் வரையிலும் வாடகை வாகனங்களை பெற்றுக்கொண்டு ரூபா 2,733,570 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 05 வாகனங்களுக்கு மேலதிகமாக நிறுவனத்தினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்காக தனியார் கம்பனியொன்றிற்கு மீளாய்வாண்டினுள் ரூபா 2,560,094 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட

வாகனங்களுக்காக ஒரு கிலோ மீட்டருக்கு ரூபா 70 படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த பெறுமதியை பெறுகைகள் நடைமுறையை பின்பற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களின் ரேட்களுடன் ஒப்பிடும் போது ஒரு கிலோ மீட்டருக்கு ரூபா 25 அதிகமான ரேட்டாக காணப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 780 இன் பிரகாரம், அரச நிதியை சிக்கனமாகப் பயன்படுத்தல் தொடர்பில் நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பெறுகைகள் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 247.15 மில்லியனான பெறுகைகள் நடவடிக்கைகளில் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 25.2 மில்லியனாக இருந்ததுடன் 18 பெறுகைகளுக்குரிய எந்தவொரு நடவடிக்கையும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 39.9 மில்லியன் கிரயமான 23 பெறுகை நடவடிக்கைகளுக்காக நிறுவனத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் அமைப்புக் குறிப்பீடுகளை தயாரிக்கும் பணியானது 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான வருடங்களில் நிறுவகத்தின் இரு பிரிவுகளில் கோரப்பட்டிருந்த ரூபா 46,755,034 கிரயமான 5 உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 01 முதல் 02 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்ததுடன், ரூபா 69,424,944 மதிப்பிடப்பட்ட கிரயமுடைய 03 உபகரணங்கள் 2017 ஆகஸ்ட் கணக்காய்வு திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. 8 உபகரணங்களில் 5 உபகரணங்களும் அவசர தேவைப்பாடுகளுக்காக உரிய பிரிவுகளால் கோரப்பட்டிருந்தது.

(ஈ) பெறுகைகள் திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றத்தை பரிசீலிப்பதற்காக செயன்முன்னேற்ற அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பூர்த்தி செய்யப்பட்ட பெறுகைகளின் உள்ளவாறான கிரயம் மற்றும் ஏனைய பெறுகைகளின் விகிதாசார பௌதீக முன்னேற்றம் அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினப் பெறுமதிகளுக்கிடையே 15 சதவீதம் முதல் 560 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | (i) வங்கி இணக்கக்கூற்றினை தயாரிக்கும் உத்தியோகத்தர் மற்றும் சான்றுப்படுத்தும் உத்தியோகத்தர்கள் திகதியை குறிப்பிட்டு கையொப்பமிடப்பட்டிருக்காமை |
| | (ii) முற்பணங்களை தீர்ப்பதற்கு நீண்ட காலம் கடந்திருந்தமை. |

Auditor General's Department

(iii) முற்பணப் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படாமை மற்றும் பதிவேடுகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகள் இணக்கஞ் செய்யப்படாமை.

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு

(i) ஒவ்வொரு இருப்பு தொகுதிகளுக்குமான பெறுமதி, அலகுகளின் எண்ணிக்கை ஆகியவை குறிப்பிடப்படும் இருப்புப் பேரேடொன்று பேணப்படாமை.

(ii) இருப்பு மீதிகளுக்காக காலப் பகுப்பாய்வொன்றினை கணனிக் கட்டமைப்பிலிருந்து பெற்றுக் கொள்ள முடியாமை

(iii) ஒவ்வொரு பிரிவுகளிலும் பொருட்கள் கிடைத்த திகதிகள் மற்றும் பெறுகைகள் பத்திரங்களின் இலக்கங்களை உள்ளடக்கிய பொருட் பதிவேட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாகப் பேணப்படாமை

(iv) முதலில் பெறப்பட்ட பொருட்களை முதலில் விநியோகிப்பதற்கு மற்றும் பொருட்களை இனங்காணுவதற்கு இலகுவான முறையில் களஞ்சியத்தில் பொருட்களை ஒழுங்குபடுத்தாமை.

(v) ஒவ்வொரு பிரிவகளிலிருந்து களஞ்சியத்திற்கு மீள் ஒப்படைக்கப்பட்ட இருப்புக்கள் தொடர்பான அறிக்கைகள் அந்த பிரிவினுள் பேணப்படாமை

(vi) காலாவதியான இரசாயன பொருட்களை வேறுவேறாக இனங்காணக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தாமை.

| | |
|---|---|
| | (vii) பயன்படுத்த முடியாத பொருட்களுக்காக பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்படாமை |
| | (viii) பிரிவுகளின் பொருட் பதிவேட்டுப் புத்தகங்கள் வருடாந்தம் சமப்படுத்தப்படாமை |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | பதில் விடுமுறையினை பெற்றுக்கொள்வதற்காக முன்னரே தீர்மானத்து கடமை தினத்திற்கு முன்னர் அதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாமை |
| (ஈ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) பட்டியலிடும் போது தாமதங்கள் ஏற்பட்டமை மற்றும் அது தொடர்பில் அவ்வவ்போது மீளாய்வு செய்யாமை |
| | (ii) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பட்டோலைகள் மற்றும் பொதுப் பேரேடுகள் அவ்வவ்போது இணக்கம் செய்யப்படாமை |
| | (iii) மாதாந்தம் சம்பள பொழிப்புக்களை பரிசோதிக்கும் உத்தியோகத்தர் மற்றும் சான்றுபடுத்தும் உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்டிருக்காமை. |
| | (iv) சில ஊழியர்களால் சம்பளப் பட்டியல்கள் மற்றும் கொடுப்பனவு பதிவேடுகளில் கையொப்பமிடப்பட்டிராமை |
| | (v) அனுமதிப்பத்திரம் பெற்ற உற்பத்தியாளர்களின் தகவல்கள் நாளதுவரையாக பேணப்பட்டிராமை |

| | | |
|---|---|---|
| (உ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடுகளினுள் ஒவ்வொரு சொத்துக்களுக்காகவும் அடையாளம் காணுவதற்கான இலக்கமொன்றும், ஒவ்வொரு வாகனமும் தாபிக்கப்பட்டுள்ள பிரிவும் பதிவு செய்யப்படாமை. |
| | (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பான கணனி கட்டமைப்பு இணக்கம் செய்யப்படாமையால், சொத்துக்களின் பெறுமதிகளில் வேறுபாடுகள் நிலவுகின்றமை, சில சொத்துக்கள் பதிவேட்டிலும், சில சொத்துக்கள் கட்டமைப்பிலும் பதிவு செய்யப்படாமை. |
| (ஊ) வாகனக் கட்டுப்பாடு | (i) | வாகனங்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு, வாகனங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தரால் பெயர் மற்றும் திகதியை குறிப்பிட்டு குறிப்பு புத்தகங்களில் கையொப்பமிடாமை |
| | (ii) | ஆயுதங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பான தகவல்கள், சக்கரமிடும் சந்தர்ப்பத்தில் வாகனத்தின் மானியின் வாசிப்பு, வாகன அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பான தகவல்கள் சம்பவக் குறிப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்படாமை |
| | (iii) | சக்கரம் பொருத்துதல், சக்கரம் பொருத்துதலின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக பழுதுபார்த்தல் செலவினமொன்றாக சம்பவக் குறிப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தமை. |

ලේඛකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

AGDSL

(iv) சம்பவக் குறிப்பு புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பழுதுபார்த்தல் செலவினம் மற்றும் பேரேட்டில் பழுதுபார்த்தல் செலவினம் ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடுகள் நிலவியமை மற்றும் அது தொடர்பில் மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்படாமை.

(v) வாகனங்களின் நுகர்வுக்குள்ளாகும் எரபொருள் அளவு தொடர்பில் அவ்வவ்போது பரிசோதனை மேற்கொள்ளாமை

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**1971இன் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2) (இ) பிரிவின் நியதிகளுக்கு அமைய, இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் 2016 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான தலைவரது கருத்துரைகள்**

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டுத் தரங்கள்

**(அ) இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் – 01**

வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட செலவினத்தின் விபரங்கள் 2016 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்களின் குறிப்பு 16இன் கீழ் காட்டப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டில், வருமானத்தையும் மற்றும் தொடர்பான செலவினத்தையும் பதிவுசெய்வதற்காக புறம்பான பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டுள்ளன. 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானத்தின் கூற்றில் செலவினத்திலிருந்து வருமானம் புறம்பாக்கப்பட்டுள்ளது.

**(ஆ)** 2017ஆம் ஆண்டுக்கான பணப்பாய்வுக் கூற்றுக்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகளின் பிரகாரம் அவதானிப்புக்கள் (i) முதல் (iii) வரையிலான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும்.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ)** ஊழியர் லீவைக் காசாக்குதல் தொடர்பில் எதிர்காலத்தில் போதிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஆ)** 2017ஆம் ஆண்டுக்கு நிதிசார் கூற்றுக்களில் கிடைக்கவேண்டிய ஒன்றாக ரூ.663,675/- கொண்ட தொகை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### 2.3 கிடைக்கவேண்டியதும், கொடுப்பனவுக்குரியதுமான கணக்குகள்

**(அ)** ஐந்து இ.க.நி. ஊழியர்களுக்கு வியட்நாமுக்கான வருகைதரல் ஒன்றுக்கான விசாக் கட்டணத்தைப் பெறுவதற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணங்களே ரூ.30,598/- கொண்ட நிலுவை தொடர்பினைக் கொண்டுள்ளது. விசா ஆகுசெலவை (ஒன்றில் நிறுவனம் அல்லது ஊழியர்கள்) யார் ஏற்றுக்கொள்வது அவசியம் என்பதற்கான பிணக்கொன்று உள்ளதனால் திறைசேரியிலிருந்து எழுத்திலான தெளிவுபடுத்தல் பெறப்படும்.

ரூ.10,000/- கொண்ட கடனின் அறவிடல் தன்மையை மதிப்பிடுவதற்கும் அத்துடன் கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவுக்கு பொருத்தமான பரிந்துரைகள் அனுப்பப்படுவதற்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

**(ஆ)** 2016ஆம் ஆண்டில் கடன்தருனர்கள் மீதிகள் பகுப்பாயப்பட்டதுடன், ரூ.915,520/-க்கான சீராக்கல் பதிவுகள் செய்யப்பட்டன. கணக்காய்வு, முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் நீண்ட விசாரணையிலான மீதிகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன்,

கடனின் அறவிடல் தொடர்பில் பொருத்தமான பரிந்துரையொன்றை அனுப்புவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

**(இ)** மொத்தத்தில் ரூ.615,841/- மட்டுமே நிறுத்திவைத்தல்கள் தொடர்பானவை என்பதுடன், அவை காலத்தின் விடுகையின் காரணமாக விடுவிக்கப்பட முடியும். மீதி நடைமுறையிலான பணி தொடர்பானவை என்பதுடன், நிறுத்திவைத்தல்களை விடுவிப்பதற்கு வேண்டுகோள்களை அனுப்புவதற்கு விநியோகஸ்தர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.4 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

### (அ) இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் தாபன நியதி

#### *i. பிரிவு XIIஇன் பந்தி 7.1.1*

இறக்குமதி சோதனைத் திட்டத்தின் (அத்துடன் உற்பத்தி சான்றளிப்பு திட்டமும்) செயற்பாட்டுக்கு ஆய்வுகூடத்தின் சேவைகள் அத்தியாவசியமானவையாகும். 1986இல் 08 உற்பத்திப்பொருள் வகுதிகளுடன் இறக்குமதிச் சோதனைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது தற்போது 123 உற்பத்திப்பொருள் வகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் (அத்துடன் உற்பத்தி சான்றளிப்புத் திட்டமும்) கீழ் ஈர்த்தெடுக்கப்படும் மாதிரிகளின் சோதனைக்கான அதிகரித்த கிராக்கிக்கு ஈடுசெய்வதற்காக வார இறுதிகளின் போது பணியாற்றுவது அத்தியாவசியமானது என உணரப்பட்டுள்ள அதேவேளை இந்நோக்கத்திற்காக வெளியார் ஆய்வுகூடங்களிலிருந்தும் சேவைகளை இ.க.நி. பெறுகின்றது. சில உற்பத்திப்பொருள் சோதனையானது வார இறுதிகளின் (உதாரணம் 28 நாட்களுக்கு சிமெந்தின் பலத்தை சோதித்தல்) போது வேலை செய்வதை அவசியப்படுத்துவதுடன், இல்லாவிடில் சோதிக்கப்படுவதற்கு அவசியமான மாதிரிகளின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட வேண்டும். அலுவலகத்தில் 08 மணித்தியாலங்களுக்கு இருப்பதை விட நேரகாலத்திற்கு வேலையை முடிப்பதற்காக வார இறுதிகளின் போது பணியாற்றுவதற்கு ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு வார இறுதிகளின் போது 6 மணித்தியாலங்களுக்கு வேலை செய்வது மிகவும் முக்கியமானதாகும். மேலும், வாரமொன்றுக்கு 6-7 நாட்களுக்கு ஆய்வுகூடச் சூழலில் பணியாற்றுவது சுகாதார கரிசனையிலானதாகும் என்பதும் கருத்திற்கெடுக்கப்பட்டுள்ளது.

வார இறுதிகளின் போது சோதித்தல் மேற்கொள்ளப்படாவிட்டால் சோதனை அறிக்கைகளை வழங்குவதில் தாமதங்களின் காரணமாக, இறக்குமதி சோதனைத் திட்டத்தின் கீழ் பொருட்பொதிகளை அப்புறப்படுத்துவதில் நீண்ட தாமதங்கள் இருக்கும்.

மேலே விளக்கப்பட்டவாறு உத்தியோகபூர்வ அவசியத்தின் மீது விடுமுறைகளில் பணியாற்றுவதற்கு பணியாட் உறுப்பினர்கள் ஊக்குவிக்கப்படுவது அவசியமாகும். அலுவலகத்தில் 08 மணித்தியாலங்களுக்கு தங்கியிருப்பதை விட நேரகாலத்திற்கு பணியை முடிப்பதே மிகவும் முக்கியமானதாகும். எனவே, இதன் பிரகாரம் பெருமளவு ஆண்டுகளாக இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வார இறுதிகளின் போது பணியாற்றுவதற்கு ஊழியர்கள் செயல்நோக்கமளிக்கப்படாவிட்டால், மிக நீண்ட காலத்திற்கு அமுலாக்கப்பட்ட நடைமுறையொன்றை மாற்றுவது இறக்குமதி சோதனை திட்டம் போன்ற முக்கியமான திட்டங்களைப் பாதிக்கும் நடைமுறையிலான பிரச்சனைகளுக்கு இட்டுச்செல்லக்கூடும்.

மேலும், அதிகளவு புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பதை விட உற்பத்தித்திறனான ஊழியர்களின் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையொன்றுடன் வேலைப்பணியை கையாள்வதற்கு வார இறுதிகளின் போது பணியாற்றுவதற்கு ஊழியர்களைச் செயல்நோக்கமளிப்பதற்கு நிறுவனத்தினால் பலத்த அவசியமொன்று விட்டுவைக்கப்பட்டுள்ளது.

*ii.* ***பிரிவு XIIஇன் பந்தி 7.3***

சில தசாப்தங்களாக பதில் லீவுடன் சேர்த்து மேலதிக நேரவேலைக்கான கொடுப்பனவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பலதரப்பட்ட தரப்புக்களிலிருந்து விசாரிக்கப்பட்ட போதிலும் இதுவரை காரணங்களை விளக்கமளிக்க முடியாதிருக்கின்றது. எனினும், நிறைவேற்று தரம் சாராத பணியாளருக்கு வழங்கப்பட்டுள்ள இந்தச் சலுகையை வெட்டுதல் சரீரஉழைப்பு அமைதியின்மைக்கு இட்டுச்செல்லக்கூடும் என்பதுடன், மேலே (i)இல் விளக்கப்பட்டவாறு நிறுவனத்தின் செயற்பாடுகளையும் பாதிக்கும்.

## (ஆ) இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் நிதிசார் ஒழுங்குவிதிகள்

### *i.* நிதிசார் ஒழுங்குவிதி இல.102 மற்றும் 760

காணாமல்போன நூல்களைத் தேடுவதற்கான நடைமுறையில் ஆவணப்படுத்தல், தகவல் பிரிவின் பணியாளர் உள்ளதுடன், இதுவரை அறிக்கையிடப்பட்ட 163 எண்ணிக்கையில் 20 நூல்களை அவர்களினால் மீட்கக்கூடியதாக இருந்தது. மீட்கின்ற நடவடிக்கை தொடர்வதுடன், நடைமுறையின் இறுதியில் நிதிசார் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

### *ii.* நிதிசார் ஒழுங்குவிதி இல.189

நிலுவையிலான திருப்பப்பட்ட காசோலைகளில், 2017ஆம் ஆண்டில் ரூ.38,440/- அறவிடப்பட்டுள்ளது. மீதியான திருப்பப்பட்ட காசோலைகளுக்கு பொலிஸ் முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தாக்கல்செய்யப்பட்ட பொலிஸ் முறைப்பாடுகள் தொடர்பில் பின்தொடருமாறு உதவி பணிப்பாளர் (சட்டம்) கேட்கப்பட்டுள்ளார்.

### *iii.* நிதிசார் ஒழுங்குவிதி இல.757

உணவு, மின்சார ஆய்வுகூடங்களிலுள்ள கருவிகள் புறநீங்கலாக எடையளவியல் பிரிவினதும், ஆய்வுகூடத்தினதும் அளவைச் சபை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப் பிரிவுகளில் அளவைச் சபையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## (இ) 15/05/2015 திகதியிடப்பட்ட நிதி அமைச்சு சுற்றுநிருபம் இல.01/2015/01இன் பந்தி இல. 4(அ)(i)( iii)

மேற்படி சுற்றுநிருபத்தின் பிரகாரம், ரூ.36,775/-க்கு மேற்பட்ட மாதாந்தச் சம்பளத்தைப் பெறும் அரசாங்க அலுவலர்களுக்கு தரம் I உணவுப்படி கொடுப்பனவு செய்யப்பட முடியும். இதன் பிரகாரம், ரூ.36,775/-க்கு மேற்பட்ட மாதாந்தச் சம்பளங்களைப் பெறும் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்களுக்கு (HM தரங்கள்) கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

எனினும், இந்த விடயத்தை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரைத் தவிர சகல சிரேஷ்ட முகாமையாளர்களுக்கும் தரம் II கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2.5 போதிய அதிகாரமொன்றினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

***மாதாந்த செயல்நோக்கமளிப்புப் படி***

இறுதியான இலக்குகளைச் சாதிப்பதற்காக நிறுவனம் திட்டமான வளர்ச்சியொன்றை கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக செயற்றிறன் காட்டிகளையும் மற்றும் ஊழியர் அறிக்கையிடும் காட்டிகளையும் உள்ளடக்கும் மூலப்பிரமாணம் மீதான அடிப்படையில் இ.க.நி.இனால் இந்த மாதாந்த படி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மீதி கணிப்பெண் அட்டை முறைமையைப் பயன்படுத்தி தனிப்பட்ட கணிப்பெண் அறிக்கையொன்றை விருத்திசெய்கின்றதும், அத்துடன் ஊழியர்களின் மாதாந்தச் செயற்றிறனுடன் இந்த செயல்நோக்கமளிப்பிலான படியை இணைக்கின்றதுமான நடைமுறையில் இ.க.நி. உள்ளது. தற்போது இம்முறைமை விருத்திசெய்யப்படுவதுடன், விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சின் ஊடாக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக விபரம் அனுப்பப்பட்டுள்ளதுடன், திட்டமான பதிலிறுப்பொன்றுக்காக காத்திருக்கப்படுகின்றது.

ஆண்டு முழுவதும் நிறுவனரீதியிலான வருமானத்தை அதிகரிப்பதற்கும் அத்துடன் வருமானம் ஈட்டும் நிலையை தக்கவைத்திருப்பதற்கும் அளப்பரிய செயல்நோக்கமொன்றாக கடந்த சில வருடங்களுக்கு மேலாக இந்தப் படி கருவியாக செயற்பட்டுள்ளது. மேலும், இது சுய நிலைத்திருத்தல் நிலையை சாதிப்பதற்கான இ.க.நி.க்கான பங்களிப்பின் காரணங்களில் ஒன்றாக விளங்குகின்றது.

எனினும், 1984இன் இல.6 இ.க.நி. அதிகாரச்சட்டத்தினால் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், சபையினால் இந்தப் படி சரிவர அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், பொது திறைசேரியின் பிரதிநிதி சபையின் உறுப்பினர்களில் ஒருவராகவும் விளங்குகின்றார்.

***போக்குவரத்துப் படி***
***உணவுப் படி***

மேலே (4)இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இந்த படிகள் ஆளுனர் சபையினால் உரியவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஏதேனும் தாபனத்திற்கு ஊழியர்கள் சொத்து என்பதுடன், ஏதேனும் நிறுவனத்தை முன்னேற்றுவதற்கு அவர்களது ஆதரவும், ஒத்துழைப்பும் அவசியமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையொன்றாகும். முன்னேற்றகரமான நிலையில் இ.க.நி. உள்ளதனாலும், இதன் விளைவொன்றாகவும் இ.க.நி. சட்டத்தில் உடமையாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மீதான அடிப்படையிலான நிறுவனத்தின் சபையானது இ.க.நி.இன் ஊழியர்களுக்கு இந்த படிகளை வழங்குவதற்கு தீர்மானித்ததுடன், இதன் விளைவாக நிறுவனத்தின் தற்போதைய முன்னேற்றம் சாதிக்கப்பட்டுள்ளது.

***உடைப் படி***

இ.க.நி.இனால் தோற்றுவிக்கப்படும் வருமானத்தைப் பயன்படுத்தி ஆண்டின் இறுதியில் வருடாந்தக் கொடுப்பனவு செய்யப்படும் ஒரு நேரத்திலான படியொன்றே இதுவாகும். இது 22/01/2013 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் சபையினால் உரியவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

***மருத்துவ லீவைக் காசாக்குதல்***

வர்த்தக, விஞ்ஞான அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட 23/11/1983 திகதியிடப்பட்ட இல.326 சுற்றுநிருபத்தின் பிரகாரம், பயன்படுத்தப்படாத மருத்துவ லீவைக் காசாக்குவதற்கான கொடுப்பனவு 1983 முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனால் 1983 முதல் 2016 வரை 33 ஆண்டுகளாக மருத்துவ லீவு காசாக்கப்பட்டுள்ளது.

***சமயாசமய மற்றும் விடுமுறை லீவைக் காசாக்குதல்***

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரச்சட்டத்தினால் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், 24/11/94 திகதியிடப்பட்ட இல.94/07/13ஐக் கொண்ட சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 1994ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாத சமயாசமய மற்றும் விடுமுறை லீவு காசாக்கப்படுகின்றது.

மேற்படி பயன்படுத்தப்படாத லீவைக் காசாக்குதல் மூலம் நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பணியாளரின் கிட்டுந்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது இ.க.நி.இன் உற்பத்தித்திறனை அதிகரிப்பதையும் விளைவித்துள்ளது. பணியின் எண்ணிக்கை மிக அதிகளவு அதிகரித்துள்ளதுடன், எனவே நிறுவனத்தின் ஊழியர்களின் சேவைப் பணியுடன் ஒத்துப்போவதற்கு மிகவும் அவசியமானதாகும். இல்லாவிடில், வேலைச்சுமையை முழுமைப்படுத்துவதற்கு சாத்தியக்கூறு இருக்கமாட்டாது. தமது முழுமையான லீவை எடுக்காமல் கூட பணிக்காக வருகைதருகின்ற ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு லீவைக் காசாக்குதல் நிறுவனத்திற்கு உதவியளித்துள்ளதுடன், அதிகரித்த வேலைச்சுமையை கவனிப்பதற்கு அவர்களின் பங்களிப்பைப் பெறுவதற்கு வழியையும் அமைத்துள்ளது. தமது லீவை எடுப்பதற்கு ஊழியர்கள் அனுமதிக்கப்பட்டால் மேலதிகப் பணியைக் கையாள்வதற்கு அது சாத்தியமற்றதாக விளங்கும் என்பதுடன், சந்தையில் போட்டியற்றதன்மைக்கும் இட்டுச்செல்லும்.

பணியாளர்களின் உரித்துரிமைகள் விட்டுவிடப்படுவதுடன், அவை காசாக்கப்படுவதனால் லீவைக் காசாக்குதல் ஊக்குவிப்பு கொடுப்பனவு ஒன்றாக அல்லது படியொன்றாக கருதப்படவில்லை.

## 3. நிதி மதிப்பாய்வு

### 3.1 நிதிசார் முடிவுகள்

முன்னைய ஆண்டுடன் (2015) ஒப்பிடுகையில், 2016ஆம் ஆண்டுக்கான நிகர மேன்மிகை இ.ரூ.56,986,867/-இனால் அதிகரித்துள்ளது. இது பிரதானமாக இ.ரூ.54,622,048/-இனால் தொழிற்பாட்டு வருமானத்தின் அதிகரிப்பினதும் அத்துடன் இ.ரூ.17,874,215/-இனால் நிகர நிதிசார் வருமானத்தின் அதிகரிப்பினதும் காரணமாகும்.

31.12.2016இல் உள்ளவாறு நடைமுறை-சாராச் சொத்துக்கள் 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது இ.ரூ. 26,391,665/-இனால் அதிகரித்துள்ளது. இது பிரதானமாக 2016ஆம் ஆண்டின் போது நடந்து கொண்டிருக்கும் வேலையில் (கட்டிடக் கருத்திட்டம்) அதிகரிப்பின் காரணமாகவேயாகும்.

31.12.2016இல் உள்ளவாறு 31.12.2015இல் உள்ளவாறு அதேதொகையுடன் ஒப்பிடுகையில்,இ.ரூ.159,113,196/-இனால் அதிகரித்துள்ளது. இது பிரதானமாக 2016ஆம் ஆண்டின் போது மூலதனங்களின் அதிகரிப்பின் காரணமாகும்.

முன்னைய ஐந்து வருடங்களில் உள்ளது போன்று, 2016ஆம் ஆண்டின் போது, திட்டமான வளர்ச்சியொன்றை நிறுவனம் பேணியுள்ளது என்பதை இம் முடிவுகள் காட்டுகின்றன.

நிறுவனத்தின் முழுமையான பங்களிப்பு 2012 முதல் 2016 வரை இ.ரூ.254,512,564/-இனால் அதிகரித்துள்ளது.

## 4. தொழிற்பாட்டிலான மதிப்பாய்வு

### 4.1 பௌதீகச் செயற்பேறுகள்

**(அ)** சந்தையில் கிட்டுகின்ற உற்பத்திப்பொருட்களின் தரத்தைக் கண்காணிப்பதற்கான கண்காணிப்புச் செயற்பாடொன்றாக சந்தை மாதிரிகளை ஈர்த்தெடுப்பதற்கான ஆணையொன்றை இ.க.நி. கொண்டிருக்கவில்லை. கட்டாயமான SLS குறிக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் கீழ் அடையாளங்காணப்பட்ட விடயங்கள் புறநீங்கலாக, தன்னிச்சையிலான திட்டமொன்றாக பிரதானமாக செயற்படுகின்ற SLS குறிகள் திட்டத்தின் கீழ் மட்டுமே இ.க.நி.இனால் சந்தை மாதிரிகள் ஈர்த்தெடுக்கப்படுகின்றன.

SLS குறிகள் திட்டத்தின் கீழ், உற்பத்திப்பொருளின் தரத்தின் கண்காணிப்பு கணக்காய்வுகளின் போது கண்காணிப்புக்காக மாதிரிகள் ஈர்த்தெடுக்கப்படுகின்றன. கண்காணிப்பு நோக்கங்களுக்காக மாதிரிகளை ஈர்த்தெடுப்பது சந்தை மாதிரிகளை ஈர்த்தெடுக்கும் இன்னொரு வழியாகும். ஆண்டின் போது திட்டத்தின் கீழ் 2,488 மாதிரிகள் ஈர்த்தெடுக்கப்பட்டதுடன், இது 19 சந்தை மாதிரிகளை உள்ளடக்குவதுடன், இது SLS குறிகள் திட்டத்தின் கீழ் திருப்திகரமான கண்காணிப்பினையும் நிரூபிக்கின்றது.

**(ஆ) (i) பாரமான உலோகத்திற்காக தகரத்திலடைக்கப்பட்ட மீனைச் சோதித்தல்**

இறக்குமதி சோதனைத் திட்டத்தின் கீழ், சாராமாறிகளின் அடுக்குநிகழ்வை சோதித்தல் அபாய முகாமைத்துவ அணுகுமுறையொன்றைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. பாரமான உலோகத்திற்காக தகரலத்திடைக்கப்பட்ட மீன்களை இ.க.நி. சோதித்துள்ளதுடன், இதுவரை தவறுகைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், 2016ஆம் ஆண்டிலும் பாரமான உலோகங்களுக்காக சோதனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**(ii) இறக்குமதியான GI குழாய்களின் தரத்தைச் சரிபார்த்தல்**

- **சூரியா குளோபல் ரியூப்ஸ் லிமிற்றெற்**

மேற்படி நிறுவனத்தால் தயாரிக்கப்படும் GI குழாய்களுக்கு SLS குறி வழங்கப்படுவதனால் எழுந்தமான மாதிரிகள் மட்டுமே ஈர்த்தெடுக்கப்படுவதுடன், பொதுவாக மாதிரிப்படுத்தல் அடுக்குநிகழ்வு 10 பொருட்பொதிகளில் ஒன்றுக்கே நடத்தப்படுகின்றது.

எழுந்தமான மாதிரிகள் ஈர்த்தெடுக்கப்படுவதனால் மாதிரிப்படுத்தலின் பின்னரே விற்பனைக்காக பொருட்பொதிகள் விடுவிக்கப்படுவதுடன் எனவே, அறிக்கையிடப்பட்ட தவறுகைகள் இருந்த போதிலும் மீள்-மாதிரிப்படுத்தல் செய்யப்பட முடியாது. ஆய்வுகூடத்தினால் அனுப்பப்படும் சோதனை அறிக்கைகளில் பாரிய தவறுகைகள் கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியான பொருட்பொதிகளிலிருந்து மாதிரிகள் ஈர்த்தெடுக்கப்படுகின்றன. பாவனைக்கு தவறுகைகள் ஓரத்திலானவை அல்லது ஆபத்தற்றவை என்றால் அவசியமான திருத்தத்திற்கு தயாரிப்பாளருக்கு அறிவிக்கப்படுகின்றது. கடந்த காலத்தில் பாரிய தவறுகைகள் அவதானிக்கப்படவில்லை என்பதுடன், அவசியமான நடவடிக்கைக்காக தயாரிப்பாளருக்கும் மற்றும் உற்பத்தி சான்றளிப்பு பிரிவுக்கும் சகல தவறுகைகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

எனினும், ஆய்வுகூடத்திலிருந்து 02 மாதங்களின் பின்னரே பொதுவாக சோதனை அறிக்கைகள் கிடைப்பதுடன், எனவே அக்காலத்தினுள் இறக்குமதி

செய்யப்படும் பொருட்பொதிகள் எழுந்தமான மாதிரிப்படுத்தலுக்கு உட்பட்டு விடுவிக்கப்படுகின்றன.

மேலே குறித்துக்கொள்ளப்பட்டுள்ளவாறு, தவறுகைகள் தயாரிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டதுடன், இலங்கையில் தயாரிப்பாளர் சமூகமளித்திருந்த போது அது குறித்து கலந்துரையாடப்பட்டது.

உற்பத்திப்பொருள் பாரிய தரத் தவறுகைகளைக் கொண்டிருக்காதபடியினால் உற்பத்தி சான்றளிப்புப் பிரிவின் பிரகாரம் மேற்படி தயாரிப்பாளரின் SLS அனுமதிச்சீட்டு இன்னுமே செல்லுபடியானதாகும்.

- **இன்ர்ர்நஷனல் இண்டஸ்ரீஸ் லிமிற்.**

மேற்படி நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் GI குழாய்களுக்கான பதிவு நிலையை நாம் வழங்கியுள்ளதனால் நாம் எழுந்தமான மாதிரிகளை மட்டுமே ஈர்த்தெடுப்பதுடன், பொதுவான மாதிரிப்படுத்தல் அடுக்குநிகழ்வு 10 பொருட்பொதிகளில் ஒன்றுக்கே நடத்தப்படுகின்றது. எழுந்தமான மாதிரிகள் ஈர்த்தெடுக்கப்படுவதனால் மாதிரிப்படுத்தலின் பின்னரே விற்பனைக்காக பொருட்பொதிகள் விடுவிக்கப்படுவதுடன் எனவே, அறிக்கையிடப்பட்ட தவறுகைகள் இருந்த போதிலும் மீள்-மாதிரிப்படுத்தல் செய்யப்பட முடியாது. மேலும் அறிக்கையிடப்பட்ட தவறுகைகள் விழிம்பு நிலையிலானவை என்பதுடன், அவசியமான நடவடிக்கைக்கு அப்பொழுதே தயாரிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டது. அத்துடன், ஆய்வுகூடத்திலிருந்து சோதனை அறிக்கைகள் எமக்கு கிடைத்தவுடன், பாரிய தவறுகைகள் இருந்தால் நாம் உடனடியான பொருட்பொதிகளிலிருந்து மாதிரிகளை ஈர்த்தெடுக்கின்றோம்.

எனினும், 01.02.2018இலிருந்து செயற்படத்தக்கதாக மேலும் மேம்படுத்தலுக்கான நடவடிக்கையொன்றாக ஏழு (07) பொருட்பொதிகளில் ஒன்றுக்கு மாதிரிப்படுத்தல் அடுக்குநிகழ்வை அதிகரிப்பதென நிறுவனம் தீர்மானித்துள்ளது.

**(iii) இலங்கைக் கட்டளை 1427/2011இன் பிரகாரம் இறக்குமதியான மாஜரினின் தரத்தைச் சரிபார்த்தல்**

**பாரமான உலோகத்திற்கும், நுண்ணுயிரியல் தேவைப்பாடுகளுக்கும் மாஜரினை சோதித்தல்**

பாரமான உலோகத்திற்கும் மற்றும் நுண்ணுயிரியல் தேவைப்பாடுகளுக்குமான முடிவுகளை உள்ளடக்கிய தத்துவமளிக்கப்பட்ட ஆய்வுகூட அறிக்கைகளுடன் மாஜரினின் பாரிய எண்ணிக்கை கொண்ட பொருட்பொதிகள் இணைந்துள்ளன. கடந்த கால செயற்றிறனைக் கரிசனைக்கெடுத்து அபாய முகாமைத்துவ அணுகுமுறை மீதான அடிப்படையில் எழுந்தமான சோதனைகளுக்கு அத்தகைய பொருட்பொதிகள் உட்படுகின்றன. தகரத்திலடைக்கப்பட்ட மீன்களுக்காக மேலே (i)இன் கீழ் வழங்கப்பட்ட விளக்கம் இங்கும் பிரயோகிக்கப்படுகின்றது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

01.11.2013 திகதியிடப்பட்ட இல. இல.DMS/policy/03ஐக் கொண்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம், ஆட்சேர்ப்புத் திட்டத்தை திருத்துவதற்காக 27.01.2015 அன்று கேள்விகள் கோரப்பட்டன. உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படப்பட்ட முழுக் கட்டணத்தில் 35%

நிறுவனத்திற்கு அடிப்படை இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். அடிப்படை இடைக்கால அறிக்கை 07.12.2015 அன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன், ரூ.105,000/- கொண்ட உரிய கட்டணம் கொடுப்பனவு செய்யப்பட்டது. இந்த அறிக்கை நிருவாகப் பிரிவில் கிட்டுகின்றது. சொல்லப்பட்ட இடைக்கால அறிக்கையைப் பகுப்பாய்ந்த பின்னர் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு அதிலுள்ள முன்மொழிவுகளுக்கு ஈடுசெய்வதற்கு போதுமானதல்ல என அறியச்செய்யப்பட்டது. எனவே, 05 ஆண்டுகளைக் கொண்ட எதிர்காலத்திற்கு ஆட்சேர்ப்புத் திட்டங்களின் முன்மொழிகளை ஈடுசெய்யுமுகமாக நடைமுறையிலான ஊழியர்கோப்பினை மீட்டுரைப்பதற்கு திட்டமிடப்பட்டது. எனவே, இரு (02) குழுக்கள் பின்வருவனவற்றுக்காக நியமிக்கப்பட்டன.

- சுற்றுநிருபம் இல.DMS/policy/03இன் பிரகாரம், ஆட்சேர்ப்புத் திட்டத்தை திருத்துதல்.
- ஐந்து (05) ஆண்டுகளைக் கொண்ட எதிர்காலத்திற்கு ஆட்சேர்ப்புத் திட்டத்துடன், ஊழியர்கோப்பு மீட்டுரைப்பு (அதிகரிப்பு) ஒன்றிணைக்கப்படுதல்.

அத்துடன், கணிசமான எண்ணிக்கையைக் கொண்ட பணி தற்போது முடிக்கப்பட்டுள்ளதுடன், பணி நடந்துகொண்டிருக்கின்றது.

## 4.3 தொழிற்பாட்டிலான செயற்பாடுகள்

**(அ), (ஆ)** விற்றொழித்தல் குழுவுக்கு நகராத மற்றும் மெதுவாக நகர்கின்ற இரசாயனங்களின் பட்டியலொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நகராத கண்ணாடிப் பண்டங்கள் தொடர்பில், ஆய்வுகூடப் பணிப்பாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடைமுறை முடிவாக்கப்பட்டவுடன் கண்ணாடிப் பண்டங்கள் தொடர்பில் விற்றொழித்தல் குழுவுக்கு பரிந்துரைகளை அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

கூறுவிலைகளைக் கோருதலின்/கேள்விகளின் மதிப்பாய்வுகளின் நேரத்தில் கேள்வி தேவைப்பாடொன்றாக விநியோகஸ்தர்களினால் இரசாயனங்களின் காலாவதி மீதான விபரங்களை அனுப்புவதற்கான தேவைப்பாட்டினை உள்ளடக்குவதற்கு நிருவாகப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ERP முறைமையின் அமுலாக்கத்துடன் மிகவும் உயர் தரமான பொருட்பட்டியல் முறைமையொன்று பேணப்பட முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 4.4 நிதியங்களைக் குறைத்துப் பயன்படுத்தல்

ஆய்வுகூட சாதனங்களின் கொள்வனவுக்கு ரூ.120,000,000/- வழங்கப்பட்ட போதிலும் ரூ.61,018,418/- கொண்ட தொகை மட்டுமே பிரதானமாக பின்வரும் காரணத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

- மிக நவீனமான விஞ்ஞானரீதியிலான சாதனங்கள் கொள்வனவு செய்யப்படுவதனால் விபரக்கூற்றுக்களின் தயாரிப்பு அதிகளவு நேரத்தை எடுக்கின்றது.
- வழமையான பண்டங்களை விட கேள்விகளைப் பெறுதல் அதிகளவு நேரத்தை எடுக்கின்றது.
- உறுப்பினர்களின் வேறு அர்ப்பணிப்புக்களின் காரணமாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களினதும் மற்றும் கொள்வனவுக் குழுக்களினதும் அவசியமான சேவைகளைப் பெறுவதில் நடைமுறையிலான கஷ்டங்கள்.

- விநியோகஸ்தர்களின் தாமதங்கள், கப்பலில் இருந்து இறக்குவதில் உள்ள தாமதங்கள், அப்புறப்படுத்துவதில் உள்ள தாமதங்கள் போன்றவற்றினால் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வேறு தாமதங்கள்

## 4.5 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறை

**(அ)** 2018-கொள்வனவுத் திட்டத்திற்கு மேற்படி விடயத்தை உள்ளடக்குவதற்கும் அத்துடன் இது தொடர்பில் கொள்வனவு நடைமுறையை முழுமைப்படுத்துவதற்கு உடனடியான நடவடிக்கையை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஆ)** பின்வருவனவற்றின் காரணமாக கொள்வனவுக் குழுவின் தீர்மானங்கள் தாமதமடைந்தன.

- அமைச்சுக்களின் மாற்றம்
- சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் போதுமானவை அல்ல என்ற காரணத்தினால் வாகனங்களின் சோதனையில் தாமதம்

எனினும் கேள்விகளின் காலஎல்லை நீடிக்கப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட சேவைகள் நேரகாலத்திற்கு பெறப்பட்டன. இதனால் நிறுவனத்தின் சேவைகள் தடங்கலின்றி மேற்கொள்ளப்பட்டன.

**(இ)** 02.06.2013 திகதியிடப்பட்ட அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல.12இன் (நல்லாட்சி) பிரகாரம் கேள்வுக்கான வாகனங்களின் சேவைகள் பெறப்பட்டன.

எனினும், புதிய உடன்படிக்கைகளை செய்துகொண்ட பின்னர் வேறு நிறுவனங்களிலிருந்து குறைந்த கட்டணத்திலான வாடகைக் கார் சேவைகளைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# 5. பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லாட்சி

## 5.1 கொள்வனவுத் திட்டம்

**(அ)** 2016-கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பெரும்பான்மையான ஆய்வுகூட சாதனங்கள் வெளிநாட்டுக் கொள்வனவுகள் என்பதுடன், இவை கடல்கடந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கூறுவிலைகளைக் கோரிய பின்னரே கொள்வனவு செய்யப்பட வேண்டும். சில அத்தகைய கொள்வனவுகள் பின்வரும் காரணங்களினால் ஆரம்பிக்க முடியாமலிருந்தது.

- விவரக்கூற்றுக்களின் தயாரிப்பில் தாமதங்கள்.
- விநியோகஸ்தர்களை ஆராய்வதில் கஷ்டங்கள்.
- உறுப்பினர்களின் வேறு அர்ப்பணிப்புக்களின் காரணமாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களினதும் மற்றும் கொள்வனவுக் குழுக்களினதும் அவசியமான சேவைகளைப் பெறுவதில் நடைமுறையிலான கஷ்டங்கள்.

மேலும், சந்தையில் பற்றாக்குறையிலான பண்டங்களாகவும், உயர் மதிப்பைக் கொண்டவையாகவும் விளங்குகின்ற ஆய்வுகூடச் சாதனங்களைக் கொள்வனவு செய்வதில் அதிகளவு விழிப்பாக இருக்கவேண்டும்.

எனினும், 2016இல் திட்டமிடப்பட்ட பின்வரும் சாதனங்கள் 2017ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டன.

| **சாதனங்களின் பெயர்** | **ஆகுசெலவு (ரூ.மில்.)** |
|---|---|
| 1) வீச்சு நுணுக்குக்காட்டி | 1.0 |

2) வெடிப்பு அறை 2.0

3) ஈரப்பதன் அறை 1.5

4) மோட்டார் கலப்பான் 0.6

**(ஆ)** ஆய்வுகூடச் சாதனங்கள் உயர் மதிப்பிலானவை என்பதனால், அவற்றின் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக விளங்கவேண்டும். எனவே, விவரக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் நவீன தொழில்நுட்பங்களையும் மற்றும் சாதனங்களின் பயனுள்ள ஆயுளையும் கரிசனைக்கெடுத்து அதிகளவு விழிப்புடன் இருக்கவேண்டும். எனவே, விடயம் குறித்து முழு அறிவைக்கொண்டுள்ள அலுவலர்களினால் விவரக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், முழுமைப்படுத்துவதற்கு கணிசமானளவு நேரம் எடுக்கும்.

விளக்கமளிக்கப்பட்டுள்ளவாறு, அத்தகைய தாமதங்களுக்கு மேலே உள்ளவையே பிரதான காரணங்களாகும்.

**(இ)** மேலே (அ) மற்றும் (ஆ) ஆகியவற்றில் விளக்கமளிக்கப்பட்டுள்ளவாறு அவசரமான தேவைப்பாடுகளைக் கரிசனைக்கெடுத்து ஆய்வுகூடச் சாதனங்களின் கொள்வனவுகளைச் செய்வது மிகவும் கஷ்டமானதாகும். எனினும், 2016இல் திட்டமிடப்பட்டதில் பின்வரும் கொள்வனவுகள் 2017 செப்ரெம்பர் வரை முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.

| சாதனங்களின் பெயர் | முழுமைப்படுத்தப்பட்ட திகதி |
|---|---|
| 1) தலைக்கவச சோதித்தல் சாதனம் | 27.09.2017 |
| 2) நெய்யரி சான்றளிப்பு முறைமை | 18.09.2017 |
| 3) இலத்திரனியல் திரள் ஒப்பீட்டு மானி | 17.07.2017 |

## 5.2 வரவு-செலவுத்திட்டக் கட்டுப்பாடு

பொறுப்பிலுள்ள சம்பந்தப்பட்ட பணிப்பாளர்களுடன் நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்ட பின்னரும் அத்துடன் புத்திசாலித்தனமான தன்மையொன்றில் கைத்தொழிலினதும், பொருளாதாரத்தினதும் போக்குகளைக் கரிசனைக்கெடுத்த பின்னருமே நிறுவனத்தின் வருடாந்த வரவு-செலவுத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. கைத்தொழிலினதும், பொருளாதாரத்தினதும் போக்குகள் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாகும். ஆனால், சகல அத்தகைய தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

எனவே, மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டம் பயனுறுதிவாய்ந்த முகாமைத்துவக் கருவியொன்றாக பயன்படுத்தப்படவில்லை என்ற கூற்றுடன் இ.க.நி. உடன்படவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு

### (அ) நிதிக் கட்டுப்பாடு

i. வங்கி இணக்கப்பாடுகள் உரியவாறு தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ளன.

ii. நேரகாலத்திற்கு முற்பணங்களின் இணக்கத்தினைக் கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

iii. அவ்வப்பொழுது முற்பணப் பதிவேட்டினைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு**

i.,ii. தற்போதைய பொருட்பட்டியல் முறைமை காலம் கடந்ததென்றும், குறைந்தபட்ச திரிபுபடுத்தல் மட்டுமே மேற்கொள்ளப்பட முடியும் என்றும் அவதானிக்கப்பட்டது. ERP முறைமையின் அமுலாக்கத்துடன், விரிவான பொருட்பட்டியல் பதிவேடுகளைப் பேணுவதென எதிர்பார்க்கப்படுகின்றது.

iii. GRN இலக்கத்துடனும், நேரகாலத்திற்கு நேரங்களின் பற்றுவரவுத் திகதியுடனும் பொருட்பட்டியல் பதிவேடுகளைப் புதுப்பிக்குமாறு பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

iv. பற்றுவரவின் திகதியை உள்ளடக்கும் இரசாயனங்கள் மீது சுட்டித்துண்டொன்றை ஒட்டுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

v. களஞ்சியத்திற்கு மீளளிக்கப்படும் விடயங்களுக்கு பதிவேடொன்று பராமரிக்கப்படும்.

vi. காலாவதியாகும் திகதியை அடையாளங்காண்பதற்கு இரசாயனங்கள் சுட்டித்துண்டிடப்பட்டுள்ளதுடன், புறம்பாகவும் வைக்கப்பட்டுள்ளன.

vii. சேவைப்படுத்த முடியாத விடயங்களுக்கு பதிவேடொன்று பேணப்படும்.

viii. வருடாந்தம் பொருட்பட்டியல் பதிவேடுகளைச் சமநிலைப்படுத்துவதற்கு பிரிவுகள் கோரப்பட்டுள்ளன.

**(இ) பணியாளர் முகாமைத்துவம்**

பதில் லீவைப் பயன்படுத்துவதற்கு முன்கூட்டிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்பதுடன், விதியொன்றாக இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எனினும், அவசரமான உத்தியோகபூர்வ தேவைப்பாடுகளுக்காக முன்கூட்டிய அங்கீகாரமின்றி சேவைகள் பெறப்பட்ட தருணங்களும் இருந்துள்ளன.

**(ஈ) தொழிற்பாட்டுக் கட்டுப்பாடு**

i. விவரப்பட்டியலிடுவதில் தாமதங்கள் உள்ளனவா என்பதை அறிவதற்கு மதிப்பாய்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

ii. தற்போதைய கொள்கைகளின் பிரகாரம், கடன் கொடுக்கல் வாங்கல்கள் குறைந்தபட்சமாக்கப்பட்டுள்ளன. எனினும், பொது பேரேட்டுடன் கடன் தருனர்கள் மற்றும் கடன் வழங்குனர்கள் துணைப் பேரேடுகளை மீளிணக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

iii. தற்போது சம்பளப் பொழிப்புகள் சரிபார்க்கப்பட்டு, தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ளன.

iv. சம்பளங்கள் நேரடியாக ஊழியர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்படுகின்றன. கைச்சாத்திடுமாறு சகல ஊழியர்களும் கேட்கப்பட்ட போதிலும், சில ஊழியர்கள் உடன்படவில்லை.

v. அனுமதிச்சீட்டு உடமையாளர்களின் தகவல் தற்போது புதுப்பிக்கப்படுகின்றது.

**(உ) நிலையான சொத்துக்களின் கட்டுப்பாடு**

i. சொத்து அடையாளங்காட்டும் குறியீட்டில் பிரிவைக் குறிப்பிடும் புதுமையான சொத்து குறியீட்டு இலக்கமொன்றைப் பேணுமாறு பிரிவுத் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ii. நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை மீளிணக்குவதற்கும், அத்துடன் நிலையான சொத்துக்கள் தொடர்பில் பொருட்பட்டியல் பதிவேட்டினைக் கணனிமயப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஊ) வாகனக் கட்டுப்பாடு**

i. நிறுவனத்தின் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு வாகனத்திற்கும் வாகனக் கோவைகள் பேணப்படுவதுடன், வாகனங்களின் சகல விபரங்களும் அதில் உள்ளடக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு வாகனத்திற்கும் பொது 267 மற்றும் சம்பவப் புத்தகம் ஆகியன பேணப்படுகின்றன.

உதிரிப்பாகங்களின் பதிலீடும் மற்றும் பழுதுபார்த்தல்களும் சம்பந்தப்பட்ட முகாமைத்துவ உதவியாளரினால் பதிவுசெய்யப்பட்டு கைச்சாத்திடப்படுகின்றது. பெயரைக் குறிப்பிடாதது தற்போது சீரமைக்கப்பட்டுள்ளது.

ii. வாகனங்களின் கருவிகளும் மற்றும் துணைக் கருவிகளும் சம்பவப் புத்தகங்களில் பதிவுசெய்யப்படவில்லை என்பதுடன், அவை தற்போது புதுப்பிக்கப்படுகின்றன. கிலோ மீற்றர்ரீதியாக டயர்களை மாற்றுதல் சம்பவப் புத்தகத்தில் பதிவுசெய்யப்படுகின்றது.

iii. சம்பவப் புத்தகங்களின் சரியான பந்திகளின் கீழ் வகைப்படுத்தல் தகவல் தற்போது குறிப்பிடப்படுகின்றது.

iv. ஏதாவது குறைபாடுகள் உள்ளனவா என்பதைச் சீரமைப்பதற்காக சம்பவப் புத்தகங்களிலும் மற்றும் பொது பேரேட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைச் சரிபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

v. சகல வாகனங்களின் எரிபொருள் பாவனையைச் சரிபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
எச்.எம்.பீ.சி.ஹேரத்
**தலைவர்**
**இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்**